தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒக்டோபர் 1999

# எரிமலை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வாழ்க தமிழ். வெல்க தமிழீழம். ஓங்கட்டும் புலிகளின் வாள். வீழட்டும் சிங்களத் தலைகள். மலரட்டும் தமிழீழம். காக்கட்டும் நம் தமிழ் தாய்மார்களின் மானம். பொங்கட்டும் புதுப் பொலிவி. வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழீழத்தின் ஜனாதிபதியாக பதவியேற்கும் நாள் வெகுதூரம் இல்லை. உலகத் தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம். தமிழீழம் சுதந்திரம் பெறும் நன்னாள் உலகத் தமிழர்களின் பொன்னாள். வெற்றி நமதே. வாழ்க.

அன்புள்ள எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு அற்புதமான வணக்கங்கள். எனக்கு எரிமலை தொடர்ந்து தவறாமல் கிடைக்கின்றது. 1999 –ன் நாட்காட்டியும் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. ஒவ்வொரு இதழையும் படிக்கும் போதும் உணர்ச்சிப் பிளம்பாகிறேன். எனக்கு வயது 60. ஆனாலும் போர் முனைக்குச் செல்ல துடிக்கிறது மனம். அங்கு நடக்கும் படுகொலைகள் தாய்மார்களின் அவலங்கள் என்னை வேதனைக்குள்ளாக்குகிறது. துடிக்கிறது கைகள். ஆனாலும் என்னால் எதுவும் செய்யமுடியவில்லையே. என்ன செய்வது. நான் இருப்பது இந்தியாவில். அதுவும் ஏறக்குறைய கொழும்பு போன்ற நிலையிலுள்ள கர்நாடக மாநிலம் பெங்களூரில் வாய்விட்டு பேசவும் முடியாது. இங்கு அது போன்ற நிலை. என்னால் முடிந்தது தமிழர்களிடம் அங்குள்ள நிலமையை ஓரளவுக்கு விளக்குவது ஒன்றுதான். ஐயா நான் நிதி உதவி செய்ய நினைக்கிறேன். வழி இருந்தால் சொல்லுங்கள். இத்துடன் முடிக்கின்றேன்.


நன்றி.
வணக்கம்

அன்புடன்
மு. பொன்னம்பலம்
பெங்களூர்

★★★

**தமிழ் ஈழம் மலர்ந்ததுவே!**

**எந்தன் ஏக்கங்கள்**
**நீங்கினவே!**
**ஈழத் தமிழ்நாடு**




## அக்கரைப் பூக்கள்

மலர்ந்ததுவே!

நாடாண்ட தமிழ் மாந்தர்
நாடெங்கும் ஏதிலியாய்
ஆகினது பழங்கதையே! –
இந்த
ஆழி சூழ் உலகத்தில் தேசிய
விடுதலைப்போர்
ஆதிமுதல் வென்றே
உள்ளன!

சிங்களன் ஆரியன், வேற்றின
வஞ்சகன்
எவனுமில்லா ஈழத்தை –
தமிழ்
வீரத் தலைமகன் வீறுகொள்
வேல்மகன்
வீற்று அரசாள் வதைப்பார்

சாதித்தீ தீண்டாத மதமாயை
மூடாத
தூய தமிழர் ஈழத்தை
படைக்க
உயிரையும், உடலையும்,
பொருளையும் ஈந்திட
தூயோரை வணங்குவோம்
நாம்

அருமைமிகு ஆசிரியர் அவர்களுக்கு !வணக்கம்.

ஈழப்போரின் செய்திகளையும் புலிகளின் தீரமிக்கப் போராற்றலையும் கரும்புலிகள் என்னும் தூய ஈகிகளையும் தமிழ் ஈழ விடுதலைக்கு உலக நாடுகளின் ஒத்திசைவையும் ஆக்கப் பணிகளையும் சிறப்பாக வெளிப்படுத்தும் தங்களின் சீரிய செயலாற்றலைக் கண்டு பெருமிதம் கொள்ளுகிறேன்.

ஒரு வேண்டுகோள்

நமது ‘எரிமலை’யில் சிங்களவன் எவனுடையவும் எவளுடையவும் – சந்திரிகா என்னும் பிணந்திண்ணிக் கழுகினுடையவும் ஒளிப்படங்களை அச்சிடவேண்டாம்.

அங்கயர்கள் குறித்த செய்திகளை மட்டுமே அச்சிடுக!

அருசுவை உணவருகே அருவெறுப்புக்குரிய அசுத்தங்களா?

எனது தமிழீழம் மலர்ந்தது! எனும் பாடலை அச்சியற்றிட வேண்டுகிறேன். திங்கள் தோறும் எரிமலை எதிர்நோக்குகின்றேன்!

வாழிய ஈழப் போர் மறவர்!
மலர்க தமிழ் ஈழம்!

அன்புடன்
அமலன்

★★★

அன்புள்ள ஆசிரியர் குழுவிற்கு,

எரிமலை இதழ் சிறப்புற வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சி.

எரிமலையை தமிழர்களின் தேசிய சஞ்சிகையாக நினைத்து படிக்கும் போது என்மனம் அடையும் திருப்திக்கு எல்லையில்லை. உலகில் எந்தவொரு தமிழ் பத்திரிகையோ சஞ்சிகையோ செய்யமுடியாத காரியத்தை எரிமலை செய்கிறதே. தமிழர்களின் தேசியத்தை மீள வலியுறுத்தும் கடமையை ஈழத்தமிழன் முன்னின்று செய்வதையிட்டு மகிழ்வடைகிறேன். எம்மால் (ஏழுகோடி மக்களுள் ஒருவனாய்) இந்தப் புனிதக் கடமையில் பங்கெடுத்துக்கொள்ள முடியாத கவலை. இந்தப்புனிதக் கடமையில் ஈடுபட்டுள்ள எரிமலைக்கு எனது ஆயிரம் கோடி வணக்கங்கள்.

நன்றி.
வணக்கம்.

சு. மணியம்.
கோவை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...


சந்திரிகாவின் தீர்வுப்பொதி பக்கம்– 8




இரு சமர்களின் பெரும் சேதம் பக்கம்– 04



இலக்குத்தேடும் இராணுவமும்
இடையறாத தோல்விகளும் பக்கம்– 12



ஆபிரிக்கப் பெண்களும்
போராட்டமும் பக்கம்– 44



- ★ நாம் தலையை நிமிர்த்தாமலே தலைவிதியை நோகலாம்? ........ பக்கம் - 20
- ★ உண்மை வரலாறுகள் என்றும் உறங்கப்போவதில்லை ........ பக்கம் - 28
- ★ தமிழீழப் பெண்களின் அறைகூவல் ........ பக்கம் - 30
- ★ நாளைய மனிதருக்காக நமது இலக்கிய பணி என்ன? ........ பக்கம் - 34
- ★ நேர்காணல் ........ பக்கம் - 36
- ★ சிறுகதை ........ பக்கம் - 40
- ★ சிறுகதை ........ பக்கம் - 46




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## தலைவரின் சிந்தனையில் இருந்து...




மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது.
ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கின்றது;
அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது.

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினெட்டாம் ஆண்டு
ஒக்டோபர்
1999

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# பொன்விழா இராணுவத்தின் போர்த்திட்டம்

சிங்கள இராணுவம் தன் பொன்விழாவை அயல்நாடுகளின் இராணுவ தளபதிகள் முன் கொண்டாடியது. அடுத்த ஆண்டிற்கான அதிகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் தங்குதடையற்ற போரிற்கான சந்திரிகாவின் சமிக்ஞை என்பவற்றுடன் பொன்விழா ஆண்டில் சிறீலங்காவின் பிரதான சக்தியாக இராணுவம் திகழ்கின்றது.

தமிழீழம் மீதான அடக்குமுறையே சிங்கள நாட்டின் தாரக மந்திரமாக திகழ்கையில் அவ் அடக்குமுறையின் பிரதான கருவியான இராணுவம், சிங்கள தேசத்தின் வலிமைமிகு சக்தியென்பதில் ஐயத்திற்கு இடமில்லை. இன்று தொடரும் கடும் போர் சிங்கள இராணுவ கட்டுமானத்தை உள்ளேயும் வெளியேயும் சிறுகச் சிறுகச் சிதைத்து வருவதை ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். களைப்படைந்த இராணுவம் என பல சர்வதேச ஏடுகள் விபரிக்கின்றன. ஓடிப்போவோரை நம்பிய ஒரே இராணுவம் என இந்தியன் எக்ஸ்பிரஸ் விபரிக்கின்றது.

தமிழர்களின் மீதான ஒடுக்குமுறையையே ஒரே கோட்பாடாகக் கொண்ட இவ் இராணுவம் இயல்பான வரலாற்றுப் போக்கை ஆராயக் கூடிய அரசியல் தலைமைகளால் வழிநடாத்தப்படுவதில்லை. மாறாக போரை எப்படியும் வெல்லலாம் என்ற வெறும் இனவாத - ஆதிக்க ஊகிப்புடன் தன்னை வீக்கமடைய வைத்து நிலப்பிடிப்பையும் இனப் படுகொலைகளையும் வலிமையின் அளவுகோளாக இது பார்க்கின்றது. ஐ.தே.க தலைமையிலான வழிநடாத்தலில் தென்தமிழீழத்தை முழுமையாக ஆக்கிரமித்து வடதமிழீழத்தின் மீது முற்றுகையை தொடுத்த இவ் இராணுவ பூதம் பின்னர் சந்திரிகாவின் கொடிய தலைமையில் முற்றுமுழுதான போரை வட தமிழீழம் மீது நடாத்துகின்றது. இவ்விரு அணுகுமுறைகளும் தமிழர்களை பலவீனப்படுத்தவில்லை.

இன்று தமிழர்களின் இராணுவம் தரை - கடல் போர்களில் வளர்ச்சி கண்டு ஒரு மரபுப்போரை நடாத்தும் வலுவை வெளிக்காட்டியுள்ளது. சிங்கள இராணுவத்திற்கு ஆட்பற்றாக்குறையையும் வழிகாட்டல் சந்தேகங்களையும் இது ஏற்படுத்தியது. வான்புலிகளின் அறிமுகம் போரை மற்றுமொரு மட்டத்திற்கு விரிவுபடுத்தி தமிழர்களை பலப்படுத்தி நம்பிக்கை கொள்ள வைத்துள்ளது. இன்று சிங்கள இராணுவம் வரலாற்றின் ஒரு தவிர்க்கமுடியாத தோல்வியை எதிர்கொள்ளவேண்டிய கட்டத்தில் நிற்கின்றது. இதனை தவிர்ப்பதற்கு அல்லது ஒத்திப்போடுவதற்கான முயற்சிகளாக உயர் தொழில்நுட்பத்தினை தனக்கு சாதகமாக்கும் முயற்சிகள் நடக்கின்றன. மரபுரீதியான தரை - கடல் போரினை உயர் தொழில்நுட்ப உதவியுடன் மூர்க்கப்படுத்தி புலிகளின் எழுச்சியை நசுக்கிவிடலாம் என்ற இயல்பான ஆதிக்க உணர்வில் சிங்களத் தலைமையும் இராணுவத் தலைமையும் அடுத்த ஆண்டில் பெரும் போருக்கு தயாராகுகின்றது. இதுவே பொன்விழா இராணுவத்தின் நோக்கம் என்பதை உணரமுடிகின்றது. இவ் உயர் தொழில்நுட்ப போரானது பெரும் இன அழிப்பையே ஏற்படுத்த வல்லது. இதனைத் தடுக்க அணிதிரளும் நாம், எமது உறவான தமிழகத்தையும் விழிப்புடனும் துடிப்புடனும் இருக்குமாறு கோருவோம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இரு சமர்களின் பெரும் சேதம்

## ரணகோசவும் வாட்டர் சேட்டும் கொடுத்த பாடம்

வன்னி சமர்க்களம் சிங்கள இராணுவ பலத்தினதும் உத்திகளினதும் புதைகுழியாகவே உருவாகி வருகின்றது. இதற்கு கடந்த மாதம் வன்னி மேற்கரங்கில் இடம் பெற்ற ரணகோசா 5 மீதான புலிகளின் இராணுவ நடவடிக்கைகளும் அம்பகாமம் பிரதேசத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளும் ஆதாரமாக அமைகின்றன.

பாரிய ஆட்பலத்துடனும் புதிய உத்திகளுடனும் நவீனரக ஆயுததளபாடங்களுடனும் இவ் நடவடிக்கையில் பங்கேற்ற 53–ம் 55–ம் 56–ம் படைப்பிரிவுகள் புலிகளின் இராணுவ உத்திகளுடன் கூடிய பதிலடி நடவடிக்கைகளினால் பெரும் சேதாரத்திற்கு உட்பட்டமையை இவ் இரு போர்களின் பொதுத்தன்மை எனலாம்.

அண்மையில் சிங்கள இராணுவ தலைமையில் தொடர்ச்சியாக பல மாற்றங்களை சிங்கள அரசு மேற்கொண்டது. இதன் ஒரு அம்சமாக சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வன்னிக்கான தளபதியாக செயற்பட்ட மேஜர் ஜெனரல் பலகெலவின் பொறுப்பிற்கு மேஜர் ஜெனரல் வசந்த பெரேரோ நியமிக்கப்பட்டார். இப் புதிய தளபதி முன்பு முல்லைத்தீவு முகாமின் தளபதியாக திகழ்ந்தவர். அமெரிக்க இராணுவ கல்லூரியில் பயிற்றப்பட்டவர் எனவும் சிங்களத்தின் உச்சபலமென மதிக்கப்படும் 53–ம் 55–ம் படைப்பிரிவுகளை திறம்பட வழிநடாத்தக் கூடியவர் எனவும் இவர் வர்ணிக்கப்பட்டார்.

இப் புதிய தளபதி தன் முதல் பாரிய போர் நடவடிக்கையாக ரணகோசா 5ஐ செப்டம்பர் 12–ம் திகதி ஆரம்பித்தார்.



இவ் நடவடிக்கை பற்றி சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் விபரிக்கையில் மங்களநேரம் எனக் கணிக்கப்பட்ட காலை 6.12 மணிக்கு 55–ம் படைப்பிரிவின் இரு பிரிகேட்டுக்கள் (551, 552) பெரியமடுவுக்கு தென்மேற்காக இருதிசைகளில் முன்னேறுமாறு பணிக்கப்பட்டு 553–ம் பிரிகேட் உதவிக்காக தயார் நிலையில் இருந்ததாகவும் கூறியுள்ளார். இதேவேளையில் 53–ம் பிரிவைச் சேர்ந்த ஏயார்மொபைல் யூனிட் மற்றும் 533—ம் பிரிகேட் என்பன பெரிய மடுவுக்கு வடகிழக்கிலிருந்து நகருமாறு பணிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இரு படையணிகளும் இரு



www.tamileelamarchive.com



ளோடு இருளாக நகர்ந்து புலிகளின் நிலைகளுக்கு 75 மீற்றர்கள் அண்மை வரை நகர்ந்தனர் என இராணுவம் கூறுகின்றது. ஆனால் இவ் நகர்வு களை புலிகள் அவதானித்தவாறு அமைதியாக இருந்ததாகவும் தமது பீரங்கிகளை அதற்கு ஏற்ப தயார் படுத்தி காத்திருந்ததாகவும் இக்பால் அத்தாஸ் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி கூறுகின்றார்.

இவ் இராணுவ நகர்வுகள் புலிக ளின் குறுகிய நேரத்திலான துல்லிய மான தாக்குதல் மூலம் முறியடிக்கப் பட்டதை எதிரிகளே பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

53–ம் படைப்பிரிவு காலை 9.30 மணிக்கும் 55–ம் படைப்பிரிவு காலை 11.30 மணிக்கும் தமது நகர்வை கைவிட்டு பின்வாங்கினர் என ஒப் புக்கொள்ளப்பட்டது. இவ் நடவடிக் கைகள் சிங்களத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்தியது. இராணுவ கணக்கு கள் 132 படையினரை குறுகிய நேரத் தில் புலிகள் அழித்ததாக கூறுகின் றது. 800 இற்கு மேற்பட்ட படை யினர் காயப்படுத்தப்பட்டதாக இரா ணுவ கணக்கில் தெரிவிக்கப்படுகின் றது. ஆயினும் உண்மையான சேத விபரம் மறைக்கப் பட்டுள்ளதை கொழும்பு சிங்கள ஏடுகளே ஒப்புக் கொண்டன.

புலிகளின் இப்பெரு வெற்றிக்கு காரணத்தை தேட முற்பட்ட இரா ணுவ ஆய்வாளர்களும் விமர்சகர்க ளும் பல்வேறு இராணுவ அரசியல் காரணங்களை சுட்டிக்காட்டியுள் ளனர்.

1. புலிகளின் பீரங்கிப் படையணி கள் நடாத்திய துல்லியமான தாக்கு தல்.

2. புலிகளின் முன்கூட்டிய தயா ரிப்புக்கள்

3. சிங்கள இராணுவத்தின் பிழை யான திட்டமிடல்

போன்ற காரணங்கள் விவாதிக் கப்பட்டன.

தமிழர்களின் தேசியத் தலைவர் வன்னி போர்க்களத்தில் திட்டமிட்ட முறையில் உருவாக்கிவரும் படைய ணிகள் ஒரு மரபுச் சமரை நடாத்தும் வலுவை ஈட்டிவருகின்றனர் என்ற உண்மை இப் பெருவெற்றி மூலம் புலப்படுத்தப்பட்டது. தமக்கு ஏற் பட்ட தோல்வி பற்றி விவாதித்த சிங்களத்தின் தேசிய பாதுகாப்புச் சபையில் சந்திரிகா எழுப்பிய கேள்வி களுக்குப் பதிலளித்த இராணுவத் தளபதி தமது சிறந்த படைவீரர்களை தாம் இப் போரில் இழந்துவிட்டதை ஒப்புக் கொண்டதாக தி ஐலண்ட் ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

போலியோ தடுப்பு ஊசிகளை ஏற்றுவதற்காக வழங்கப்பட்ட இரு நாள் 10–ம், 11–ம் திகதி போர் நிறுத் தத்தையொட்டி செய்தி வெளியிட்ட சந்திரிகா சமாதானத்தைப் பற்றிப் பேசினார். ஆனால் மறுநாள் அதி காலையே துருப்புக்கள் நகர முற்பட் டன. இதன் மூலம் சமாதானம் பற் றிய சந்திரிகாவின் கருணை மறுநாள் துருப்புக்கள் நகர்வதற்கான உரும றைப்பே என்பதை அவதானிகளால் புரியமுடிந்தது. மீண்டும் இம்மாதம் போலியோ தடுப்பூசிகளுக்கான போர் நிறுத்தத்திற்கு முன்தினம் இராணு வம் தன் அடுத்த நகர்வை ஆரம்பித்தது.

புலிகள் தமது கவனத்தை மேற்கு அரங்கிலேயே வைத்துள்ளனர் என்ற



www.tamileelamarchive.com



**முன்னேறிய இராணுவம் மீதும் முன்னேற முயன்ற இராணுவம் மீதும் புலிகள் எறிகணைகளாலும் பீரங்கிகளாலும் தாக்கி நூறுக்கு மேற்பட்ட படையினரைக் கொன்று 500-ற்கு மேற்பட்ட படையினரைக் காயப்படுத்தியுள்ளனர். இவ்விரு இராணுவ நடவடிக்கைகளும் சிறீலங்கா - தமிழீழப் போரின் தரைப்போர் வலிமை தமிழர்கள் சார்பாக திரும்புவதை சுட்டிநின்றது.**

பொது ஊகத்திலும் மழைகாலத்தில் புலிகள் பெரும் நடவடிக்கைகளை எதிர்பார்க்கமாட்டார்கள் என்ற ஊகத்திலும் இம்மாதம் 14—ம் திகதி காலை சிங்கள இராணுவம் தன் அடுத்த நடவடிக்கையை ஆரம்பித்தது. "வாட்டர் சேட்" என்ற பெயரிலான இன் நகர்வு அம்பகாமம் ஊடாக முன்னேறி கிளிநொச்சியை நோக்கி நடாத்தப்பட்டது.

இம்முறை 55—ம் பிரிவையும் 56—ம் பிரிவையும் இராணுவம் பயன்படுத்தியது. மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவின் அடுத்த நடவடிக்கையான இதனையும் விடுதலைப்புலிகள் பலத்த பதிலடித்தாக்குதல்கள் மூலம் சிதைத்தனர். முன்னைய ரணகோச 5 போன்று இங்கும் விடுதலைப்புலிகளின் பீரங்கிப் படைகளே இராணுவத்திற்குப் பெரும் சேதத்தை தந்தது என கொழும்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது. முன்னேறிய இராணுவம் மீதும் முன்னேற முயன்ற இராணுவம் மீதும் புலிகள் எறிகணைகளாலும் பீரங்கிகளாலும் தாக்கி நூறுக்கு மேற்பட்ட படையினரைக் கொன்று 500—ற்கு மேற்பட்ட படையினரைக் காயப்படுத்தியுள்ளனர். இவ்விரு இராணுவ நடவடிக்கைகளும் சிறீலங்கா — தமிழீழப் போரின் தரைப்போர் வலிமை தமிழர்கள் சார்பாக திரும்புவதை சுட்டிநின்றது. இவ் இராணுவ சாதக நிலைக்கான காரணங்கள் என்ன என ஆராய முற்பட்ட இந்திய ஆய்வாளர் "சோர்வடைந்த சிங்கள இராணுவத்தை எதிர்த்து கொள்கைப்பற்றுமிக்க எதிரி நிற்கின்றான்" என வர்ணித்துள்ளார். சிங்கள இராணுவம் தமது சோர்வுப் போக்குடன் சேதங்களால் அச்சமுற்ற சிங்கள மக்களிடமிருந்து ஆட் திரட்ட கடினப்படுவதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் வர்ணிக்கின்றது. சிங்களத்தின் உயர் இராணுவ அதிகாரிகள் கல்லூரியான சேர் ஜோன் கொத்தலாவல அக்கடமியில் அதிகாரிகள் பயிற்சியில் சேரும் மாணவர்கள் திறன் குறைந்தவர்களாக இருப்பதற்கு காரணம் போரில் ஏற்படும் உயர் உயிர்ச் சேதத்தினால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இராணுவத்திற்கு அனுப்பத் தயங்குவதே என பிரிகேடியர் காமினி கித்தாராட்சி செய்தியாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் போரை தொடர வேண்டும் என்ற சிங்கள பேரினவாத தேவைகளைப் பூர்த்திசெய்ய போரை உயர் தொழில்நுட்ப ஆற்றலுடன் தொடரலாம் என சிங்கள இராணுவ அரசியல் தலைமை நம்புகின்றது. தமது தளபதிகளை அமெரிக்க இராணுவக் கல்லூரிகளிலும் பிற உயர் தொழில்நுட்ப கல்லூரிகளிலும் கற்பித்த சிங்களம் தமது ஆயுத தளபாடங்களை நவீனமயப்படுத்த விளைகின்றது. தற்போது சந்திரிகா போரிற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்ததன் மூலமும் பேச்சுவார்த்தைகளை நிராகரித்ததன் மூலமும் இப் போரிற்கான சமிக்ஞையை வெளியிட்டுள்ளார்.

தமக்கு கிடைக்கும் தொழில்நுட்ப பலத்திற்கு அரசியல் பொறுமையும் நேரமும் தந்தால் தம்மால் புலிகளை வெல்லமுடியும் என இராணுவ உயர் மட்டம் கருதுகின்றது.

ஆயினும் வெறுமனே தொழில்நுட்பம் போரை வெல்லமுடியாது. மாறாக மக்களின் பங்குபற்றலுடன் வலுப்பெறும் புலிகளின் பலம், தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டல் என்பனவே போரின் வெற்றியைத் தீர்மானிக்கும்.

**நாதன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### விடுதலைக்கான திசையில்

# உயர்ந்த கரங்கள்



ஒன்றுபட்ட கருத்துக்குவிவும் ஒரே நேரத்தில் அனைவரும் ஒன்றுதிரள்வதும் மிகப்பெரிய வலுவையும் செயற்பாட்டில் அதிக விளைவையும் தரும். இன்று தமிழீழத்தில் இத்தகைய ஒரு எழுச்சியும் அணிதிரள்தலும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. 'மக்கள் அனைவரும் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்து எழுந்துள்ளார்கள். ஆக்கிரமிப்பிலிருந்து எமது தேசத்தை மீட்டெடுத்து விடுதலையை வென்றெடுக்க ஒவ்வொருவரும் ஆயுதப்பயிற்சி எடுக்கத் தொடங்கியுள்ளார்கள். இது ஒரு புரட்சிகரமான விழிப்பு நிலையே. இந்த விழிப்பு சாதாரணமானதல்ல. நான்கு நூற்றாண்டுகளாக தூங்கிக் கிடந்த ஈழத்தமிழினம் புத்துணர்ச்சியோடும் புதியவேகத்தோடும் போராட்டத்துணிந்துள்ளது. சுதந்திரமான வாழ்வுக்கான தேடலில் தன்னை முழுமையாக அது ஈடுபடுத்தியுள்ளது. இது நமது வரலாற்றில் மிக முக்கியமான ஒரு நிகழ்வு. நமது மனவுலகில் ஏற்பட்டுள்ள ஒரு புரட்சிகரத் திருப்பம்; எதிரியின் ஒடுக்குமுறை எமக்கு ஏற்படுத்திய மிகச் சிறந்த விளைவு. நமது சுதந்திர வாழ்வுக்கான புதிய தொடக்கம் இது.

சிங்களப் பேரினவாதத்தின் மிக மோசமான ஒடுக்குமுறை எமது போராட்டத்தின் வேகத்தையும் வலுவையும் அதிகரித்தது போலவே, இன்று மக்களின் தற்காப்பு – யுத்தத்துக்கான அணிதிரள்தலையும் அது நிர்ப்பந்தித்துள்ளது. வரலாறு எத்தனையோ தடவை பாடங்களைக் கற்றுத்தருகின்றபோதும் ஒடுக்குமுறையாளர்களும் ஆக்கிரமிப்பாளர்களும் எதையும் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக மேலும் மேலும் தமது ஒடுக்குமுறையையும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையுமே இன்னும் அழுத்தத்துடன் மக்களின் மேல் கீழ்த்தரமான முறையில் பிரயோகிப்பார்கள். அமுக்க அமுக்க வெடிப்பு நிகழ்வது போல, அவ்வப்போது இந்த அழுத்தங்களை உடைத்து மக்கள் எழுச்சிகொள்வார்கள். இது உலகம் முழுவதும், வரலாறு முழுவதும் நிகழ்ந்துவரும் ஒரு பேருண்மை. இதுவே இங்கும் – எமது தேசத்திலும் இப்போது நிகழ்ந்திருக்கிறது.

நமது தேசம் முழுவதுமிருந்த விடுதலை உணர்வாளர்கள் ஒன்று திரண்டுள்ளார்கள். எதிரியின் ஆக்கிரமிப்புப் பிடியில் சிக்கிக்கொள்ளாமல், அவனது சூழ்ச்சிகளிலும் தந்திரோபாயங்களிலும் வீழ்ந்துவிடாமல் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேறி வன்னியில் அவர்கள் மையங்கொண்டுள்ளார்கள். சுதந்திரதாகம் கொண்டோரின் மன உணர்வு எப்போதும் இப்படித்தான் தொழிற்படும். விடுதலைக்காகப் போராடும் சக்தியுடன் அது சேர்ந்துகொள்ளும். இத்தகைய ஒரு சேருதல்தான் இங்கேயும் நிகழ்ந்திருக்கிறது. போராடும் களத்தில், போராடிக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மக்கள் ஒன்றிணைந்து முழுமையாக அணிதிரண்டுள்ளமையே இது.

எதிரி இந்த எழுச்சியை அடக்கிவிடுவதற்காக இன்னும் மக்களின் மீது தனது ஒடுக்குமுறையை அதிகமாகப் பிரயோகிக்க முனைவான். ஆனால், ஒன்றுபட்டெழுந்த மக்களிடம் மூண்டுள்ள விடுதலைத்தீயின் முன்னாள் அவையெல்லாம் பொசுங்கிப்போய்விடும். எமது மக்கள் மீண்டும் இந்த வரலாற்று உண்மையை மெய்ப்பிக்கப் போகிறார்கள். நமது விடுதலைக்கான திசையில் உயர்ந்துவிட்டன கரங்கள். அவை வரலாற்றைப் படைக்கும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## வெடிகுண்டுப் புரளியைக் கிளப்பும் அநாதரவான வெற்றுப்பொதிபோல....

# சந்திரிகாவின் தீர்வுப்பொதி

ஸ்ரீலங்கா ஜனாதிபதி நகைச்சுவை ததும்பப் பேசுவதில் வல்லவரோ என்று நினைக்கத் தோன்றுமளவில் அவரது பேச்சுக்கள் சிரிப்பை மூட்டுவனவாகவே இருக்கின்றன. அவரது சகோதரனும் எதிர்க்கட்சியில் அங்கம் வகிப்பவருமான அநுரா பண்டாரநாயக்கா குறிப்பிடுவதுபோல, அவர் நிர்வாகத் திறமையற்றவர், அரசியல் அனுபவம் அற்றவர் என்பதால் ஏற்படும் தடுமாற்றங்களோ அல்லது, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோறல ஒருசமயம் குறிப்பிட்டிருப்பது போல, கிட்லரின் பிரச்சார மந்திரி கோயபல்ஸ்சை மிஞ்சியவராக இருப்பாரோ தெரியவில்லை. அவரது பேச்சுக்கள் நகைச்சுவைப் பிதற்றல்களாகவும், பொய்யின் வார்ப்புக்களாகவுமே தெரிகின்றன.

சந்திரிகா குமாரதுங்கா, பிரதமராகவோ ஜனாதிபதியாகவோ ஆவதற்கு முன்னாலேயே, இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை உண்டெனஐயத்திற்கு இடமின்றி உணர்ந்து கொண்டவர்.

இனப்பிரச்சினையில்லை பயங்கரவாதப் பிரச்சினையே உண்டென்ற, முன்னாள் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்காவின் பேச்சை, பிதற்றல் என வர்ணித்தவர். தீர்க்கப்படவேண்டிய இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியவர். இனப்பிரச்சினைக்கான தீர்வு தன்னிடம் உண்டு என்று கூறியே அன்று ஆட்சிபீடம் ஏறியவர். நீலன் திருச்செல்வம் பேராசியர் பீரிஸ் ஆகியோர் தம்மூளையைக் கசக்கிப் பிழிந்து, உழைப்பைச் சிந்தி, கடைந்தெடுத்துக் கொடுத்த சந்திரிகாவின் தீர்வுப்பொதி, கடந்த ஐந்து ஆண்டுகாலமாக, படாதபாடு படுகின்றது. அப்பொதிக்குள் என்ன இருக்கின்றது என்று தெரியாமலே ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் ஆளாளுக்கு இழுபட்டவண்ணம் இருக்கின்றனர்.

இதை எல்லாம் வேடிக்கை பார்த்தபடி, தன் ஆட்சிக்காலத்தின் ஐந்தாண்டு காலத்தை ஓட்டியதில் சந்திரிகாவிற்கு வெற்றியே. இதனை மேற்குலகில் குறிப்பிட்ட வட்டாரங்களை கடந்த காலத்தில் நம்பவைத்ததில் சந்திரிகா பெருவெற்றியையே பெற்றிருக்கின்றார்.

## பார்த்து ஏமாந்தோர் பரிதாபத்திற்குரியோர்..!

இப்பொழுதுதான், பொதியின் சூட்சுமத்தை சந்திரிகா அவிழ்த்திருக்கின்றார். அதற்குள் ஒன்றுமே இல்லை என்பதை தானே போட்டு உடைத்திருக்கின்றார்.

அண்மையில், அவரது கணவரான விஜயகுமாரதுங்காவின் ஞாபகார்த்

தன் ஆட்சிக்காலத்தின் ஐந்தாண்டு காலத்தை ஓட்டியதில் சந்திரிகாவிற்கு வெற்றியே. இதனை மேற்குலகில் குறிப்பிட்ட வட்டாரங்களை கடந்த காலத்தில் நம்பவைத்ததில் சந்திரிகா பெருவெற்றியையே பெற்றிருக்கின்றார். இப்பொழுதுதான், பொதியின் சூட்சுமத்தை சந்திரிகா அவிழ்த்திருக்கின்றார். அதற்குள் ஒன்றுமே இல்லை என்பதை தானே போட்டு உடைத்திருக்கின்றார்.



www.tamileelamarchive.com

அதாவது அவரது கூற்றுப்படி, கடந்த ஐந்து வருடங்களின் பின், தற்போதுதான் ஒருவாறு பிரச்சினையை இனங்கண்டுள்ளார் என அறியமுடிகின்றது. அதிலும் முழுமையாக அல்ல ஓரளவுதான். ஆக, ஆயிரத்தித் தொளாயிரத்து தொன்னூற்றைந்தாம் ஆண்டு அவரிடம் இருந்ததாக சொல்லப்பட்ட தீர்வுப்பொதி என்பது, வெடிகுண்டுப் புரளியைக் கிளப்பும், அநாதரவான வெற்றுப்பார்சலாகவே கொள்ளப்படவேண்டியுள்ளது

தமாக வைத்தியசாலை ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்த கருத்து, தீர்வுப் பொதி என்பது வெற்றுப்பார்சல் என்பது வெளிப்பட்டுள்ளது.

சீதுவையில் நடந்த இந்த விழாவில் சந்திரிகா பேசுகையில்,

"எமது நாட்டில் யுத்தம் தலைதூக்கி இனங்களுக்கிடையே விரிசல்கள் அதிகரித்துள்ளன. இதனைத் தீர்க்க எனது ஐந்துவருட ஆட்சியில் பாடுபட்டேன். தற்போது பிரச்சினைகளை ஓரளவு இனம் கண்டுள்ளோம். யுத்தத்தை நிறுத்தி, சமாதானத்தை கட்டியெழுப்பவும், குறிப்பாக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்க்கவும் நடவடிக்கை எடுப்பேன்" இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அதாவது அவரது கூற்றுப்படி, கடந்த ஐந்து வருடங்களின் பின், தற்போதுதான் ஒருவாறு பிரச்சினையை இனங்கண்டுள்ளார் என அறியமுடிகின்றது. அதிலும் முழுமையாக அல்ல ஓரளவுதான். ஆக, ஆயிரத்தித் தொளாயிரத்து தொன்னூற்றைந்தாம் ஆண்டு அவரிடம் இருந்ததாக சொல்லப்பட்ட தீர்வுப் பொதி என்பது, வெடிகுண்டுப் புரளியைக் கிளப்பும், அநாதரவான வெற்றுப்பார்சலாகவே கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இந்த வெற்றுப் பார்சலை வைத்துத்தான் லக்ஸ்மன் கதிர்காமரில்






www.tamileelamarchive.com

இருந்து பேராசிரியர் பீரிஸ் வரை காலக்குதிரையை லாவகமாக ஓட்டியிருக்கின்றனர்.

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் தமிழ்க் குழுக்களும், இந்தப் பொதியேகதியாக கட்டியழுதன. இதில் வேடிக்கை என்னவென்றால், இதற்குள் என்ன இருக்கிறதென்றே அறியாமல், அதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டு சமாதானத்தை காண முன்வரவேண்டும் என, வலியுறுத்தியும் மேலைநாடுகளும் இருக்கின்றன.

பிரச்சினையை தற்போதுதான் சந்திரிகா அரசு ஓரளவு இனங்கண்டிருப்பதால், தீர்வுத் திட்டம் முன்னரே பிறந்திருக்கச் சாத்தியமில்லை. சரி, அதுதான் ஒருபுறத்தில் இருக்க, யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை காணுவேன் என்ற அவரது கூற்றும் அப்பட்டமான பொய் என்பதும் வெளிப்படையானது. அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற இருக்கின்ற நிலையில், ஆட்சிக் கதிரையின் நுனிப்பகுதி வரைக்கும் வந்தாகிவிட்டது. அப்படியாயின் எப்போது பிரச்சினையைத் தீர்க்கப்போகின்றார்? என்ற கேள்வியை விடுத்து, அடுத்த ஐந்தாண்டுகளையும் அவரே ஆளச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் சமாதானத்திற்கு சாத்தியம் இல்லை என்றே கொள்ளப்படவேண்டியுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டு சமாதானத்திற்குப் பதிலாக யுத்தத்தை முடுக்கிவிடுவதென்று, சிறீலங்கா அரசு முடிவு செய்துவிட்டது. அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவீனத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை கடந்த ஆண்டுகளை விட அதிகப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செலவீனம் மொத்த பட்ஜெட்டின் 6.6 வீதமாக அதிகரித்துள்ளது. புதிய நவீனரக போர்த்தளபாடங்களுக்கு கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தும் முனைப்பும் தென்படுகின்றது. இந்நிலையில், சந்திரிகா அம்மையாரின் சமாதானம் குறித்த எதிர்கால நம்பிக்கைகளும் அப்பட்டமான பொய் என்பது புலப்படுகின்றது.

அண்மையில் ஒரு முக்கியமான நிகழ்வு நடந்திருக்கின்றது. தமிழ் மக்கள் சமமாக நடத்தப்படப்போகின்றார்கள், இனமத மொழி பால் வேறுபாடின்றி, அனைவரும் சமமாக நடத்தப்போகின்றார்கள் என்று, அண்மைக்காலமாக பிரச்சாரம் செய்த சிறீலங்கா அரசு, சமவாய்ப்புச்சட்டம் என்ற ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்போவதாக அறிவித்தது. இது அப்படியொன்றும் முக்கியமானதல்ல. தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து கொடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதுபோன்றுதான் இதுவும். தமிழும் ஆட்சிமொழியென்று, அன்றுதொடக்கம் கூறிவந்தாலும் தமிழ்மொழிக்கும், தமிழனுக்கும் சிறீலங்கா அரசு எந்த மரியாதையைக் கொடுத்துவருகின்றது என்பதைத் தமிழர்கள் அநுபவபூர்வமாக நன்கு அறிவர். அதுபோன்ற ஒரு கண்காட்சிச் சட்டமே, இந்த சமவாய்ப்புச் சட்டம். இதனை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து விவாதிக்கக்கூட முடியாதபடி, பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்பு கடுமையடைந்தது. பாராளுமன்றத்தில் சமவாய்ப்புச் சட்டத்தைக்கூட ஒப்பேற்ற முடியாத சந்திரிகா அரசு, இனப்பிரச்சினைத் தீர்வு என்ற யானையை கட்டியாளப்போகின்றதாம். நல்ல பூச்சுற்றல்.

**சுப்பு**

> பாராளுமன்றத்தில் சமவாய்ப்புச் சட்டத்தைக்கூட ஒப்பேற்ற முடியாத சந்திரிகா அரசு, இனப்பிரச்சினைத் தீர்வு என்ற யானையை கட்டியாளப்போகின்றதாம். நல்ல பூச்சுற்றல்.



**தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்...**

நான் உயிருக்குயிராக நேசித்த தோழர்கள், என்னோடு தோளோடு தோள்நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழும்போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும்; ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் உரமூட்டியிருக்கின்றன.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

புவனசிங்காரன்

# குருதி வழியும் தாமரை

பனை வெளிகளுள்
மீண்டும் புகவுள்ளேன்
காகங்கள் அங்கு
இப்போதும் இருக்கும்
நாங்கள் ஓடித்திரிந்த வீதிகளும்
இன்னமும் அங்கேயேதான்.
மீண்டும்
முதலடிகளை நான் அங்கு பதிக்கையில்
வெள்ளைத் தாமரை தந்து
வரவேற்கப்படலாம்
ஆவலுடன்
காலணி கழற்றி
என் மண்ணைத் துழாவுவேனோ
குனிந்து
முத்தமிடுவேனோ...?
இவை நிகழ வாய்ப்பில்லை
என் செய்கை
வரவேற்பாளனை அச்சமூட்டலாம்
நான் இறந்து போகலாம்
ஆதலால்
எதுவும் நிகழ வாய்ப்பில்லை
ஆனால்
ஒற்றை வெண்தாமரை தந்து
அவர்கள்
என்னை வரவேற்பார்கள்

எங்களுடலில் வடிந்த நிணம்
அதில் மணக்கும்.



# இன்றைய நாள்

இது இரவு நேரம்
விடியலுக்கு இன்னும்
அதிக நேரம் இல்லை.
உறங்கும் தெருக்களில்
தனியனாய் நடக்கிறேன்
பேய்வெளியாய்
விரிந்து கிடக்கிறது ஊர்
சுவர்களுடன்
ஒட்டி ஒட்டிப் பதுங்கி நடப்பதில்
ஒரு உறுத்தல்.
என்ன அவமானமிது?
இனியும் தாமதிக்க முடியாது.
கிழக்கில் வெளிக்குமுன்
எல்லை தாண்டவேண்டும்
தேவையானவை மனனமாகிவிட்டன
நாளைய இரவிலும்
என் சொந்த ஊருக்குள் நுழைந்து
பதுங்கிப் பதுங்கி நடக்கவேண்டும்
அவமானந்தான்
ஆனாலும்,
என் பணி இதுதான்
நடப்பேன்
எமக்கொரு விடியல் நிரந்தரமாகும் வரை.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலக்குத்தேடும் இராணுவமும் இடையறாத தோல்விகளும்

இராணுவம் கண்டி வீதியை ஆக்கிரமிப்பதன் மூலம் தமிழர் மீதான இராணுவ மேலாதிக்கத்தை சிங்கள தேசத்தில் காட்டி தன் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் நிலைநிறுத்திவிடத் துடித்த சந்திரிகா அரசாங்கத்திற்கு, அது அபத்தமான சிந்தனை என்பதை புலிகள் கற்பித்தனர்.

தன் ஆட்சிக் காலத்தை பூர்த்தி செய்யும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், அடுத்து வரும் தேர்தலில் தன் ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்ள ஒரு இராணுவ வெற்றியே ஆதாரம் என்பதை ஆழமாக உணர்ந்துள்ளது.




காத்திருந்த வெற்றிச் செய்திகள் கைமீறிப் போனபின், தன் வல்லமைக்குட்பட்டதெனக் கருதி, 'மன்னார் – பூனகரி வீதியூடாக யாழ் பாதை திறப்பு' என்பதை தெரிவு செய்து படையை இறக்கிவிட்டிருக்கின்றது அரசு.

தேர்தல் காலம் நெருங்கிவிட்டதால் வெற்றிச் செய்திக்கான தேவைக் காலமும் நெருங்கிவிட்டிருக்கின்றது. வெற்றியை பெற்றுக்கொடுப்பதற்காக, தேவையான படைகளும், படை ஆயுதங்களும், அதிகாரமும் கூட இராணுவத் தரப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், இராணுவ கட்டளைப்பீடமும், படைகளும் இப்புதிய இலக்கோடு நடவடிக்கையில் இறங்கிவிட்டன. அதன் அடிப்படைத் திட்டம் இது தான்:

யாழ் குடாவைத் தளமாகக் கொண்டு, புலிகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி விட்டகன்ற பூநகரியை மீளப்பிடிப்பது. அதே நேரம் ஆக்கிரமிக்கப்பட்ட மன்னாரை தளமாகக்



www.tamileelamarchive.com

கொண்டு, பள்ளமடுவைக் கைப்பற்றுவது. இவ்விரு பிரதேசங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு இவற்றை இரு சமர் முனைகளாகக் கொண்டு முன்னேறிப் பாதையை இணைப்பது என்பதுவே.

இவ்விரு சமர்முனைகளையும் கைப்பற்றுவது இந் நடவடிக்கைக்கு அடிப்படையானது. இதன் அடிப்படையிலேயே 'சுழல்காற்று',"ரணகோஷ' – 4 இரண்டாம் கட்டம்" என்ற நடவடிக்கைகள் பெரும் எடுப்பில் செய்யப்பட்டன. ஆயினும் அவை இலக்கை அடையாத நடவடிக்கைகளாக தோல்வியடைந்தன.

10.06.99 அன்று பூநகரியை கைப்பற்றுவதை இலக்காகக்கொண்டு "சுழல்காற்று" நடவடிக்கையில் முப்படைகளையும் பயன்படுத்த வேண்டிய தேவை இருந்தது. ஏனெனில் அதன் திட்டம் மும்முனை நகர்வைக் கொண்டிருந்தது.

கல்முனைப் பிரதேசத்தில் உலங்கு வானூர்தி மூலம் ஒரு தரையிறக்கமும், முனைப் பிரதேசத்தில் வேகப் படகுகள் மூலம் ஒரு தரையிறக்கமும் செய்யப்பட்டு அவை முன்னேறி பூநகரியை பிடித்து தற்காப்பில் ஈடுபடும், அதேவேளை மேலதிக படைகள் சங்குப்பிட்டி – கேரதீவுப் பாதையூடாக அனுப்பிவைக்கப்படும். இந் நடவடிக்கையில் புலிகள் தமது பலத்தைக் குவிக்காதவாறு, திசைதிருப்பும் நடவடிக்கையாக ஆனையிறவு – பரந்தன் தளத்திலிருந்து ஒரு படைத் தொகுதி முன்னேறும் என்பதே அதன் திட்டம்.

இந் நடவடிக்கை மன்னார் – பூநகரி பாதை திறப்பதற்கு அத்திவாரமாக கருதப்படுவது. இதன் வெற்றி, உறுதி செய்யப்பட்டாலே பாதை திறப்பு நடவடிக்கை மேற்கொண்டு சாத்தியமாகும். எனவே இந்நடவடிக்கை பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததும், அரசின் தலைவிதியை தீர்மானிப்பதில் பங்குள்ளதும் ஆகும். இதனால் இம் மும்முனை நகர்வை வழிநடத்த முப்படைத் தளபதிகளும் யாழிற்கு நேரில் வருகை தந்து நடவடிக்கையை நேரில் வழிநடத்தினர்.

10.06.99 அன்று MI –24 தாக்குதல் உலங்கு வானூர்திகள் பாதுகாப்பு வழங்க, MI –17 துருப்புக் காவி உலங்கு வானூர்திகள் கல்முனையில் தரையிறக்க முயன்ற போது புலியணிகள் தாக்குதலில் ஈடுபட்டன. திடீரென மேலெழுந்த உலங்கு வானூர்திகள் பிறிதொரு இடத்தில் மீண்டும் தரையிறக்க முயன்றபோது அங்கு நிலைகொண்டிருந்த புலியணிகள் விரைந்து தாக்கின. தாக்குதலில் சேதமடைந்த MI –17 உடனடியாக களம் திரும்பியது. இராணுவத் தரப்பு இதை எதிர்பார்க்கவில்லை. இவ் எதிர்ப்பால் தரையிறங்கும் முயற்சி தற்கொலைக்கு ஒப்பானது என்ற முடிவோடு விசேட கொமாண்டோக்களுடன் உலங்கு வானூர்திகள் களம் திரும்பின.

இதேவேளை கடல்வழியாக தரையிறங்க வந்த விசேட படகுப் படைப்





www.tamileelamarchive.com



# படை காவிவந்த படைக்கலன்கள் பறித்தெடுத்த பூரிப்பில் புலிவீரர்கள்

பிரிவை தாக்கி நிர்மூலமாக்க புலி யணிகளும், அதற்கு உதவியாக பூந கரி தளத்தின் சேம இருப்பு அணி களும் விரைந்து தயாரானபோது, வேகமாக தரையை அண்மித்துக் கொண்டிருந்த தரை இறங்கும் படகு கள் சடுதியாக பின்வாங்கின. விசேட கொமாண்டோக்களின் வான்வழி தரை இறக்கம் முறியடிக்கப்பட்ட நிலையில் S.B.S ஐ தரையிறக்கி எமது கைகளில் தந்துவிட அவர்கள் துணியவில்லை. இதனால் சங்குப் பிட்டியில் காத்திருந்த காலாட் படையினரும் செயற்படுவதற்கான அவசியம் இல்லாமல் போய்விட் டது.

நடவடிக்கை முறியடிக்கப்பட்ட அதேநேரம், திசை திருப்பும் தாக்கு தல் சுட்டதீவில் புலிகளிடம் பெரும் இழப்பை சந்தித்தது. எமது முன்ன ணிப் பாதுகாப்பு நிலைகளை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தை அழித்துவிட முறியடிப்பு தாக்குதலில் புலிகள் இறங்கினர். கடும் சண்டை அங்கே தொடர்ந்தது. இறுதியில் லெப்.கேணல் தர அதிகாரி உட்பட நூறுபேர் வரையில் காயமடைந்த நிலையில் முகாம் நோக்கி இராணு வம் பின்வாங்கியது. இதில் 07 போரா ளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

மொத்தத்தில் “சுழல்காற்று” நட வடிக்கை அதன் கரு நிலையிலேயே புலிகளால் முறியடிக்கப்பட அடங் கிப்போனது. சமரை வழிநடத்த வந்த முப்படைத் தளபதிகளும் கொழும்பு திரும்பினர்.

இதன் பின் பள்ளமடு என்ற மறு சமர் முனையை கைப்பற்றுவதற் கான நடவடிக்கையில் படைத்தரப்பு அவசரமாக ஈடுபட்டது. கடந்த காலத்தில் புலிகளுடனான அனுப வத்தைக் கொண்டு வெட்டைப் பிர தேசமான அப்புவியியல் சாதக தன் மையை பயன்படுத்தி, பெரியளவில் டாங்கிகளையும், பீரங்கிகளையும் பயன்படுத்துவதன் மூலம் இலக்கை வென்றுவிட முடியும் என படைத் தரப்பு நம்பியது. அதற்கேற்ப திட்டம் வகுக்கப்பட்டது.

காட்டுப்பிரதேச நடவடிக்கைகான அதிரடிப்படையும் (Jungle Commondos) இதனுடனான 53 வது டிவிசனும், சன்னார்குளப் பகுதியூடாக பெரிய மடு – பள்ளமடு பாதையை சென்ற டைந்து, புலிகளுக்கு கிடைக்கக்கூடிய உதவியணிகளைத் தடுத்து நிறுத்தும் அதேவேளை, பள்ளமடு நோக்கி மன் னார் –பூநகரி பிரதான வழியே கவ சத் துருப்பு படையினரை ( Armourd Corbs) உள்ளடக்கிய 55 வது டிவிசன் டாங்கிகளுடன் முன்னேறி பள்ளமடு வைக் கைப்பற்றும். பின் இவை தமக்குள் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும். இதுவே நடவடிக்கையின் அடிப்படைத் திட்டமாக இருந்தது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**வெற்றி நிச்சயம் நடவடிக்கையை நிச்சயிக்கப்பட்ட தோல்வியாக்கிய புலிகள், யுத்த முழக்கம் நடவடிக்கையை தம் வெற்றி முழக்கமாக மாற்றும் செயலில் இறங்கியுள்ளனர்.**

26–ம் திகதி 'ரணகோச –4 கட்டம் இரண்டு' என்ற பெயரோடு நடவடிக்கை ஆரம்பித்தது. இராணுவம் வன்னிச்சமர்க்களத்தில் பயன்படுத்தியிருந்த அனைத்து டாங்கிகளையும் ஒன்று குவித்து இந் நடவடிக்கையில் ஈடுபடுத்தியது. பிரதான வீதிவழியான நகர்விற்கு, டாங்கிகளும், ஆட்லறிகளும் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டன. ஏனெனில் இப் புவிச் சூழல் வெட்டையாக இருந்ததால் மரபுப்போர் முறைக்கு உகந்ததாக இருந்தது. இதுவரை எந்த நடவடிக்கையிலும் பயன்படுத்தப்படாதளவு டாங்கிகள் இங்கே பயன்படுத்தப்பட்டன. எதிரி இவ்வாறான ஒரு நடவடிக்கையை செய்வான் என்பதை உணர்ந்தே, எமது "விக்டர் கவச எதிர்ப்பு படைப்பிரிவு" மேலதிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

ஆட்லறியால் ஏற்படுத்திய சூட்டுத்தடுப்பை காப்பாகக் கொண்டு டாங்கிகள் வேகமாக முன்னேறின. விக்டர் கவச எதிர்ப்புப் படையணிகள் எதிரியின் பீரங்கிச் சூட்டுத் தடுப்பையும் மீறி முன்னேறி எதிரி டாங்கிகளை தாக்கின. முன்னேறிக் கொண்டிருந்த டாங்கிகளில் ஏழு டாங்கிகள் சொற்ப நேரத்தில் செயலிழந்தன. கடுமையான சண்டை நடந்து கொண்டிருந்தது. எதிரி சாதகமான நிலமை என எதிர்பார்த்த களநிலை அங்கே இருக்கவில்லை. எதிர்பாராத இழப்பை இராணுவம் சந்திக்க நேர்ந்தது.

இதேநேரம் காட்டு நடவடிக்கை அதிரடிப்படையினரை உள்ளடக்கிய 53–வது டிவிசன் சன்னார்குளம் வரை முன்னேறிய போதும் பள்ளமடு – பெரியமடு வீதியை சென்றடையாத நிலையில் பெரியமடு – பள்ளமடு வீதியை நோக்கி முன்னேறுவது அர்த்தம் அற்றதாகிவிட்டது. ஆக, நடவடிக்கையின் இலக்கு எட்டப்படவில்லை. மூன்று நாள் திட்டமிடப்பட்ட நடவடிக்கை ஒரு நாளுடன் கைவிடப்பட்டது.

மொத்தத்தில் இரண்டு டிவிசன்களைப் பயன்படுத்தி சாதகமான புவியியல் சூழல் என்ற கருதுகோளோடு, பெருமளவில் டாங்கிகள் ஆட்லறிகளை உள்ளடக்கிப் பெரும் பலப் பிரயோகத்தைச் செய்த இந்நடவடிக்கை அதிக விலையைக் கொடுத்து இலக்கை எட்டமுடியாத நடவடிக்கையில் அதிகாரிகள் உட்பட 150 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 350 பேர்வரையில் காயமடைந்ததாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.



www.tamileelamarchive.com

மன்னார் – பூநகரி பாதை திறப்பதற்கான அடிப்படை இலக்கு நோக்கிய நகர்வை தடுத்து நிறுத்தும் இச் சமரில் 84 புலிகள் தமது உயிர்களை தியாகம் செய்து இதைச் சாதித்தனர். மன்னார் – பூநகரி பாதை திறப்பதற்கான முதல்கட்ட இலக்குகள் முதன்முறை நகர்வின்போதே நிச்சயமான தோல்விகளை சந்தித்துக் கொண்டன.

இந்நிலையில் வருகின்ற வருடத்தின் ஆரம்பத்தில் நடத்தியே ஆக பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களுக்கிடையில் இலக்கு எட்டப்பட்டாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசிற்கு உள்ளது. இந்த மிகக் குறுகிய காலத்தில் இலக்கு எட்டப்படுமா? என்ற கேள்வியைவிட, இன்னும் மூன்று மாதத்தில் வன்னியில் மழைகாலம் தொடங்கிவிட்டால் முன்னேறுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. எனவே மூன்று மாதத்தினுள் இலக்கு எட்டப்படவேண்டும் என்பது இராணுவத்தை சங்கடத்திற்குள்ளாக்கியுள்ள நிலையில் அதன் முதலிரு பிரதான நடவடிக்கைகளும் படுதோல்வியை தழுவியுள்ளன.

ஆயினும் தமிழர் மீதான இராணுவ மேலாதிக்கத்தைக் காட்டி சிங்கள தேசத்தில் அரசியல் நடாத்தும் சந்திரிகா அரசு, தேர்தல் வெற்றிக்காக இப்பாதை பிடிப்பு நடவடிக்கையை இலகுவில் கைவிடப்போவதில்லை. இது வெளிப்படையான உண்மையே. கண்டி வீதிபிடிக்க புறப்பட்ட "வெற்றி நிச்சயம்" நடவடிக்கையை நிச்சயிக்கப்பட்ட தோல்வியாக்கிய புலிகள், "யுத்த முழக்கம்" நடவடிக்கையை தம் வெற்றி முழக்கமாக மாற்றும் செயலில் இறங்கியுள்ளனர். ■

# 1999 போராட்ட எழுச்சி ஆண்டு தமிழீழ மக்கள் பிரகடனம்



**தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கட்டளையை சிரமேற் கொண்டு விடுதலையை வென்றெடுப்போம். இந்த ஆண்டை தமிழீழ போராட்ட எழுச்சி ஆண்டாக பிரகடனப்படுத்தி வெற்றியை எமதாக்குவோம்.**

விரைவுபடுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய கட்டமாக, புதிய புரட்சிகரமான அத்தியாயமாக, தமிழீழ மக்கள் அணிதிரண்டு கொண்டிருக்கிறார்கள்.

தனது குறுகிய அரசியல் நலனுக்கான சந்திரிகா அரசாங்கம் எம்மீது போரைத் திணிக்கிறது. எமது வாழ்க்கையோடு விளையாடுகிறது. படுகொலைகள், பொருளாதாரத் தடையால் பட்டினி வாழ்வு, நோய், சமூகவிரோதக் குற்றச் செயல்களைத் தூண்டும் போதைவஸ்துப் பாவனைகளை ஊக்குவித்தல், பாலியல் வல்லுறவுகள் போன்ற இன்னோரென்ன அவலங்களால் எமது இருப்பையே அழித்துவிடத்துடிக்கிறது. இந்த வேளையில் நாம் அனைவரும் ஒன்றுதிரண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் மையங் கொண்டுள்ள போரை எமக்குச் சாதகமாக்கி வெற்றியை எமதாக்குவோம். எமது மதிப்பிற்குரிய தமிழீழ தேசியத் தலைவரின் கட்டளையை சிரமேற்கொண்டு விடுதலையை வென்றெடுப்போம். இந்த ஆண்டை தமிழீழ போராட்ட எழுச்சி ஆண்டாக பிரகடனப்படுத்தி வெற்றியை எமதாக்குவோம் என தெரிவிக்கும் மக்கள் அணி திரண்டு போராட்டப் பணிகளில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உயிர்ப்பதற்காய் வாழ்வு

அன்பரசன்

எனக்குள் தகிக்கும்
அனலின் கொதிப்பு
எவர்க்கும் புரியாது....
என் சுவாசத்தின் வேகம்...
என் குருதியின் துடிப்பு...
யாரும் அறியாதது...
கூருசி முனையாக
காரிருள் குளிரென்
குதிக்காலூடே சில்லிட்டுச்
செல்லும்
நீண்ட நாள் தூறலில்
நின்றதால் - என்
சுவாசமும் ஒழுங்கில்லை...
இரு விழி மூடாவென்
வாழ்க்கைச் சுருதியில்
ஏழுநாட்களும் ஏழுசுரங்கள்...
அவை
மனதிற்குள் மட்டுந்தான்...
மறைந்திருந்து மனதையடக்கி
நகரும் - என்
வாழ்விற்கு நானிருக்கும்
மண் குடிசையின் உடைந்த சுவர்
உந்து சக்தி...
குடிகலைக்கப்பட்டபோது
தவறிவிழுந்த குடும்பபடத்தின்
ஒரு துண்டு அது...
பரிதாபங்கள்...
பசிய குடும்பம்... இப்போ...
எந்த நிழலில் இன்றோ... அவற்றி
பச்சிளங் குழந்தைகள் இரண்டு...
எட்டிப் பார்த்து எதிரியை
கூர்ந்து பார்க்கிறேன்...
மண் குடிசை மீண்டும்
உயிர்ப்பதற்காய்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புதிய நூற்றாண்டில் இரு தேசங்கள்



**"ஒரே நாடு ஒரே மக்கள் என்ற புதிய சிந்தனையின் அடிப்படையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இராஜ்யத்துவத்தின் புதிய தூரதிருஷ்டியின் அடிப்படையில் ஒருபுதிய அரசியல் தோற்றம் உருவாகி வருகின்றது. இதில் அரசு பற்றிய புதிய கருத்துவத்தின் அடிப்படையிலும் பங்காளித்துவத்தின் அடிப்படையிலும் சகல இன மற்றும் பிற சமூகங்களை இது சம்பந்தப்படுத்துகின்றது" என சிறீலங்காவின் ஜனாதிபதி தனது புதிய சித்தாந்தம் பற்றித் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது புதிய சித்தாந்தம் பற்றிக் கருத்துக் கூறுவது இது முதற்தடவை அல்ல ஏற்கனவே இது குறித்து அவர் சில தடவைகள் பேசியுள்ளார். ஆனால், இவரின் இத்தத்துவத்தை இவரோ அன்றி ஆட்சியாளர்களோ அன்றி பேரினவாதிகளோ அதன் வெளிப் படையான அர்த்தத்துடன் ஏற்றுக் கொள்வதில்லை. எடுத்துக்காட்டாகப் பேரினவாதிகளைப் பொறுத்து இலங்கை ஒரேநாடு என்பதும் இதற்கு உரித்துடையவர்கள் சிங்களவர்கள் என்பதாகவுமே உள்ளது சிறுபான்மை இனத்தினரோ ஏனைய சமூகத்தினரோ பங்குதாரிகளாக இல்லை.

ஒரேநாடு, ஒரே மக்கள் எனின் இலங்கைத்தீவிலுள்ள அனைத்து மக்களும் ஒரேநாடு என்ற நிலைப்பாட்டுடன், தாம் அனைவரும் இதே தேசத்தின் மக்கள் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். ஆனால், இலங்கையில் அவ்வாறானதொரு சூழ்நிலை நிலவுவதாக இல்லை. ஒருபுறம் ஒரே நாடு ஒரே மக்கள் என்று கூறும் ஆட்சியாளர்களே மக்கள் அனைவரையும் சமத்துவமாக நடத்துவதில்லை. இதன் விளைவானது இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் இலங்கையை ஒரேநாடு எனவும் இலங்கை வாழ் மக்கள் ஒரே மக்கள் என ஏற்றுக் கொள்வதற்கும் தயாராக இல்லை.

இது மாத்திரமல்ல, இலங்கை வரலாற்று ரீதியாக ஒரேநாடு, ஒரே மக்கள் என்று இருந்ததும் இல்லை. இலங்கையை ஒரே நாடு என்ற நிலைக்கு ஆக்கியவர்கள் அன்னி ஆதிக்கவாதிகளே ஆகும். ஆனால், அவர்களினால் கூட இலங்கையரை



www.tamileelamarchive.com

ஒரே மக்கள் என்று ஆக்கிவிடமுடிய வில்லை என்பதே யதார்த்தமாகும்.

இதேசமயம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரே நாடு ஒரே மக்கள் என்ற சிந்தாந்தத்தைப் பேச்சிற்கு கூறிக்கொள்ளலாம். ஆனால், அவரின் அரசின் நடவடிக்கைகள் இலங்கை யில் உள்ள ஒருபகுதி மக்கள் மீதான ஒடுக்குமுறையைத் தீவிரமாக்குவதா கவே உள்ளது. மிகமோசமாக மேற் கொள்ளப்படும் இவ் ஒடுக்கு முறை யானது இன்று ஒரு இன மக்களின் ஒருதொகுதியினை இராணுவ முற்று கைக்குள் வைத்து உணவு, மருந்துப் பொருட்கள் விநியோகம் இன்றி

**பிறக்கப்போகும் புதிய நூற்றாண்டில் இலங்கை இருதேசங்கள் ஆவதும் இருவேறு இனமக்கள் அங்கு ஆட்சி நடத்து வதும் தவிர்க்கமுடியாத நிகழ்வாகவே இருக்கும்.**

தேவைக்குப்பயன்படுபவர்களாக மட்டுமே ஆட்சியாளர்கள் பயன் படுத்திக்கொள்ள முற்படுவதாக தெரி கின்றது. சிலவேளை அரசியல் யாப் பில் தெரிவிக்கப்பட்ட சில உரிமை களைக் கொண்டு சம அந்தஸ்து சம நீதி என்பன பற்றி ஆட்சியாளர்கள் பேசமுற்படலாம். ஆனால், நடை முறையில் அவை எத்தகைய சாத்தி யப்பாடானவையாக உள்ளன என் பது அவர்களுக்கே நன்கு தெரியும்.

ஆகையினால், ஒரேநாடு ஒரே மக்கள் என்ற புதிய சிந்தனை நோக் கிச்செல்கின்றது என்பது பேச்சிற்



பட்டினி போட்டுச்சாகடிக்கும் நோக் கம் கொண்டதாக உள்ளது.

இந் நிலை ஒன்றே ஜனாதிபதியோ அன்றி அவரது அரசாங்கமோ அனைத்து மக்களையும் ஒரே மக்க ளாகக் கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டப்போதுமானதொன் றாகும்.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு பற்றிய புதிய தத்துவத்தின் அடிப் படையில் சகல இன மற்றும் பிற சமூகங்களையும் இது சம்பந்தப்படுத்து கின்றது என்பதாக உள்ளது. ஆனால், அரசின் நடவடிக்கையானது எவ் வாறு சம்பந்தப்படுத்த முனைகின் றது என்ற கேள்வியையே எழுப்புவ தாகின்றது. ஏனெனில் சம்பந்தமென் பது இனங்களுக்கிடையில் சம சம் பந்தமாக இருப்பதாகத் தெரியவில்லை.

அதாவது, ஆட்சியில் ஏனைய இனங்களும், சமூகங்களும் சம பங் காளர்களாக, அரசின் ஓர் அங்கமாக இடம்பெறுவதாகத் தெரியவில்லை. மாறாக ஏனைய இனங்களையும், சமூகங்களையும் இரண்டாம் தரப பிரஜைகளைக ஆட்சியாளர்களின் கான ஒரு விடயம் மட்டுமே மாறாக, இன்று இலங்கையில் இனங்களுக்கு இடையில், சமூகங்களுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகள் மோதல் கள் என்பன இத்தத்துவத்திற்கு எதி ரான நிலைநோக்கி விரைந்து சென்று கொண்டிருக்கின்றது. என்பதே யதார்த் தமாய் உள்ளது. அதாவது பிறக்கப் போகும் புதிய நூற்றாண்டில் இலங்கை இருதேசங்கள் ஆவதும் இருவேறு இனமக்கள் அங்கு ஆட்சி நடத்து வதும் தவிர்க்கமுடியாத நிகழ்வா கவே இருக்கும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**நாம்**

**அர்த்தநாரி**

# தலையை நிமிர்த்தாமலே தலைவிதியை நோகலாமா?



**நீங்கள் அடுத்தவர்களிடமிருந்து விடுதலை அடைய வேண்டுமெனில் முதலில் உங்களிடமிருந்தே விடுதலையடைய முயற்சிக்கவேண்டும்.**

மனிதன் தனித்து வாழமுடியாத ஒரு சமூகப்பிராணிதான் வாழும் சூழல்களுக்கு ஏற்ப தன்னை சரிசெய்து கொள்ளாத எதுவுமே இவ்வுலகில் நிலைத்து நிற்கமுடியாது என்ற உண்மையை உணர்ந்து அதற்கமைய தன்னை, தனது குடும்பத்தை, அயலவனை, நண்பனை, இச் சமூகத்தை, ஏன் இவ்வுலகத்தையே சரிவரப் புரிந்து அதனுடன் இணைந்து வாழவேண்டியவன் தனக்கென சிறப்பாக அமைந்த பகுத்தறிவின் துணைகொண்டு இயற்கையையே போட்டிக்கு அழைத்து அளப்பரிய சாதனைகளைப் படைத்துக் கொண்டிருப்பவன். அன்பு, நட்பு, காதல், பாசம், மரியாதை, பக்தி என்ற உயரிய பண்புகளை தன்னகத்தே கொண்டமைந்தவன். அதேநேரம் அச்சம், கோபம், வெறுப்பு, குரோதம் போன்ற கீழ்த்தர உணர்ச்சிகளுக்கும் சுலபமாக ஆட்படுபவன். சிறு முகமலர்ச்சியில், கண்களின்




பாவத்தில், இலேசான தலையசைப்பில்கூட தனது மன உணர்வுகளை துல்லியமாக வெளிப்படுத்தத் தெரிந்தவன். தனக்கென்றே ஒரு தனித்துவத்தை, குண இயல்புகளை, விருப்பு வெறுப்புக்களைக் கொண்டமைந்தவன்.

## எமது பாதை...

வாழ்க்கைப் பாதை மேடு, பள்ளம் நிறைந்தது. கற்களும், முற்களும் நிரம்பியது. இவ்வுலகில் நிலைத்து வாழ்வதற்கு இப்பாதையில் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்கவேண்டும். அதுவும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுடன் இயைந்து, அறிஞர்கள், செல்வந்தர்கள், அரசியல்வாதிகள், கள்ளர், பொய்யர், கொலைஞர், கோழைகள் என்ற பலதரப்பட்ட மனித ஜீவன்களைக் கடந்து வெற்றிகரமாக முன்னேறிச் செல்ல வேண்டும். நேரிய வழியில் நீதி, அன்பு, ஒழுக்கம் போன்றவற்றைப் பின்பற்றி தனது வாழ்க்கைப் பயணத்தின் இறுதிக் குறிக்கோளை அடையவிரும்பும் மனிதனுக்குத் தேவைப்படுபவை தன்நம்பிக்கை, திறமை, நிதானம் என்ற மூன்று பண்புகளும்தான். வாழ்க்கைப் பாதையின் அனைத்து சோதனைகளையும் எதிர்கொள்ளக்கூடிய மனோபலத்தைப் பெறுவதற்கு எமக்கு உதவும் இந்தப் பண்புகள் மனித ஆளுமையை விருத்தி செய்வதன்மூலமே பெறப்படமுடியும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## ஆளுமை என்பது...

நல்ல தோற்ற அமைவு, உளப்பக்குவம், உயரிய நடத்தை என்ற பண்புகளின் தொகுப்புத்தான் ஆளுமை எனப்படுவது. எம்மைச் சூழவிருப்பவர்களை எமது தோற்றத்தினால் எமது உயரிய பண்பினால், எமது செயல்களினால் அவர்களை கட்டுப்படுத்தும் ஆற்றல், எமது சிந்தனைகளை அவர்கள் ஏற்று, அதனை மதித்து நடக்கத்தூண்டும் ஆற்றல். இது தான் மனித ஆளுமை. மனித ஆளுமையின் அதி முக்கிய அம்சமாகக் கருதப்படும் எமது தோற்ற அமைவு எம்முன்னே இருப்பவரை எம்மை நோக்கி ஈர்ப்பதற்கோ எமது கருத்துக்கள் மூலம் அவர்களில் தாக்கம் விளைவிப்பதற்கோ எமக்கு அனுசரணையாகவுள்ளது ஆளுமையுடன் கூடிய எமது தோற்றம்தான். நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, அமைதியும் எளிமையும் அமைந்த தோற்றம், ஆழமான பேச்சு இவைதான் ஆளுமையின் வெளிப்பாடுகள். ஆளுமை என்பது அழகின் தோற்றம் என்ற ஒரு தவறான சிந்தனையை எம்மவரிடையே குறிப்பாக பெண்களிடையே காணப்படுகிறது.

## அழகு என்பது...

அழகு வேறு ஆளுமை வேறு. அங்கங்கள் அதற்குரிய லட்சணங்களுடன் அமைந்திருத்தல் அழகு என கூறப்படுகிறது. பிறைநுதல், கயல்விழி, நீண்ட மூக்கு, நீண்ட கூந்தல் என்று அழகை வர்ணிப்பவர்கள் அழகுக்கு இலக்கணம் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் காண்பவர் கருத்தைக் கவர்வதும் மெய்மறந்து அதில் லயிப்பதும் அழகின் பண்புகள். மனிதனின் பார்வைக்கு பார்வை அழகு என்ற அம்சம் வேறுபட்டது. ஒருவருக்கு அழகானதாக தெரிவது இன்னொருவருக்கு அவலட்சணமாக இருக்கிறது. சிலருக்கு சிவந்த நிறம் அழகாக தெரிந்தால், சிலருக்கு கரிய கட்டுடல் அழகாக தெரிகிறது. சிலருக்கு சிரிப்பு அழகென்றால் சிலருக்கு சிரிக்கும் கண்கள் அதைவிட அழகு. சிலருக்கு இடை அழகென்றால் சிலருக்கு எடுப்பான நடை அழகு. எல்லா அழகும் ஒருவரிடம் பொருந்தி இருப்பதில்லை. அவ்வாறு பொருந்தி இருப்பவர்களும் உள்ளத்தளவில் தலைக்கணம் பிடித்தவர்களாக இருந்தால் அங்கு அழகு புற அழகை மறைத்துவிடுகிறது. அதுபோல் அவலட்சணமான முகம்கூட மென்மையும், அமைதியும் அழகுமிக்க பேச்சினால் பல அழகிகளையும், அழகர்களையும் சுண்டி இழுத்துவிடுகின்றது. எம்முன் நடமாடும் எதிரும் புதிருமான தோற்றம்கொண்ட எத்தனையோ காதல் தம்பதியர் இதற்கு எடுத்துக்காட்டு. அழகின் ரசனை வெறும் கண்களிலோ அல்லது அவயவங்களிலோ அல்ல. மாறாக அது ஆழமான உறவுகளில் உள்ளத் தூய்மையில் தங்கியுள்ளது. எனவே “அழகு என்பது இதுதான்” என எதையுமே வரையறுத்துக் கூறிவிட முடியாது. “எது எமக்கு நிறைவையும் சந்தோஷத்தையும் தருகின்றதோ அதுதான் அழகு” என்கிறார் ஒரு ஆங்கில கவிஞர். ஆழமான அன்பு அவலட்சணத்தையும் கூட அழகாக்கிவிடும்.

மாறாக ஆளுமை என்பது அங்கங்களின் அமைப்பைவிட அதன் சரியான பயன்பாட்டைக் கருத்தில் கொண்டது. ஆறடி உயரம்தான் அழகென்றால் ஐந்தடி உயரத்திலும் கூட நிமிர்ந்து கம்பீரமாக நிற்க முனைவது ஆளுமை. உதடுகள் அழகற்றவையாக இருப்பினும் தனது மென்மையான அறிவுபூர்வமான பேச்சினால் அடுத்தவரின் கவனத்தைத் தன்மீது திருப்ப முனைவது ஆளுமை. தமது ஆளுமை மூலம் வரலாறு படைத்த எத்தனையோ அவலட்சண முகங்களை வரலாறு எமக்குக் காட்டியிருக்கிறது. அழகைக்காட்டி வியாபாரம் தான் செய்யமுடியுமே தவிர, சாதனை படைக்கமுடியாது.



## எமது இலக்கு...

மனித சமுதாயத்தின் இறுதி இலக்கு தான் விரும்பியதைப் பெறுதல். இவ்வுலகிலுள்ள படைப்புக்கள் அனைத்திலும் மனிதன் மாத்திரமே இறுதி இலக்கை அடைபவன். நாம் எப்படி



www.tamileelamarchive.com

வாழ விரும்புகின்றோமோ, அதன்படியே வாழ்க்கையும் அமையும். நாம் விரும்பியதை அடையும் போது அதன் மூலம் நிறைவும் மகிழ்வும் கிடைக்கிறது. அதையும் நேரிய வழியில் அடைய எத்தனித்து அதனால் அளப்பரிய இடர்களை எதிர்கொண்டு இடர்களை சமாளிக்கும் தன்னம்பிக்கை, துணிவு என்பவற்றைப் பெற்று அதன் மூலம் எமக்கென ஒரு ஆளுமையை விருத்தி செய்து நாம் விரும்பிய இலக்கை அடையும்போது எமது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது. மனித வாழ்வின் நிறைவானது மனித ஆளுமையில்தான் தங்கியிருக்கின்றதேயன்றி அழகில் அல்ல. ஆனால் அடுத்தவர் கவனத்தைத் தம்மீது திருப்ப அழகை ஆயுதமாகப் பயன்படுத்தும் மனிதர்கள் குறிப்பாக பெண்கள் தமது பாதையில் அதிகமான தடைகளை எதிர்கொள்கின்றனர்.

## இலக்கின் தடைகள்...

உடல் அழகுக்கும் ஆளுமைக்கும் இடையிலான வேறுபாட்டை சரிவரப் புரிந்துகொள்ளாது அடுத்தவரின் கவனத்தை தம்மீது திருப்ப தமது அழகை ஆயுதமாக பயன்படுத்துபவர் யார்?

பெண்கள் சமூகத்தை நோக்கித்தான் இந்த வினா எழுப்பப்படுகின்றது. காலம்காலமாக பெண்களை அழகுப்பதுமைகளாக்கி வேடிக்கை பார்த்த ஆண்களின் தனித்துவ பண்பாகவே இந்த ஆளுமை என்ற அம்சம் நோக்கப்பட்டது. அல்லும் பகலும் ஆண்களை மகிழ்விப்பது எப்படி என்ற கலையைத்தான் முதலாளித்துவம் பெண்களுக்குப் பயிற்றுவித்ததேயன்றி அவர்களின் திறனை வெளிக்கொணர்ந்து தனித்து இயங்க அவர்களை அது அனுமதிக்கவில்லை. பெண்களும் கூட தமது தனித்துவத்தை, அடையாளத்தை இழந்து, நாம் அடக்கப்படுகின்றோம் என்ற உண்மையைக்கூட அறிய முடியாத

> இன்றைய உலக அமைப்பில் பெண்கள் வகிக்கும் பணி ஆணை விடவும் அளப்பரியது. பெண்மைக்கே உரிய சிறப்பம்சங்களான அன்பு, கருணை, பாசம், இரக்கம், தாய்மை என்பன இச்சமுதாய முன்னேற்றத்திற்கு அவசியம் என்பதை உணர்ந்து அதைக் கைவிட்டுவிடாமல் அதேசமயம் ஆணுக்கு நிகரான அல்லது அதையும்விட அதிகமாக அறிவுத்துறையில், நிர்வாகப் பதவியில், தொழில் நுட்பத்திறனில், உடற்பலத்தை காண்பிக்கும் யுத்த களத்தில் சாதனை படைத்துக்கொண்டிருக்கின்றது பெண்ணினம்.

அல்லது அறியவிரும்பாதவர்களாக போகப் பொருளாக மட்டுமே பயன்பட்டார்கள். ஒருவேளை சோற்றுக்கூட அடுத்தவரை நம்பியிருக்குமாறு பெண்களை வளர்த்தமை ஆயிரமாயிரம் அழகுப் பதுமைகளின் முன்பு போட்டி போட்டுக்கொண்டு கணவனின் கருத்தைக் கவர்வதற்குத் தமது அழகை ஆயுதமாகப் பயன்படுத்தும் கேவல நிலைக்குப் பெண்களை இட்டுச் சென்றது. அடுத்த பெண்களைக் கணவன் நாடினால் தமது வாழ்விற்கே ஆபத்து என உணர்ந்து அழகினால் அவனை சிறை பிடிக்கும் எண்ணத்தைப் பெண்களில் வேரூன்றச் செய்தது. அறிவும் ஆளுமையும் நிறைந்த பல அரசகுல மங்கையரையும், பெண் பாவலர்களையும் வலாறு எமக்கு கோடிகாட்டி நிற்கின்றதெனினும் அவை அங்கங்கே இலைமறைகாயாக இருந்த ஒருசில நிகழ்வுகள் மட்டும்தான். ஆணைக்கவரும் போட்டியில் தங்கள் அழகைமிகைப்படுத்திக் காட்டும் கலையில் பெண்களின் கவனமும், அலங்காரப் பதுமைகளாக்கும் ஆண்களின் ஆர்வமும் இணைந்து அலங்காரக்கலையில் பெண்களைத்





www.tamileelamarchive.com

தேர்ந்த விற்பன்னர்களாக்கி விட்டது. வாழ்க்கையில் அடுத்தவரின் கவனத்தை அழகால், அலங்காரத்தால், ஆடைஅணிகளால் மட்டுமே கவர நினைக்கும் ஓர் இழிவான விபச்சாரத்திற்கொப்பான மனோநிலையை மிக ஆழமாகப் பெண் மனதில் வேரோடுவதற்கு முதலாளித்துவம் வழி செய்துவிட்டது.

ஆனால் இன்றைய காலம் பெண்களுடைய அறிவுக் கண் திறந்து அவர்கள் தமக்கென ஒரு பாதையை வகுத்து வீறு நடைபோடும் காலம். அடுக்களையே வேதம் என்றிருந்தவர்கள் அவனியில் பவனிவரும் காலம். அழகே உலகம் என்றிருந்தவர்கள் அகிலத்தையே மாற்றியமைப்பதில் வரலாறு படைக்கும் காலம். முன்னேற்றப்பாதைக்கு அழகையும், ஆடை அலங்காரங்களையும் ஒருபுறம் வைத்துவிட்டு ஆளுமையை அடித்தளமாக்கும் காலம். ஆனால் அந்தோபரிதாபம் முதலாளித்துவத்தின் எச்ச சொச்சங்கள் இன்னமும் பெண்களை விட்டுப் போகவில்லை. அது தனது திட்டத்தை மிக ஆழமாகவே பெண்கள் மனத்தில் பரம்பரைபரம்பரையாக அது பதிந்துவிட்டது. உங்கள் ஆளுமையை காட்டும் இடங்களில்கூட இந்த அலங்கார்கள் உங்கள் திறமையை, ஆளுமையை குழியில் போட்டு மூடிவிடுகின்றன. ஏன்?

## அடுத்தவர் பார்வையில்...

இன்றும் நீங்கள் அழகுப்பதுமைகள்.. அறியாமை என்னும் பாதையில் கண்ணை மூடிக்கொண்டு அங்கே, ஏன் போகின்றோம் என எண்ணிப்பார்க்கக்கூட முனையாமல் ஆண்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்கள். அறிவுக் கண் திறந்து அறிவுப் பாதையில் நடைபயிலத் தொடங்குபவர் கூட அறியாமையில் எம்மை உழலவைத்த அழகுக் கவசங்களை இன்னமும் கைவிட விருப்பமின்றி அதனையும் அணிந்துகொண்டே நடைபயில முனைபவர்கள். ஆளுமையை வெளிக்கொணரவேண்டிய முக்கிய இடங்களில்கூட கண்ணைப் பறிக்கும் அலங்காரங்களுடன் நின்று 'பெட்டைக் குட்டி கதைக்கவும் பழகிவிட்டது" என்று அடுத்தவரின் ஏளனத்திற்கு அடிக்கடி இலக்காகின்றவர்கள், இன்றுவரை அழகுப் பதுமைகளாகவே உங்களைப் பார்த்துப் பழகிவிட்ட ஆணின் கண்களை எமது தோற்றத்தால், உயரிய நடத்தையால் மாற்றி அவர்களுக்கு அறிவுத் தெளிவை ஊட்டுவதற்குப் பதில் எமது அழகை இன்னமும் ரசிக்க வழிசெய்து கொடுப்பவர்கள் வீட்டுக்குள் இருந்த உங்கள் அழகை தூரத்தே மட்டும் பார்த்து பெருமூச்சுவிட்ட ஆண் இனத்திற்கு "கருவழி" என்று பெண் விடுதலை உணர்வை சாட்டாக வைத்து கிட்ட நெருங்கி வந்து உங்கள் அழகை கிட்ட ரசிக்கும் பாக்கியத்தை அவர்களுக்கு அளிப்பதன் மூலம் பெண் விடுதலை என்ற மேன்மையான உணர்வையே கொச்சைப்படுத்துபவர்கள்.

## உங்கள் ஆற்றல்...

தமது ஆற்றல் எத்தகையது என்பதை இன்னமும் கூட பெண்கள் அறியவில்லையா? இவ்வுலகின் ஆதாரமையம், அச்சாணி பெண்கள்தான் என்பது அவர்களுக்குத் தெரியாதா? எமது அறிவு, எமது திறமை, எமது மனோதிடம் என்பன உலகத்தை எமது காலடியில் தலைசாய்க்கக்கூடிய ஆளுமையை எமக்கு அளித்திருக்கும்போது கேவலம் அழகை கவர நினைக்கும் இழிநிலையை முதலாளித்துவம் எம்மில் பதித்துவிட்டது என இன்னமுமே உணரமுடியாத அறிவிலிகள் தான் பெண்களா?

## உங்கள் பணி...

இன்றைய உலக அமைப்பில் பெண்கள் வகிக்கும் பணி ஆணை விடவும் அளப்பரியது. பெண்மைக்கே உரிய சிறப்பம்சங்களான அன்பு, கருணை, பாசம், இரக்கம், தாய்மை என்பன இச்சமுதாய முன்னேற்றத்திற்கு அவசியம் என்பதை உணர்ந்து அதைக் கைவிட்டுவிடாமல் அதேசமயம் ஆணுக்கு நிகரான அல்லது அதையும்விட அதிகமாக அறிவுத்துறையில், நிர்வாகப் பதவியில், தொழில் நுட்பத்திறனில், உடற்பலத்தை காண்பிக்கும் யுத்த களத்தில் சாதனை படைத்துக்கொண்டிருக்கின்றது பெண்ணினம். ஆணின் பாதை ஒரே சீரான பாதை. ஆனால் பெண் செல்லும் பாதையோ பலதரப்பட்ட ஆற்றலும் தேவைப்படும் பாதை. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஏற்ப தமது ஆளுமைத் திறனையும் மாற்றிவைக்கும் தேவை பெண்ணிற்கு உண்டு. குடும்பச்சுமை, வேலைச்சுமை என்ற இரட்டைச் சுமையில் திண்டாடும் இவர்களுக்கு ஆணைவிடவும் அதிகளவு ஆளுமை அவசியம். அதுமட்டுமல்ல இதுவரை ஆணுக்கு மட்டுமே உரியதாக இருந்த ஆளுமைப் பண்பை பெண்கள் புதிதாக உருவாக்கி அதை தம்மில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கிறது. அனைத்து சுமைகளையும் தாங்கி நேரம் இல்லாது சிரமப்படும் பெண்கள் கிடைக்கும் சொற்ப நேரத்தையும் வீணாக்கக்கூடாது. இதுவரை எந்தக் கோலத்தில் நீங்கள் மற்றவர்களால் பார்க்கப்பட்டீர்களோ அதிலிருந்து அவர்களை மாற்ற உழைக்க வேண்டும். அன்பு சொரிய வேண்டிய நேரத்தில் அன்பைக் காட்டி ஆளுமையைக் காட்டவேண்டிய இடத்தில் ஆளுமைக் காட்டி, அன்பைச் சொரிபவர்களாக, அழகுப் பதுமைகளாக, ஆறுதலளிப்பவளாக, ஆலோசனை தெரிவிப்பவளாக, அடக்கி அதிகாரம் செய்பவளாக எல்லாத்திற்கும் மேலாக உலகிற்கு உயிர் கொடுப்பவளாக, சந்ததி விருத்திக்கு உதவுபவளாக, அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து ஆயுதம் தாங்குபவளாக கணத்துக்குகணம் ஆளுமைத் திறன்களை மாற்றியமைத்து சவால்களை எதிர்கொள்ளவேண்டிய அளப்பரிய பணி உங்களுக்கு உண்டு. ஆனால் பெண்களோ... இன்னமும் உதட்டு அலங்காரங்களில்தான் முழு நேரத்தையும் வீணாக்குகின்றார்கள். முக அழகுக்கு மஞ்சளா, எலுமிச்சம் பழமா, கிறீமா, நக அழகுக்கு மருதாணியா, கியூட்டெக்ஸா, உடல் அழகுக்கு சேலையா, பாவாடையா, சட்டையா என்ற விவாதத்திலேயே இவர்களின் முழுப் பொழுதும் போகின்றது. வேலையற்று வீட்டிலிருக்கும் பெண் என்றாலும் சரி, வேலைக்குப் போகும் படித்த பெண்ணென்றாலும் சரி இந்த நகப்பூச்சுப் பவுடர் கலாச்சாரத்திலோ அல்லது ஆடை அணிகலன்களிலோதான் அதிக



நேரத்தைச் செலவிடுகின்றனர். அறிவும் ஆளுமையும் பரிணமிக்கவேண்டிய கல்விக்கூடங்கள் நிர்வாகத்துறைகள், வேலைத்தளங்கள், போன்றவற்றையெல்லாம் அழகு வியாபார நிலையங்கள் ஆக்கி இருப்பது பெண்கள் சமுதாயம்தான் என்பது எத்தனை வேதனைக்கும் வெட்கத்திற்கும் உரிய ஓர் உண்மை நிலை.

## கல்விக்கூடங்களில்...

உங்கள் அறிவுக் கண்களால் மாணவர்களின் அறியாமை என்னும் இருளைப் போக்கும் இடம் வகுப்பறை. நாளைய சமூகத்தை வடிவமைக்கப் போகும் சிற்பிகளை தயார்படுத்தும் ஓர் உன்னத இடம் அது. அறிவுக் கவசமிட்டு ஆளுமையின் மூலம் மாணவர்களை உங்களை நோக்கி கவர்ந்திழுத்து உங்கள் தோற்றம், ஒழுக்கம், செயற்பாடு மூலம் உங்களில் மரியாதையை, மதிப்பை, பக்தியை ஏற்படுத்தி உங்கள் அறிவை அவர்களில் பதிய வைக்கும் உயர்வான இடம். தனது குருவிடம் பக்தியும், மரியாதையும் கொள்வதற்கு கண்ணைப் பறிக்கும் ஆடையும், கழுத்துத் தெரியும் சட்டையும், அமைதியைப் பறிக்கும் கொலுசுச் சத்தமும் உதவுமா? உங்கள் அழகை மற்றவர்கள் இரசிப்பதற்கான இடம் வகுப்பறை அல்ல. உங்கள் அறிவு விருந்தை சுவைப்பதற்கான இடம் அது. உங்கள் ஆடையின், நகப்பூச்சின், முகப்பவுடரின், ஆபரணங்களின் தரத்தை அலசுமிடம் அதுவல்ல. உங்கள் அறிவை, ஆளுமையை, எளிமையை கண்டு வியந்து போற்றி உங்கள்மீது மதிப்புக் கொள்ள வைக்கும் இடம் அது. ஆனால் உங்களில் சிலர் செய்வது அறிவைப் பரப்பவேண்டிய இடத்தில் கழுத்தழகை, இடுப்பழகை காட்டும் இடமாக மாற்றிவிட்டார்களே? வெள்ளைச் சீருடை ஒரேமாதிரியான தலைஅலங்காரம் ஆபரணத்தடை என்று மாணவர்களின் புறத்தூய்மைக்கு சட்டம்போட்டு நடைமுறைப்படுத்தும் நீங்கள் உங்கள் அலங்காரத்தால், டாம்பீகத்தால் அகத்தூய்மையை அழுக்காக்கிவிடுகின்றீர்களே? இச் சமூகத்திற்கு எனது பணி, கடமை என்ன என்று சிந்தனை செய்யவேண்டிய இளம் மனங்களில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அழகுப் பொருட்களிலும், ஆபரணங்களிலும் மூழ்கிக் கிடக்கும் ஆவலை, ஏக்கத்தை விதைத்து விடுகின்றீர்களே? ஏழைகளின் மத்தியில் இயலாமையை, விரக்தியை, சோர்வை தூண்டுகின்றீர்களே?

## வேலைத் தளங்களில்...

அறிவும் ஆளுமையும் போட்டி போட்டு பரிணமிக்கவேண்டிய இடம் நிர்வாகப் பதவிகள், நிதானமான கம்பீரம் பொருந்திய உங்களின் காலடிச் சத்தத்தில், ஆழ்ந்த அமைதியான பார்வையில், உதடு பிரியாத புன்னகையில், இலேசான தலையசைப்பில் ஒரு பெரிய நிறுவனத்தையே கட்டி இழுக்கும் ஆற்றல் பெற்ற நீங்கள் கேவலம் கண்ணைப் பறிக்கும் ஆடையும், கழுத்தை நிறைக்கும் ஆபரணமுமாக உலாவருகின்றீர்கள். ஆழ்ந்த நோக்கு, அளவான பேச்சு, அறிவார்ந்த கருத்து என்பவற்றின் மூலம் உங்களின் கீழ் பணி புரியும் பணியாளர்களிடம் மதிப்பையும், மரியாதையையும் பெறவேண்டிய நீங்கள் உங்கள் நகப்பூச்சின் தரத்தை ஆபரணங்களின் கனபரிமாணத்தை, வாசனைத் திரவியங்களின் உற்பத்தி மையத்தை ஆராயும் இடமாக தயார்ப்படுத்துகின்றீர்கள். உங்களைப் போகவிட்டு முதுகுக்குப்பின்னால் உங்களை பெண்களே விமர்சிக்கும் இழி நிலைக்கு ஆளாகின்றீர்கள். உங்களின் தோற்றத்தைப் பார்த்து பெண்களே அறிவுசார் கருத்துப் பரிமாற்றம் செய்ய தயங்குவது உங்களுக்குப் புரியவில்லை. வேலைத்தளங்களில் தேவைப்படுவது நிர்வாகத் திறன், மனிதனின் வெளித்தோற்ற அலங்காரங்களையும்விட, மனித ஆளுமையை வெளிப்படுத்தும் அங்க அசைவுகள் இங்குபிரதானமாக தேவைப்படுகின்றது.

அழகு விம்பம் ஒன்றிற்குள் தனக்கு சமமான வகையில் அல்லது தன்னை விடவும் சிறந்த முறையில் கருத்துக்களை உருவாக்கும் திறன் இருக்கின்றது என்பது நினைத்துப்பார்க்கவே தயங்கும் இச் சமூகத்தின் மனத்தில் உங்கள் கருத்துக்களை ஆழமாக பதிப்பதற்கு முதலில் உங்கள் தோற்றம் மாறவேண்டும் இரசனைக்கு இடமுள்ளதாக இல்லாது கம்பீரமும், ஆளுமையும் வெளிதெரியும் வகையில் உங்கள் வெளித்தோற்றம் அமையவேண்டும்.

## பொது இடங்களில்...

உங்கள் அலங்காரத்தையும், டாம்பீகத்தையும் காட்டுவதற்கு மரண வீடுகள், மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள்

> நாடு விடுதலையடைய நீங்கள் விடுதலையடைய வேண்டும். நீங்கள் அடுத்தவர்களிடமிருந்து விடுதலை அடைய வேண்டுமெனில் முதலில் உங்களிடமிருந்தே விடுதலையடைய முயற்சிக்கவேண்டும்.

என்பவற்றைக்கூட நீங்கள் விட்டுவைக்கவில்லை. கையை இழந்து கிடப்பவனிடமா உங்கள் கைவளையலையும், மோதிரத்தையும் காட்டுவது. ஒருவேளை சோற்றுக்கே ஆளாய்ப் பறக்கும் குடும்பத்தில் உங்கள் அழுகு சாதனங்களின் ஆபரணங்களின் விளம்பரங்கள் ஒன்றில் உங்கள் மீது அவர்களை வெறுப்புக்கொள்ள வைக்கிறது. அல்லது தமது இயலாமை, ஏக்கம், விரக்தி என்பவற்றின் மூலம் தங்கள் மீதே வெறுப்புக்கொள்ள வைத்து சமுதாய சீர்கேடுகளை உருவாக்குகிறது.

## அழகாக இருப்பதே குற்றமா...?

அவ்வாறாயின் அழகாக இருப்பதே குற்றமா? மனிதனுக்கு அழகுணர்ச்சியே இருக்கக்கூடாதா? என நீங்கள் பொருமுவது கேட்கிறது. அழகுணர்ச்சி என்பது மனித முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானது. மனித ஜீவன்கள் அனைத்திற்குமே பொதுவானது. ஒவ்வொரு ஜீவனிடமுமே அழகுணர்ச்சியின் தன்மை வேறுபட்டது. நாம் முகம் சுழிக்கும் பழங்குடி மக்களின் ஆடை அணிகலன்களோ அல்லது எம்மைத் திகைக்க வைக்கும் ஆபிரிக்கக் குடிகளின் மூக்கு, காது, கழுத்தில் தொங்கும் பிரமாண்டமான வளையங்களோ எமக்கு புரியவைப்பது எதுவெனில் அழகுணர்ச்சி என்பது இனத்திற்கு இனம், மனத்திற்கு மனம் வேறுபட்டது என்பதைத்தான்.

இன்றைய விஞ்ஞான உலகின் வியத்தகு வளர்ச்சிக்கு மனித வாழ்க்கையின் அளப்பரிய தேவைகள் எந்தளவிற்கு காரணமாக இருந்ததோ அதைவிட அதிகம் காரணமாக இருந்தது இந்த அழகுணர்ச்சிதான். இயற்கையின் அழகை கண்ணால் பருகியதுடன் நிற்காது அதை நிரந்தரமாக்கிப் பார்க்க எழுந்தவைதான் ஓவிய, சிற்ப, புகைப்படக் கலைகள். வெப்பம் குளிரிலிருந்து எம்மைப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாதுகாக்க மட்டும்தான் வீடு என்றால் இலட்சக்கணக்கில் உழைப்பின் பெரும் பகுதியை வீட்டிற்குள் முடக்கியிருப்பானா? இருப்பதற்கு மட்டும்தான் இருக்கை என மனிதன் நினைத்திருந்தால் இன்று விதம்விதமான சோபாக்களை நாம் கண்டிருக்க முடியுமா?

அழகுக்கு அழகூட்டுவது அலங்காரம். நீண்ட கூந்தல் அழகு என்பதற்காக அதனை விரித்துவிட்டு திரியமுடியாது. அழகான உடல் என்பதற்காக அசுத்தமாக, ஆடை இன்றி இருக்கமுடியாது. கறிக்கு வாசனை ஊட்டும் கறிவேப்பிலை போன்றது தான் இந்த அலங்காரம். ஆனால் இன்று நாம் காண்பது கறிவேப்பிலையே கறியாக மாறுவதைத்தான். அளவுடன் இருக்கும்போது அழகுக்கு அழகு செய்யும் ஆடை அலங்காகரங்களால் அளவு மீறும்போது மனித ஆளுமையை சிதைத்து முன்நேற்றத்தின் தடைகற்களாக அமைந்துவிடுகின்றன.

அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல் உலகத்தை ஆக்கப்பாதையில் இட்டுச் செல்வதற்கென மனிதனால் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புக்கள் ஒரு கட்டத்தின் பின் உலகையே அழிப்பவையாக மாறிக்கொண்டிருக்கின்றன. மானுடத்தை போதித்த இலக்கியங்கள் இன்று வக்கிர உணர்வை தூண்டுவதற்கும் படைக்கப்படுகின்றன. அதுபோல்தான் மனிதனை மேம்படுத்தும் அழகுணர்ச்சியும்கூட காலமாற்றத்தால் விகாரமடைந்து தனது எளிமையை, தூய்மையை மேன்மையை மறந்து பகட்டு ஆடம்பரப் போக்குக்கு தன்னை பலிகொடுத்து நிற்கின்றது.

அடுத்தவர் கவனத்தை ஈர்ப்பதுதான் பெண்களின் நோக்கம் என்றால் ஆடம்பரத்தாலும், அலங்காரத்தாலும் அதை சாதிக்கமுடியாது. மனிதரை ஈர்ப்பது எளிமையான அழகு. நிலவும், மலரும் அருவிகளும் மனித மனத்தை ஆக்கிரமித்த அளவிற்கு மனிதனின் அளப்பரிய கண்டுபிடிப்புக்களை வானுயர்ந்த கோபுரங்களோ ஆக்கிரமிக்கவில்லை. மலரின் மென்மை, நிலவின் குளிர்மை, மரங்களின் பசுமை, மழலைகளின் பேச்சு போன்றவை மனிதனுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது போல் எதுவுமே கொடுக்கவில்லை. கண்ணைப் பறிக்கும் இரத்தச் சிவப்பு நிற முள்முருக்கம் பூ கூட எவ்வளவு அழகாக இருக்கின்றது. ஆனால் மென்மை, தூய்மை, வாசனை மிக்க மல்லிகை மலர் மனித மனத்தை ஆக்கிரமித்தளவிற்கு இதனால் முடியவில்லை.

அதுபோல்தான் உங்கள் அக அழகும், புற அழகும் இணைந்ததுதான் மனிதனை உங்களால் ஆக்கிரமிக்க, ஆளுமைப்படுத்த முடியும் என்பதை பெண்ணினம் புரிந்துகொள்வது அவசியம். மனித வாழ்க்கைப்பாதையில் இச்சைகளுக்கு மனிதன் அடிமையாகும் ஒரு குறுகிய காலப் பகுதிக்கு மட்டுமே பெண்கள் தமது அழகால், அலங்காரத்தால் அவனை ஆட்கொள்ள முடியும். அல்லது மேன்மையான எண்ணம் எதுவுமற்ற, பாலியல் வெறிகொண்டவர்களிடம் மட்டுமே உங்கள் அழகும் அலங்காரமும் சாதனை புரியமுடியும். வாழ்க்கை என்றால் என்ன என்பதை முழுமையாகப் புரிந்து அதன்படி நடக்க விழையும் மனிதனுக்கு தேவைப்படுவது அறிவும், ஆலோசனையும் மட்டுமே. ஆண்களை கவனித்துப் பாருங்கள், அறிவும், ஆளுமையும்மிக்க பெண்களிடம் அவர்களுக்கு இருக்கும் ஈடுபாட்டையும், அவர்கள் வழங்கும் மரியாதையையும். அழகுதான் வாழ்க்கைக்கு அடிப்படையெனில், இவ்வுலகில் அழகில் சிறந்த பலருக்கு ஏன் வாழ்க்கை இனிக்கவில்லை? என்பதை பெண் சமூகம் ஏன் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை?

## முடிவாக...

"தனது மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதனூடாக வாழ்க்கையின் வெளிப்புற அம்சங்களை மனிதனால் மாற்றமுடியும்" என்பதே மனித வர்க்கத்தின் முதன்மையானதும், முதல்தரமானதுமான கண்டுபிப்பாகும்" என்கிறார் உளவியல் மேதை வில்லியம் ஜேம்ஸ். உங்களை மாற்றியமைக்க உங்களால் முடியும்.

உங்களின் ஆற்றலை வீணான அலங்காரங்களில் செலவிடாது ஆளுமையை விருத்திசெய்ய பயன்படுத்துங்கள். உங்கள் உன்னத திறமைகளால், இவ்வுலகத்தை வழி நடத்தும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. அழகு சானங்கள், ஆடம்பர பொருட்களும், முதலாளித்துவம் உங்களுக்கு இட்ட அடிமைத்தளைகள். உங்களை அடிமைச் சிறையில் உழலவைக்கும் விலங்குகளை உங்களின் விருப்புக்குரிய பொருளாக மாற்றி நீங்களே உங்களுக்கு விலங்குகளை பூட்டிக்கொள்ளும்படி முதலாளித்துவம் எவ்வளவு திறனுடன் செயல்பட்டிருக்கிறது. நாடு விடுதலையடைய நீங்கள் விடுதலையடையவேண்டும். நீங்கள் அடுத்தவர்களிடமிருந்து விடுதலை அடைய வேண்டுமெனில் முதலில் உங்களிடமிருந்தே விடுதலையடைய முயற்சிக்கவேண்டும். ■



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சூரைக்கு மேலே மேகம் கவிய
குளிர்ந்த காற்று மேனி தழுவும்;
சோவெனப் பொழியும் வானம்.
நிலம் நனைய
வேர்கள் நீருறிஞ்சும்.
மரங்களின் முகத்தில் மந்தகாசம்.
ஏரெடுத்து நடப்பர் மண்ணின் புதல்வர்.
வயல் அவர்களுக்கு வாழ்க்கைப்படும்.
மறுநாள்
முழுகியதலையில் பூச்சொருகி
வாசலுக்கு வரும் வசந்தம்.
கூத்துடன் கழியும் பகலிரவு.
நேற்றுவரை
எம்மண்ணின் ஜீவிதம் இப்படியிருந்தது.
மெல்லச் சிணுங்கும் மெட்டியொலியாய்
காதுக்களவாய் இருந்ததெம் பாடல்.
புயலுக்கிது பிடிக்கவில்லைப்போலும்
நானே ஆள்வோன் நீயென் அடிமையென
அசுரப்பலமெடுத்து அடித்தது.
பாறிச்சரிந்தன யாவும்.
அழகாகப் பூத்த முற்றத்து மல்லிகைகூட
அதோ சடமாய்க் கிடக்கிறது.
புயலுக்குத் திரைபோட எழுந்தனர்
இளையபுத்திரர்.
எப்படி இயலுமென பிலாக்கணம் வைத்தன
சிலபல்லிகள்
முயன்று பார்ப்போம் என்றன இளசுகள்.
மெய்வருந்தக் கூலிதந்தது முயற்சி.
இன்று இளசுகள் மட்டுமல்ல
பழசுகளும் திரைக்குப் பக்கத்தில்
வரவிடோம் புயலையினி என
வாசமெங்கும் வைராக்கியம்.
நிமிர்ந்த வாழ்வுக்கான நினைவுடன்
அதோ களத்துமேட்டில் ஒரு காவலரண்.

**மாலிகா**





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உண்மை வரலாறுகள் என்றும் உறங்கப்போவதில்லை

இலங்கையில் வாழும் தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றையும் பண்பாட்டையும் இழிவுபடுத்தும் வகையில் அண்மையில் தென்னாபிரிக்காவில் வைத்து சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவால் திரிவுபடுத்திக் கூறப்பட்ட 'வந்தேறு குடிகள்' என்ற வார்த்தைக்கு மறு தாக்கமாக இங்கே சிலரது பேச்சுக்கள் இடைக்கிடை வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றன.

அந்த வகையில், தென்னிலங்கையில் உள்ள கெட்டிமுல்ல என்ற இடத்தில் வாழும் சிங்கள பௌத்த துறைவியான ராகுல தேரர் என்பவர் கூறிய ஒரு கருத்தானது ஜனாதிபதி சந்திரிகா கூறிய 'வந்தேறு குடிகள்' என்ற வார்த்தைக்கு எதிரானதும் அதேவேளை எவராலும் மறைத்துரைக்க முடியாததொரு வார்த்தையும் ஆகும்.

"வடக்கு – கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரிய தாயகம்" என்ற அவரது இக்கருத்தானது நிச்சயம் சிங்கள – பௌத்த போரினவாதிகளுக்கு மிகுந்த சினத்தையும், கொதிப்பையும் ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எவருமே சந்தேகம் கொள்ள முடியாது.

இன அழிப்பையே நோக்கமாக கொண்டு செயற்பட்டு வரும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் கோட்பாட்டிற்கு செட்டி முல்ல ராகுல தேரர் கூறிய கருத்துக்கள் எதிரானவையாக இருப்பதோடு, உள்ள யதார்த்தத்தை அவை தெளிவுபடுத்துபவையாகவுமே இருக்கின்றன.

"தமிழர்களின் வரலாற்று நூல்களில் மட்டுமன்றி சிங்கள வரலாற்று நூல்களிலும் வடக்கு – கிழக்குப் பிரதேசங்கள் தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்பதற்கான சான்றுகள் உண்டு" என்பதை அவர் தெட்டத் தெளிவாகவே விளங்கிக்

**அலெக்ஸ் பரந்தாமன்**

கொண்டவராய் அதை மக்களுக்கு முன் வெளிப்படுத்தவும் செய்துவருகின்றார்.

ஆனால், தமிழ்மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிராக இனவாத நோக்கத்துடன் செயற்பட்டு வரும் பல சிங்கள அமைப்புக்களில் ஒன்றான 'பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய அமைப்பு' கூறுவதென்னவெனில்: "பாடசாலைக் கல்வித் திட்டத்தில் ஒரு மாற்றம் கொண்டுவந்து, புலிகளின் செயற்பாட்டையும், அதன் பயங்கரவாதத்தையும் குறித்து பாடசாலைப் பருவம் முதலே மாணவர்களின் மனங்களில் பதியச் செய்தல் வேண்டும்" என அவ் அமைப்பு சிறீலங்கா அரசிற்கு ஆலோசனை ஒன்றைக் கூறியுள்ளது.

அதாவது, கல்வியைத் தொடங்கும் இளம் பிஞ்சுகளின் மனதில் ஒற்றுமை, சமத்துவம், புரிந்துணர்வு போன்ற நல்ல எண்ணங்களைப் புகுத்துவதற்குப் பதிலாக இனவெறிக்கான அறிவை புகட்டவேண்டும் என அந்த அமைப்பு ஆலோசனை கூறுகின்றது.

இதன் மூலம் எதிர்வரும் காலங்களிலும் சிங்கள இனம் தமிழர்களை அடக்கவும், ஆளவும், அவர்களது பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமித்து குடியேறவும் வழிவகுக்கப்படுகின்றது.

அத்தோடு, 'வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்த அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து கிராமங்களும் அடங்கும் வகையில் நூறு இராணுவக் கிராமங்களை' அமைக்கவேண்டும் என அந்த இனவாத அமைப்பு தனது ஆலோசனையைக் கூறும் போர் ஆக்கிரமிக்கப்படும் எமது பாரம்பரிய பிரதேசங்களில் இராணுவப் பாதுகாப்புடன் சிங்களவர்கள் குடியேற்றப்படுகையில் அக் கிராமங்கள் வளர்ச்சியடைவதோடு அங்குள்ள பாடசாலைகளில் இளம் சிறார்களுக்கு கல்வியறிவு நன்கு போதிக்கப்படுவதை யாவரும் அறியக்கூடியதாகவே இருக்கும்.

இதனால் எதிர்காலத்தில் இலங்கையில் வாழுகின்ற பலதரப்பட்ட இனங்களுக்கு மத்தியில் மேலும்



www.tamileelamarchive.com

வேற்றுமைகள் வளர்ந்து ஐக்கியம் சீர்குலைக்கப்படுவதோடு, கொலைகள், கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள், ஆட் கடத்தல் போன்ற சமூக விரோத செயல்கள் எண்ணிக்கையில் அடங்காத வகையில் எங்கும் பெருகிச் செல்வதை காணக் கூடியதாகவே இருக்கும்.

இதையே கெட்டிமுல்ல ராகுல தேரரும் சிங்களப் பேரினவாதிகள் வரலாற்றை திரிவுபடுத்திக் கூறுவதினால் வருங்காலச் சந்ததிகளுக்கு இலங்கையின் ஒட்டுமொத்த வரலாற்றுப் பதிவுகளுமே சந்தேகத்திற்கிடமாக மாறிப்போய்விடும் என எச்சரிக்கின்றார்.

அதாவது இன அழிப்புக்காய் இளம் சிறார்களுக்கு வரலாற்றை ஒவ்வொரு வரும் ஒவ்வொரு விதமாக திரிபுபடுத்தி போதிக்கும் போது அச்சிறார்களுக்கு தங்களால் உண்மை வரலாறு எது? என்பதே புரியாத நிலையில் அவர்களது உள்ளத்தில் இனவெறியும், தமிழர்களை அழித்தொழிக்க வேண்டும் என்ற கொலை வெறியுமே மேலோங்கி வளரத் தொடரும்.

இதேவேளை, "தமிழர் வரலாற்று நூல்களில் மட்டுமன்றி சிங்கள வரலாற்று நூல்களிலும் இலங்கையின் வடக்கு கிழக்கானது தமிழ் மக்களின் பிரதேசம் என்பதற்கான சான்றுகள் உண்டு" என்பதை ராகுலதேரர் அழுத்தம் திருத்தமாக கூறுகையில் சிறீலங்காவில் இன்னொரு தேரரான கோட்டை சிறிநாக விகாராதிபதி மாதுலுவாகவே சோதபித தேரர் என்பவர் அதற்கு எதிர்மாறாக தனது மன உளைச்சலை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

"சிறீலங்கா சிங்கள பௌத்த மக்களின் நாடாகும். இந்த நாட்டை வட – கிழக்காக கூறு போட்டு வேறுபடுத்த எடுத்துள்ள முனைப்பினால் இதுவரை பதினைந்தாயிரம் படையினர் தமது உயிர்களை இழந்துள்ளனர்" எனப் புலம்பியுள்ளார்.

தமிழர்கள் இலங்கையை ஏன் வட – கிழக்காகக் கூறுபோடுகிறார்கள்? என்பதை மட்டும் புரிந்து கொண்டிருப்பாரேயானால் சிறீலங்கா சிங்கள பௌத்த மக்களின் நாடு என்பதை மட்டும் இவர் கூறியிருக்க மாட்டார்.

> தமிழர்களின் வரலாற்றை திரிபுபடுத்தி அவர்களை வந்தேறு குடிகள் என உரைப்பதை நிறுத்தும் வரைக்கும் இலங்கையில் உயிர் இழப்புக்களும் சொத்துடமை நாசங்களும் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும்.

அத்தோடு, அவர் மேலும் கூறுவதானது, ஜனநாயக நடவடிக்கைகளிலும் தேர்தல்களிலும் நம்பிக்கை இழந்துள்ள எதிர்காலச் சந்ததியினருக்கு ஆயுதங்கள் மீது மோகம் கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது என்று கூறும் போது இலங்கையின் வடக்கு – கிழக்கை தமிழர்கள் ஏன் கூறுபோட முனைகிறார்கள் என்பது மட்டும் இவருக்கு விளங்கியிருக்க வேண்டும்.

சிறீலங்காவை மாறி மாறி ஆட்சி புரிந்து வருகின்றபேரினவாதக் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணி மீதும், ஐக்கிய தேசியக் கட்சி மீதும் நம்பிக்கையை இழந்துவிட்ட தமிழர்கள் ஆயுதங்கள் மீது மோகங் கொண்டு தமது வடக்கையும் கிழக்கையும் மீட்பதற்கே புறப்பட்டவர்கள் என்ற உண்மையையும் மாதுலுவாவே சோபித தேரர் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

ஏனெனில், கெட்டிமுல்ல ராகுல தேரர் கூறியிருப்பது போல் இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதற்கான சான்றுகள் சிங்கள வரலாற்று நூல்களிலும் உண்டு என்பதை மாதுலுவாவே சோபித தேரர் போன்றவர்களும், தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத அமைப்புக்களும் புரிந்து கொள்ளாமல் தமிழர்களின் வரலாற்றை திரிபுபடுத்தி அவர்களை வந்தேறு குடிகள் என உரைப்பதை நிறுத்தும் வரைக்கும் இலங்கையில் உயிர் இழப்புக்களும் சொத்துடமை நாசங்களும் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும்.

■

**தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்...**

பொருளுலகத்தை எந்தெந்த வடிவங்களில் சீரமைத்தாலும் ஆண்களின் மன உலகில் – பெண்மை பற்றிய அவர்களது கருத்துலகில் – ஆழமான மாற்றங்கள் நிகழாமல் பெண் சமத்துவம் சாத்தியமாகப் போவதில்லை.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழப் பெண்களின் அறைகூவல்

இன்றைக்கு பதினாறு வருடங்களுக்கு முன்பு தமிழீழத்தில் பெண்கள் பற்றிய கருத்துருவாக்கங்களும் எண்ணப்பாங்குகளும் இன்று போல் இருக்கவில்லை. சமூகத்தின் பல்வேறுபட்ட தேவைகள் அவர்களை வெளியே சென்றுவர அனுமதித்தபோதும், வேலிப் பாரம்பரியத்தின் இறுக்கமான தளைகள், தேச விடுதலைப் போராட்டத்துடன் அவர் இணைந்து கொள்வதற்குப் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வந்துள்ளது. அக்காலப் பகுதிகளில் தமிழீழ தேசம் எங்கணும் முகையவிழ்ந்த விடுதலை உணர்வும், போராட்டப் பங்களிப்பும் எமது பெண்களுக்குள்ளும் ஒரு தேடலைத் தூண்டியது. எனினும், பழமைவாதச் சித்தாந்தங்களால் வடிவமைக்கப்பட்டிருந்த சமூக அமைப்பு அத்தனை எளிதில் விடுதலைக்கான அங்கீகாரத்தை பெண்களுக்குத் தந்துவிடத் தயாராக இருக்கவில்லை. வழக்கம்போலவே பெண்ணின் ஆளுமையை மட்டுப்படுத்தவும் அறிவாற்றல் சார்ந்த செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும் அவர்கள் மீது ஒழுக்கநிலை அவதூறுகளையே முன்மொழிந்தது. எனவேதான் இந்த இறுக்கமான தடைகளைத் தாண்டியோ அல்லது உடைத்தோ வெளியேற முற்பட்ட, வெளியேறிய பெண்களின் தொகை ஆரம்பத்தில் மிகவும் சொற்பமாகவேயிருந்தது.

மக்களுக்கு மட்டுமே விசுவாசமான எமது விடுதலை இயக்கத்தின் ஒழுக்கநிலை பேணலும், தளம்பாத கொள்கையும், தனித்துவமான தலைமையும் மக்களின் மனதில் அசைக்க முடியாத அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டபோது எமது விடுதலை இயக்கத்தில் அணி சேர்ந்துகொண்ட பெண்களின் தொகையும், அவர்களின் ஆளுமை விருத்திகளும் உலகின் விழிகளையே வியப்பால் விரித்தன.

இது இவ்விதம் இருக்க சிங்கள பேரினவாதத்தின் தமிழின அழிப்புக் கோட்பாட்டினால் பெரும் பாதிப்புக்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் சந்தித்த தமிழ்ப் பெண்கள் விடுதலைப்போராட்டத்துடன் அணி சேருவது தவிர்க்கமுடியாத வரலாற்றுத் தேவையாக உருவெடுத்தது.

“மகளிர் படையணிகளின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும்”

என எமது மதிப்பிற்குரிய தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களே குறிப்பிடுமளவிற்கு பெண் போராளிகளின் அபாரமான ஆற்றல்களும், அர்ப்பணிப்புக்களும் அமைந்துள்ளன.

பெண்கள் போராளிகளாக மாறுவதற்கும், பெண் போராளிகள் தமது திறமைகளை நிரூபித்து தமக்கான இடத்தைப் பெறுவதற்கும் கடந்து வந்த பாதைகள் சாதாரண வார்த்தைகளால் விபரிக்க முடியாதளவு கடினமானவை.

ஆனால் மேற்குலகக் கல்விப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் சிலர் எம்மை விமர்சிக்கலாம். தம்மை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பெண்ணியவாதிகள் எனக் கூறிக் கொளும் பலர் எமது போராட்டப் பங்களிப்பைக் கொச்சைப்படுத்த லாம். அது அவர்களின் வரட்டு மேதாவித்தனம் என்பதை எம்மால் தெளிவாகவே உணர்ந்துகொள்ள முடியும். வெறும் தரவுகளை வைத் துக்கொண்டு தேற்றங்களை மட்டுமே நிறுவலாம் அதுதான் அவர்களால் முடிந்தது. ஆனால் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு தமிழீழப் பெண்ணின் கண்ணீரைக்கூட நியா யத்தின்பால் நின்று துடைத்துவிடு வதற்கு வக்கில்லாத இவர்கள், வெறும் வீண் பேச்சுக்காரர்கள். இவர்களின் முகத்திலே அறைவதுபோல இங்கே மாற்றங்கள் உருவாகிவிட்டன. விடுத லைப் போராட்டத்துடன் பெண்கள் நேரடியாக அணிசேர்ந்து பதினாறு வருடங்களின் பின் இன்று தமிழீழ மண் சந்தித்துள்ள பிரமாண்டமான மாற்றம்தான் இன்றைய சிறப்புச் செய்தி. தமது கண்ணீரைத் தாமே துடைத்துக்கொள்ளவும், தம்மைத் தாமே தற்காத்துக்கொள்ளவும் தயா ராகிவிட்ட பெண்கள் அணி, சாரி சாரியாக பயிற்சி மைதானங்களை நோக்கி நடக்கத்தொடங்கிவிட்டமை யானது, பலரையும் வாயடைக்கச் செய்துள்ளது மட்டுமல்லாமல் பல உண்மைகளை பறைசாற்றுவதாக வும் உள்ளது.

'தென் தமிழீழத்து அவலங்களும்', 'யாழ்ப்பாண மனிதப் புதைகுழிக ளும்', 'இடம்பெயர்ந்த துயரவாழ்வும்' எமது பெண்களிடையே வைராக்கி யத்தையும், விடுதலை உணர்வை யுமே வளர்த்துவிட்டுள்ளது. பெண் கள் வரை வயது வேறுபாடின்றி தமக்கான தற்காப்பு பயிற்சிகளை பெற்றுக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களிடம் பயிற் சியைப் பற்றி அளவளாவியபோது.

"எனக்கு குண்டெறியத்தனும் பழ க்கிவிடுங்கோ. எதிரி வீட்டுக்குள்ள வந்து என்னையோ என்ர பிள்ளை களையோ ஆக்கினைப்படுத்தினால் இரண்டு பேரையாவது கொண்டு போட்டுத்தான் சாவன்"

என உறுதியோடு கூறினார் ஒரு வயது முதிர்ந்த தாய்.

"யாழ்ப்பாணத்தில் எல்லாம் எத் தினை பேரைப்பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். அவையள யாரால காப்பாத்த முடிஞ்சுது. இதெல்லாம் எங்களுக்கு நல்ல படிப்பினையள். இனி எங்கட கைதான் எங்களுக்கு உதவி" எனக் குறிப்பிடுகிறார் ஒரு குடும்பத்தலைவி.

"நாங்கள் நேரகாலம் பாராமல் தொழில்களுக்குப் போய்வாற நாங்கள் எவ்வளவுதான் உழைச்சாலும் தனி யப்போய்வர ஒரு பயம் இருந்து கொண்டுதான் இருக்கும். ஆனால் இனி அந்தப் பயத்திற்கே இடமில்லை. எங்களை அறியாமலே மனதில் ஒரு துணிவும், தன்னம்பிக்கையும் வளருது" என்கிறார் அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருபெண்.

"யாழ்ப்பாணத்தில பள்ளிக்குப் போய்வாற பிள்ளையளோட தேவை யில்லாத சேட்டைகள் விடுகிறாங் களாம். பொம்பிளைப் பிள்ளையள கடத்திக்கொண்டு போய் பாலியல் வல்லுறவில ஈடுபடுத்திறாங்களாம், ம்.... எங்களிட்டை இனி இதுகள் நடவாது. அவன்ர ஆயுதத்தைப் பறிச்சு சுட்டுப் போட்டுத்தான் விடுவம்" என முழங்கினாள் ஒரு உயர்தர வகுப்பு மாணவி.

அந்த ஒளிரும் விழிகளின் நம்பிக் கையும், நிமிர்ந்த தோள்களின் கம்பீர மும் தமிழீழ மண்ணுக்கே உரித்தான போர்க் குணங்கள்தான். பாவாடை யும், சட்டையுமாய், சேலையும், பஞ் சாபியுமாய் மைதானங்களில் புழுதி கிளப்பியபடி ஓடிக்கொண்டிருக்கும் பெண்களின் வியர்வையில் நனையும் தமிழீழ மண் பொங்கிப் புளகாங் கிதம் அடைகிறது. கண்ணுக்கெட்டிய அளவு தூரம்வரை நீண்டு பரந் துள்ள பெண்கள் அணி, தமது கை களை ஒன்றுசேர உயர்த்தி "தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்" என விண்ணதிர முழங்குகின்ற அதேவேளை "எதிரியின் படைபலம் உடைத்து எமது தாயகம் வெல்வோம்" என்று நெஞ்சை நிமிர்த்தி அறைகூவல் விடுகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மௌனம் கலைத்து வெடித்த துப்பாக்கி

**லெப்.கேணல் நாதன்** **கப்டன். கஜன்**




மௌனம் கலைத்து
வெடித்தது துப்பாக்கி.
வெடித்த துப்பாக்கியின்
கந்தகப் புகை எழுதிச்
சென்ற
செய்தி அடிமையாய்
வாழுங்கள்;
அற்பத்தனமாய்
வாழுங்கள்

சிங்கள பௌத்த
பேரினவாத அரசின் திட்டமிட்ட அராஜகச்
செயலுக்குப் பலியாகிப் போனவர்கள் எங்கள்
நாதனும் கஜனும்
நீண்ட சிறீலங்கா அரசின் படுகொலைக்
கரங்களால்
பிரான்ஸ் தேசத்தின் லாசப்பல் தெரு இத்தத்தால்
சிவந்துபோனது. இரத்தச் சிவப்பில் வீழ்ந்து
கிடந்தவர்கள்
மனித நேசத்தின் மகத்தான முத்திரைகள் இரண்டு

எமது தேசத்தின் முழுமையான விடுதலைக்காக
முட்களிடையே மலர்ந்த ரோஜாக்கள் இவர்கள்.
வசதிகளையும் வாய்ப்புக்களையும் தேடி ஓடாது,
வாழ்க்கையை
அர்த்தமாக்கிய உன்னத வீரர்கள் இவர்கள்.

எம் நேசத்திற்குரியவர்களே,
நினைத்துப் பார்க்கிறோம்; ஒவ்வொரு கணமும்
மக்களின் விடிவை மனதில் நிறுத்தி நீங்கள் பதித்த
சுவடுகள் எங்கள் கண்முன்னே நிற்க எங்களின்
இதயம் கனக்கிறது. கனத்த இதயத்துடன் உங்கள்
நினைவுகளை நெஞ்சினில் நிறுத்தி, ஆழச்
செல்வோம்



உங்களின்
முன்மாதிரிகளை
பதாகைகளாகச் சுமந்து
தொடர்ந்தும் செல்வோம்
இதுவே, நாங்கள்
உங்களுக்குச்
செலுத்தும்
வீரவணக்கங்களாகும்.

எமது அன்பார்ந்த
மக்களே,
நேற்றைய தினத்தினை திரும்பிப் பாருங்கள்
எதிரி எம் தோளில் ஏறி நின்று எக்காளமிடுகிறான்
எங்கள் முன்னோர்களின் எலும்புகளைக் காட்டி
“அடிமைகளின்
எலும்புகள்” எனக் கூக்குரலிடுகிறான்.

இவைகளை எதிர்த்து “நாங்களும் இந்தப்
பூகோளத்தின்
சுதந்திரப் பிரஜைகள்” என ஓயாது குரல் கொடுத்த
நாதனும் கஜனும் மரணித்த செய்தி உங்கள்
நெஞ்சங்களை உலுப்பியிருக்குமே
உரிமை வேண்டி உயிரை ஈர்ந்தவர்
சொல்லிச் சென்ற செய்திதான் என்ன?

ஒன்றை மட்டும் நினைவிற் கொள்வோம்
அடிமையாய் வாழ்வதைவிட அற்பத்தனமானது
வேறெதுவுமில்லை. அடிமை வாழ்வைக் களையும்
வரையும்
அனைத்தும் எமக்கு இரவல்தான்.
உலகத் தமிழர்கள் எல்லாம்
விடுதலைக்காய் ஒன்றுபட்டார் என்ற செய்தி
கல்லறையில் தூங்கும் எம்மவர்க்குக் கேட்கட்டும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# துயரப்பறவைகள்

தீருவில் வெளியில் தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகளின் தீயெரிக்கும் 12 ஆண்டுகள் நினைவுகளுடன்...







சுபாஸ்

வீரர்களே!
உங்களின் முகங்களை
எங்களுக்கு ஒரு முறையேனும்
பார்க்க முடியாது போனதையிட்டும்

எங்களுக்காகவும்
நீங்கள்
எரிநெருப்பில் நின்று
களமாடியதையிட்டும்
என்றுமே காணமுடியாது போன
முற்றத்தில்
பூக்கள் மலர்வது போன்ற
உங்களின் புன்னகையையிட்டும்
நாங்கள் கலங்கினோம்

மழைத்துளி போன்று
வரண்ட மனங்களில்
சிந்தும் உங்களின் நினைவு
ஒரு வசந்த காலத்தை
எமக்கு ஞாபகப்படுத்துகிறது.

உங்களைப் போல...
உங்களைப் போல வாழ முடியாது
போனதையிட்டும்
உங்களுக்கருகிலேனும் நின்று
தொட்டு, ஆவி தழுவிடப் பேசும்
பாக்கியமும் இல்லாது போனதையிட்டும்
நாங்கள் கலங்கினோம்

வயல் வெளிகளிலோ
பசுமை நிறைந்த புல் வெளிகளிலோ
கானகங்களிலோ
நீங்கள் பாடிய பாடல்கள் எதுவுமே
எங்கள்
செவிகளில் ஏறாது போய்
துயரழந்திச் சாகும்

துயரப்பறவைகளாகிய எங்களுக்கு
தற்காலிகமாக
தங்கிய கூடுகளில்
ஒரு ஓநாய் அல்லது ஓநாய்க் கூட்டம்
ஒரு மரநாய் அல்லது மரநாய்க் கூட்டம்
தாக்கியழிக்க வருவதான பயம்

திசையெல்லாம்
முகமிழந்தலையும்
எங்களை எழுப்பும் சங்கீதத்தை
எப்படி
காற்றிலும் ஒழித்து வைத்தீர்கள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நாளைய மனிதருக்காக நமது இலக்கிய பணி என்ன?

எமது இலக்கியம் என்ற சொற்றொடர் ஒரு வித்தியாசமான அர்த்தத்தை உள்ளடக்கி நிற்கிறது. தமிழ்ப் பெருமக்கள் உலகெல்லாம் போராடிவாழும் காலமாகவே இக்காலம் திகழ்கிறது. அத்தோடு இம் மக்கள் ஆங்காங்கே தாம் வாழும் நாடுகளுக்கேற்ப தமது வாழ்வொழுங்கை மாற்றிக்கொள்ளவும் நேர்கிறது.

உண்மையில் மனித வாழ்வு தான் தேசத்தின் வாழ்வைப் பிரதிபலிப்பது. தான் எவ்வாறாக இருப்பின் அம் மக்களின் வாழ்வின் பிரதிவிம்பமே இலக்கியமாகவும் விரிகிறது.

தமிழகத்தில் வாழும் தமிழர்கள் ஆறுகோடி மக்களின் வாழ்வியல் ஒன்று ஈழத்தில் வாழும் தமிழினத்தின் வாழ்வுமற்றொன்றாக அமைந்துவிட்டது.

தமிழக வாழ்வில் பொதுவாக ஓர் அமைதிநிலை தென்பட்ட போதிலும் சமூகத்தின் தேசிய வாழ்வை ஊடறுத்து நோக்கும் ஒரு இலக்கியவாதிகளுக்கு அந்தச் சமூகத்தின் நெளிவு சுழிவுகள் பல தென்படவே செய்கின்றன. சாதிக்கலவரம், மதவெறி யாட்டம், பெண்ணியம், பொருளாதார ஏற்றத்தாழ்வின் தாக்கம் போன்ற பல முதலாளியத்தின் வளர்ப்புக் குழந்தைகளின் திருவுருவங்கள் அங்குள்ள இன்றைய இலக்கியப்பொருளாக அமைந்துவிடுவதோடு இந்தக் குறைபாடுகளைக் களைந்து மேல்நிலை காண்பதிலும் நாட்டம் காட்டப்படுகிறது.

எனினும் இவை எதுவுமே கண்ணில் படாது வானத்தில் முகில் ஏறி பயணம் செய்யும் படைப்பாளர்களும் உண்டு. இவற்றுக்கெல்லாம் சோதனை பாதனை என்று முத்திரையும் குத்தப்படுகிறது. நூறு புத்தகங்களை எழுதிக் குவித்துவிடவேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டுள்ளோரும் உண்டு. இதனை வாசிப்பதற்கு ஒரு கூட்டம் இருக்கவே செய்கிறது. தரமான வாசகர்கள் இல்லாத குறைபாடாக



இது இருக்கலாம்.

சாளஸ் டிக்கன்சோ, லியோடால்ஸ்டாயோ இலக்கியத்தில் சோதனை நடாத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் திசைதப்பிய வாழ்வின் பயங்கர அமைவை கோடிட்டுக் காட்டினார்கள். தாழ்ந்துபோன மனிதரின் அவலத்தை தெளிவாகப் படைத்து அவற்றின் பால் அனுதாப அலையை தோற்றுவிக்கும் நோக்குடன் தமது படைப்புகளைப் படைத்தார்கள். ஆண்டவனால் ஏற்படுத்தப்படாத வசதி படைத்தவர்கள் வசதியற்றவர்கள் மீது ஏற்படுத்தும் கொடுமைகளின் பால் வாசகனும் விரக்தியை ஏற்படுத்தி இந்த சீரழிந்த சமுதாயத்தில் மாற்றத்தை துரிதப்படுத்துவதாக அமைந்தது அவர்கள் படைப்புகள். இதுவே அவர்கள் தமது ............. மூலம் செய்துகொள்ளவிருந்த அறுவடையுமாகும்.

இலக்கியம் மகாசக்தி வாய்ந்ததெனலாம். கண்ணகியை பத்தினி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தெய்வமாக்கியதும் இராமனுக்கு கோயில் கட்ட வைத்தது இலக்கியத்திறனே. மாக்ஸிம் கரர்கியின் தாய் நாவலில் உலாவிய 'ப வேல்' ருஷிய தேசத்திலும் பல பாவேல்களை உருவாக்கிவிட்டது என்பார்கள் திறனாய்வாளர்கள்.

எனவே, கைக்கத்தியை எடுத்து கழுத்தை நறுக்காது கத்தரிக்காயை வெட்டலாம். இலக்கியத்தை நல்ல வழிகளில் பயன்படுத்துவது இலக்கிய கர்த்தாக்களின் படைப்பாகும்.


இந்நிலையில் தமிழீழத்திலோ இலங்கையிலோ பேனா என்ற மேழிபிடிப்போர் மனித மனங்களை செவ்வனே உழுது பயிரிடல் காலகட்ட கட்டளையாகிறது.

இலங்கைச் சரித்திரத்திற்கு முற்பட்ட காலந்தொட்டு எமது மண்ணில் வேரூன்றி வாழ்ந்த தமிழ்க் குடிகள் வந்தேறு வடநாட்டுக் குடிகளால் ஒடுக்கப்பட்டும் பின்னர் பெரும்பான்மையாகி நம்மை ஆளப்பட்டதிலிருந்து இன்றுவரை சிறுபான்மையாகிவிட்ட தமிழினம் துரோகச் சதியினால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டதின் விளைவே இன்றைய தமிழீழத்தின் விடுதலைப் போராட்டமாகும். இனத்தைக் காக்க தேசத்தை விடுவிக்க சிங்களப் படைகளுடன் தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெறும் இப்போரிலே பகைவன் நம்மை ஒட்டுமொத்தமாக அழித்தொழிப்பதிலிருந்து நம்மை நம்பாது காப்பதோடு வெற்றி களையும் சந்திக்கிறோம். தமிழினத் தின் மீது தொடுக்கப்பட்டுள்ள அநாகரீகமான இந்த பயங்கரவாதப் போர் இன்று ஜனநாயக உலகின் கண்களை திறந்தும் உள்ளது.

எனினும் எதிரியின் இப் போரிலே இன அழிவு என்றல்லாமல் இன அழிவுக்கு முன்னரே ஒரு கலாச்சார அழிவையும் அவன் தொடங்கி நடாத்துகிறான். இதில் அச்சத்தை தருவது பண்பாடு, கல்வி ஆற்றல் போன்றவையின் பின்னடைவே. இது நாளை வாழப்போகும் தலைமுறைக்கு எதிரே உள்ள பலத்தை அச்சுறுத்தலாகும்.

தொன்று தொட்டு நமது மக்களிடையே வேரூன்றி வளர்ந்து நிலைத்த நற்பண்புள்ள தார்மீக சிந்தனைகள் அறிவுத்திறன், உண்மை, நேர்மை, பழக்கவழக்கம் போன்ற விழுமியச் சிறப்புகள் யாவும் யுத்தத்தின் கோரத்தால் மறக்கப்படுகிறதை எங்கிலும் அவதானிக்கமுடிகிறது.

கடும் போரிலும் தர்மத்தை நீதியை கடைப்பிடித்து ஒழுகியவன் தமிழன் இன்று கூட நமது விடுதலையைப் போரில் தலைவர்



அவர்களின் பணிப்பிலே எதிரியின் உயிரற்ற உடலும் தக்க மரியாதை களுடன் நடாத்தப்படுகிறது.

ஆனால் எதிரியிடம் நாம் காண்பது வேறு காட்டுமிராண் டிப்போக்கில் அவன் அப்பாவிக ளைச் சாவிடுவதும் சொல்லொணாச் சித்திரவதைகளுக்கு ஆளாக்குவதும் நாளாந்த சம்பவங்களாகும்.

இத்தகைய துயரங்களாவன இளைய சந்ததியினரின் மனதில் பாரிய தாக்கத்தையே உருவாக்குகின்றது. மனிதநேயம், பாசம், இரக்கம், நேர்மை போன்றவை விலகிவருகிறது. இவை மறைந்து கொண்டிருக்கும் பழைய சந்ததியோடு மறைந்துவிடும்போல் தோன்றவில்லையா? இது எத்தகைய மாபெரும் மனித வீழ்ச்சி என்பது சிந்திக்கத் தக்கது.

இவை அற்றுப்போன நாளைய மனிதன் உண்மையில் மனிதனாக நடமாட முடியுமா? மனிதத்தை இழந்த மனிதன் வெறும் ஜடமாகத் றோபோக்களாக அல்லது விலங்குகளாகவே நடமாடமுடியும்.

இந்த உயிர்ப்பு உள்ள மனநிலையை மீண்டும் நழுவ முடியாது பேணவேண்டியது சகல அறிவுத் துறையைச் சார்ந்தோரின் பெரும் கடனாகும், கல்லூரி ஆசிரியர் முதற்கொண்டு கலைத்துறைப் பணியாளர்கள் யாவரும் இதனைச் சிந்தித்து கடமை புரியவேண்டும்.

எதிரியால் அழிந்து கொண்டிருக் கும் ஒரு சமூக கட்டமைப்பை நாம் விடுதலை பெறும் வரை கட்டிக் காக்க வேண்டியது நமது இலக்கியப் படைப்பாளிகளது கடமையாகும். எமது படைப்புகள் வீரர்களை மட்டுமல்ல விவேகிகளையும் உருவாக்கித்தரல் வேண்டும். நமது இலக்கிய சர்ச்சைகளில் இப்புதிய பிரச்சினை சர்ச்சைக்குள்ளாக வேண்டும்.

எதிர்கால மனிதனை ஒரு தமிழனை தடம் புரளாத பண்பாடுடைய மனிதனாக புடம் போட்டெடுக்கப்படல் வேண்டும்.

இதனை நமது தமிழீழத் தலைமை கரிசனையோடு செய்துவரவே செய்கிறது.

கதைகளில் நாடகங்களில் நல்ல பாத்திரங்களை தோற்றுவித்தல் விடுதலை உணர்வு, வீரதீரம் போன்றவையோடு தர்மம், நீதிபோன்றவையும் நிலைநிறுத் தப்பட்டு, அவையால் மனித உள்ளங்களை ஆகர்சிக்க ஆவண செய்வோமாக. நாளைய விடியலுக்குப் பின்னர் சமத்துவ சகோதரத்துவ வாழ்நிலை உருவாகவேண்டும். உருவாகும் என்பதும் உறுதி. இதுவே நாளைய மனிதனுக்கு நமது இலக்கியப் பணியாகும்.


**அகிலநாயகன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நேர்காணல்



## மிருதங்கக் கலைஞர் சதா வேல்மாறன்

1987-ம் ஆண்டு தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்த வேளையில், விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட 'திலீபன் கீதாஞ்சலி'ப் பாடல்களில் சதா வேல்மாறனின் தாளங்கள் சங்கமித்தன. அன்றிலிருந்து தொடர்ந்து தாயக விடுதலைப்பாடல்களின் உருவாக்கங்கள் எல்லாவற்றிலும் வேல்மாறனின் கைவிரல்கள் நாதத்தைப் பொழிந்துகொண்டே இருக்கின்றன. வேல்மாறன் ஒருபல்துறை இசை விற்பன்னர். தோல் வாத்தியங்களில் புதிது, புதிதாக, நுட்பமாக இசையைத் தரவேண்டும் என்று சிந்திப்பவர். சுயதேடல் மிக்கவர். புதிய இசைபற்றிய கனவுகளுடையவர். அமைதியும் வஸீகரமும் மிக்க இந்த இளம் இசைக்கலைஞர், தமிழீழத்தின் எல்லா இசை அமைப்பாளர்களுடனும் இணைந்து பணியாற்றி வருகிறார். பல ஒலிநாடாக்களின் சிறப்புக்கு உணர்வாழம்மிக்க இசைவழங்கி பாராட்டுகளைப் பெற்றவர். விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டுக் கழகத்துடன் நீண்டகாலமாக இணைந்து நின்று செயற்பட்டு வருபவர். இசையால் உலகாளும் ஆசைகொண்ட வேல்மாறன் சங்கீத சாஸ்திரத்திலும் ஞானம்மிக்கவர்.

இன்றிலிருந்து சரியாக 20 ஆண்டுகளுக்கு முன்னர் எனது அப்பாவிடம் ஒருவர் ஹார்மோனியம் வாசிக்கக் கற்றுக் கொண்டிருந்தார். அக்கறையுடன், முகமலர்ச்சியுடன், வாத்தியம் வாசிக்கும் நுணுக்கங்களை அறியும் வேகத்துடன் பயின்று கொண்டிருந்தார். தனது தந்தையாரின் வில்லிசைக்கு இவர் ஹார்மோனியம் வாசிப்பதாக நான் அறிந்தபோது அவரின்பால் எனக்கு ஒருவித ஆச்சரியம் ஏற்பட்டது. அப்போது அவரிடம் இருந்த அடக்கம், துடிப்பு, முகமலர்வு இன்றும் என்னைக் கவர்ந்துதான் வைத்திருக்கிறது. என்னுடன் இணைந்து இசையமைப்புக்களில் ஈடுபடும்போது அவரிடம் இருக்கும் புதியவற்றுக்கான தேடல், விடாமுயற்சி, சலிப்பின்மை என்பன எப்போதும் அவர் மீது எனக்கு மரியாதையை ஏற்படுத்திவருகின்றன.

இசையமைப்பாளர்
முரளி
18.05.99

## "போராட்டமே வாழ்வைத்தரும்"

☞ இன்று எம் மத்தியில் பிரபல முற்றிருக்கும் இளம் மிருதங்க வாத்தியக் கலைஞரான தங்களது வாழ்க்கைப் பின்னணி, வளர்ந்த முறைமை, அதில் தாங்கள் பெற்ற அனுபவங்கள் பற்றி முதலில் அறியத்தாருங்கள்?

✍ நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் கலைகளின் செறிவு மிகுந்த சூழல்களில்தான் என்று சொல்லலாம். எனது தந்தையார் ஒரு பல்லியக் கலைஞர். அவர் ஒரு சிறந்த வில்லிசைக் கலைஞராகவும், பாடகராகவும், கவி புனைபவராகவும், கதா




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காலட்சேப விற்பன்னராகவும், நடிகராவும் இன்னும் பல திறமைகளுடன் தமிழ் மக்கள் எல்லாராலும் அறியப்பட்டவர் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவரது பெயர் சபா. சதாசிவம். 'அம்பிகை வில்லிசைக் குழு' என்ற பெயரில் பல நூற்றுக் கணக்கான வில்லிசை நிகழ்ச்சிகளினை நிகழ்த்தியுள்ளார். இலங்கை வானொலியில் பலகாலம் வானொலிக் கலைஞராகவும் இருந்திருக்கிறார். நான் சிறு வயதில் வளர்ந்த சூழல், எனக்கு வாய்த்த நண்பர்கள், எங்கள் வீட்டிற்கு நாளாந்தம் வந்துபோகும் கலைஞர்கள் இப்படிப் பல காரணங்கள் என்னை, கலை வாழ்விற்கு என்னையறியாமல் இழுத்துச் சென்றன. 'சின்ன மதுரை' என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இணுவிலில் எனது சிறுவயது வாழ்வு அமைந்தது. எல்லாராலும் அறியப்பட்ட தவில் மேதை இணுவையூர் என்.ஆர். சின்னராசா அவர்கள் எனது தந்தையாரின் நெருங்கிய நண்பர். அந்த மேதையின் வாழ்விடம் அமைந்த வளவிற்குள் எங்களது வீடும் அமைந்திருந்தது. அந்த மேதையின் நாதமழை நனைந்த முற்றத்தில் விளையாடும் பாக்கியம் எனக்கு. அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் நாதஸ்வரம், தவில் ஓசைகள் தேனாய்ப் பாய்ந்து எம்மைத் துயிலெழுப்பும். பேந்தென்ன, காலை முதல் மாலை, இரவு, கண்விழிக்கும் நேரமெல்லாம் இசையின் அற்புதங்கள்தான். அந்த தவில் பாடங்களினைச் சொல்லிக் கொடுக்கும்போது அவரின் மடியில் இருந்து பார்க்கும் வாய்ப்புப்பெற்றவன்நான். பழைய யாழ்ப்பாணம் உங்களுக்குத் தெரிந்ததுதானே, எங்கு பார்த்தாலும் கச்சேரிகள், சங்கீத சபாக்கள், இசை விழாக்கள், திருவிழாக்கள் என எங்கும் மங்களம் கொட்டிக் கிடக்கும் காலம். அந்த நேரத்தில் தென்னிந்தியாவில் இருந்து பல இசைக் கலைஞர்கள் இங்கு வந்து தமது வித்தைகளைக் காட்டிச் செல்வார்கள். இப்படியான சூழல் காரணிகள்தான் என்னை இந்தளவிற்காவது வளர்க்கக் கூடியதாக அமைந்தன.

☞ தாங்கள் பெற்று உயர்ந்திருக்கும் இந்தக் கலையை எப்படி? எவர் மூலம்? எவ்வகையில் பெற்றீர்கள் என்பதையும் இன்றைய இந்த வளர்ச்சிக்கு வித்திட்ட உங்களை வளர்த்துவிட்ட கலைஞர்களைப் பற்றியும் கூறுங்கள்?

✍ சிறுவயதிலேயே எனது தந்தையாரின் நிகழ்ச்சிகளுக்குத் தாளம் போடுவதற்குச் செல்வேன். தந்தையாரின் மனவிருப்பம் என்னை ஒரு பாடகனாக ஆக்குவதுதான். ஆனால்



எனக்கு வாத்தியங்களில்தான் ஆர்வம் மிகுந்து இருந்தது. குறிப்பாக தாளவாத்தியங்களில். எனது ஆர்வத்தை உணர்ந்துகொண்ட தந்தை என் 10–வது வயதில் அவரே, எனது ஆரம்பக் குருவாக இருந்து மிருதங்க வாத்தியத்தின் ஆரம்பப் பாடங்களைக் கற்றுத்தந்தார். அதன்பின், அந்தக் கலையை நான் முறைப்படி கற்றுத்தேற வேண்டும் என்ற பெருவிருப்பில் அப்போது புகழ் பெற்றிருந்த யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் திரு.வே.அம்பலவாணர் அவர்களிடம் என்னைச் சேர்ப்பித்தார். அவர் புகழ்பெற்ற வயலின் வித்துவான் திரு. அ.ஜெயராமன், மற்றும் இலங்கை வானொலி மிருதங்க கலைஞர் திரு.அ.ரகுநாதன் ஆகியோரின் தந்தையார் ஆவார். அவரிடம் நான் மிகுந்த விருப்புடன் மிருதங்கக் கலையை இரண்டு ஆண்டுகள் கற்றேன். அதன்பின் எனது துரதிஷ்டமோ என்னவோ எனது குரு திடீரென்று சுகவீனம் காரணமாக இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார். அது எனக்குப் பேரிழப்பு. அதன்பின் மருதனாமடம் இராமநாதன் நுண்கலைப்பிரிவிலே மிருதங்க விரிவுரையாளராக இருந்த திரு.எஸ்.மகேந்திரம் அவர்களிடம் மூன்றாவது வருடப் பயிற்சியைப் பெற்றேன். அதன்பின், மிருதங்க விரிவுரையாளர் திரு. எம்.சிதம்பரநாதன் அவர்களிடம் அண்ணாமலை கலைத்தமிழ் மன்றத்தில் தொடர்ந்து மிருதங்க கலையைக் கற்றேன்.

இன்றைய இந்த வளர்ச்சிக்கு என்னை ஆளாக்கிய கலைஞர் என்று சொல்லும் போது முதலில் நான் எனது தந்தையாரின் வில்லிசை நிகழ்ச்சிகளுக்கு வில்லிசைக்குரிய பாணியில் வாசித்து வந்தேன். எனவே முதலில் என்னை தமது பக்கவாத்தியக் கலைஞராக ஏற்றுக்கொண்டு களம் தந்த கலைஞர் எனது தந்தையார் எனலாம். அதன்பின்னர் ஈழநல்லூர் தமிழ்மணி திரு.சுப.கணேசசுந்தரன் அவர்களின் கதாகாலட்சேபங்களுக்கு மிருதங்கம் வாசித்தேன். என்னை ஒரு தாளவாத்தியக் கலைஞராக ஆக்கவேண்டும் என்ற பெருவிருப்புக் கொண்டு என்னை ஆளாக்கிய கலைஞர்களில் ஈழநல்லூர் தமிழ்மணி திரு.சுப.கணேசசுந்தரன் அவர்கள் முக்கியமானவர். என்னை இசை நாடகங்களுக்கு மிருதங்கம் வாசிக்க அறிமுகப்படுத்தி, அதற்குரிய தனிப் பாணியை அறியவைத்து வழிகாட்டியவர் ஆர்மோனியக் கலைஞர் உரும்பிராய் திரு.பிலிப்யோன் கவாஸ் அவர்கள். இவருடன் வில்லிசைக் கலைஞரான சாம்பசிவ சோமஸ்

**கலைஞர்கள் மட்டுமல்ல, எவருமே இந்த விடுதலைப் போராட்டத்தின் நிழலில் இருந்து ஒதுங்கமுடியாது.**




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கந்தசர்மா அவர்கள் எனது இசை வளர்ச்சிக்கு கணிசமான பங்கும் பாத்திரமும் வகித்துள்ளார். எனது மிருதங்க அரங்கேற்றத்தை இவரே முன்னின்று நடத்தி எனது வளர்ச்சிக்கு வழிகோலியவர்களில் ஒருவராகின்றார் எனது குருநாதர் திரு. அம்பலவாணர் அவர்களின் பிள்ளைகளான ஸ்ரீனிவாசன், ஜெயராமன், இராமச்சந்திரன், ரகுநாதன், ஸரஸ்வதி ஆகியோர் தமது தந்தையாரின் மறைவுக்குப் பிறகு தமது வீட்டில் மிருதங்க கல்வி கற்றுவந்த பிள்ளைகளுக்கு என்னை ஆசிரியராக நியமித்து என்னை ஊக்குவித்தமையை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். ஈழத்தின் இசைநாடக மேதை திரு. வி.வி. வைரமுத்து அவர்களின் பல இசை நாடகங்களுக்கு நான் மிருதங்கம் வாசிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இதன் மூலம் நான் பல அனுபவங்களைப் பெற்றுக்கொண்டுள்ளேன். கர்நாடக சங்கீத இசைக்கச்சேரிகளுக்கு அதன் வழி நுட்பங்களுடன் வாசிக்கும் முறை பற்றி எனது நண்பர் கண்ணதாசனுடன் கலந்து வாசித்து அறிந்துகொண்டேன். அதன் பின்னர் எனது நண்பரும் வழிகாட்டியுமான "ராஜன் இசைக்குழு" அமைப்பாளர் திரு. யாழ் ரமணன் அவர்களின் நட்பு எனக்கு கிடைத்தது. அவரது இசைக்குழுவிலும் தபேலாக் கலைஞராக பங்கு பற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. தென்னிந்திய இசைப்பாடல்களை அப்படியே அதன் வழிமுறை தவறாது பிரதிபண்ணிச் செய்வதில் அந்த இசைக்குழு பிரபல்யம் பெற்றிருந்தது. அதில் அங்கம் வகித்தமை எனது இசை வாழ்வில் முக்கிய திருப்பம் எனலாம். அடுத்து எங்களது மண்ணில் நடக்கும் விடுதலைப்போராட்டத்தின் விழுமியங்களினை உலகெங்கும் எடுத்துச் சொல்லும் தாயக விடுதலைப்பாடல்களுக்கு தாள வாத்தியங்கள் வாசிக்கும் சந்தர்ப்பங்கள் உருவாகின. எங்களுக்கே என்றானதொரு தனிப்பாணியில் விடுதலைக் கீதங்களை அமைத்த திரு.கண்ணன் மாஸ்ரர் அவர்களின் இசையமைப்புக்களில் வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பின் அவரது மகன் திரு.கே.முரளி அவர்களின் இசை ஒலி நாடாக்களுக்கு வாசிக்கத் தொடங்கி இன்றுவரை வாசித்து வருகிறேன். மற்றும் திரு.ரமணன் அவர்களினதும், திரு. எஸ்.பி. அண்ணை (ஈஸ்வரநாதன்) (தமிழீழ இசைக்குழு) ஆகியோரின் இசையொலி நாடாக்களுக்கும் வாசித்து வருகின்றேன்.இவர்கள்தான் என்னை இந்த இசைச்செல் நெறியில் வளர்த்து விட்ட கலைஞர்கள் எனலாம்.

☞ இன்று தமிழர் வாழும் இடமெல்லாம் பேசப்படும் எமது தாயக விடுதலைப் பாடல்களின் உருவாக்கத்தில் எம்மோடு இருக்கும் கலைஞர்களில் நீங்கள் நெடுங்காலமாக உழைப்பவர். அது மட்டுமல்ல, இன்றும் தொடர்பவர் என்ற பெருமைக்குரியவரான நீங்கள் எமது பாடல்கள் பற்றியும், இனி அதன் வளர்ச்சிச் செல்வழி எப்படி அமையவேண்டும் என்பது பற்றியும் கூறுங்கள்?



✍ இன்று உருவாகி வரும் விடுதலைப் பாடல்களை எடுத்துக்கொண்டால், விடுதலைப் பாடல்கள், தாயக உணர்வுக் கவிதைகள், எழுச்சியூட்டும், உணர்வூட்டச் செய்யும் இப் பாடல்கள் அல்லது கவிதைகளிலிருந்தும், அதற்கான இசை அமைப்புக்களிலிருந்தும் இதுவரை வந்த பாடல்களிலிருந்தும் வேறுபட்டுள்ளது. இதை நான் விளக்கமாக கூறுவதானால் ஒரு மரபாகவே வளர்ந்த காதல், பக்தி, வீரம் மற்றும் சமூகத்தின் பலதரப்பட்ட உணர்வுத் தளத்திலிருந்து பிறந்த பாடல்களிலிருந்து எமது தாயக விடுதலைப் பாடல்கள் இதே உணர்வுகளை வெளிப்படுத்திய போதும் புதியதொரு மாற்றத்தையும் மரபையும் வரித்துக் கொண்டுள்ளன. இந்தப் பாடல்களுக்கும் எனக்கும் கணிசமான நெருங்கிய உறவு உண்டு. இவற்றின் உருவாக்கத்தில் எனது உழைப்பும் இரண்டறக் கலந்துள்ளது. அந்த நேரடி அனுபவத்திலிருந்து நான் பெற்றுக் கொண்டதை இங்கு கூற விளைகின்றேன். மேற்குறிப்பிட்ட உணர்வுகளை இப் பாடல்கள் கொண்டுள்ள போதும் அடிப்படை உயிரோட்டமான கவிதை நயம், இசை நயம் போன்றவற்றுக்கு ஒரு வரைவிலக்கணம் உண்டு. அவை மீறப்படலாகாது என்பதில் எனக்கு தீர்க்கமான முடிவும் உண்டு. எனினும் காலத்தின் தேவை கருதியும் புதியனவற்றை உள்வாங்கிக் கொள்ளும் பொருட்டும் வேர்களுக்குப் பங்கம் இல்லாதவாறு கிளைகள் பூப்பதை நான் விரும்புகின்றேன்.

☞ சாஸ்திரிய மரபுவழி முறைப்படி மிருதங்கக் கலையைக் கற்று இன்று முன்னணி வகிக்கும் தாங்கள் வடஇந்தியத் தபேலா வாத்தியக் கலையிலும் சிறந்து விளங்குவதாகப் பலரும் கூறுகின்றனர். இந்தத் தபேலா வாத்தியப் பயிற்சி பற்றியும் அதன் பலன் பற்றியும் கூறுக?

✍ தமிழர்களுடைய வாழ்வுடன் இணைந்த தாளவாத்தியக் கருவிகளான மிருதங்கம், தவில் போன்ற வாத்தியக் கருவிகளைப்போல வட இந்திய வாத்தியக் கருவியான தபேலாவை இங்கு கற்றுக் கொள்வது என்பது அரிதாகவே இருந்தது. எனவேதான் அடிப்படையான மிருதங்க வாத்திய சொற்கட்டுகளை வைத்துக் கொண்டே தபேலாவின் வாசிப்பு முறையை ஒலிநாடாக்கள் மூலமாகவும் வானொலி மூலமாகவும் அதன் தொனிகளைக் கேட்டும் மிருதங்க சொற்கட்டுக்களிலிருந்து சில மாற்றங்களை செய்தும் அதை அழகுபடுத்தி வாசித்துவருகிறேன். ஆனால் இது இவ்வாத்தியத்திற்குரிய அடிப்படையான கற்றல் முறை அல்ல. எனது தலைமுறைக்கு கிட்டாத இந்த வாய்ப்பு இனி வரும் இளைய தலைமுறைக்காவது கிட்டவேண்டும் எனும் பெருவிருப்புடையேன். அப்போதுதான் அது ஒரு பூரணமான தபேலா வாசிப்புக் கலையாக அமையும்.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

☞ எம் மண்ணிலே விடுதலைப் பாடல்களை உருவாக்க முனைந்த ஆரம்ப நாட்களில் அதன் உருவாக்கத்தின் மூலவர்களில் ஒருவரான நீங்கள் தொடர்ந்தும் எமது போராட்டத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறீர்கள். இன்றும் தொடர்ந்து பணியாற்றி வருகிறீர்கள். வெளிச்சத்தத்தினூடாக இன்று வளர்ந்துவரும் கலைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

✍ இன்றைய இளங்கலைஞர்கள் இசைத்திறன் உள்ளவர்களாக இருப்பினும் அடிப்படை இசை நுணுக்கங்களையும் அதாவது ராகம், தாளம் சம்பந்தமான இசை நுட்பங்களை கற்றறிந்து செயற்படுதல் முக்கியம். பாடல்களாக இருந்தாலும் வாத்தியங்களினால் இசைக்கப்படும் இசையானாலும் பாடல் வரி அல்லது பாடலின் மையக் கரு எப்படி உள்ளதோ பாடலுக்கான சம்பவங்கள், சூழ்நிலைகள் எப்படி உள்ளதோ அதற்கமைய இசை அமைத்தல் வேண்டும். அதைப்போல் பாடகர்களும் பாடல் எப்படி அமைந்துள்ளதோ அதன் சந்தர்ப்பம் எவ்வாறு உள்ளதோ அதை மனதில் வைத்து பாடல்களுக்கு பாடல்வரிகளுக்கு உயிர் கொடுத்துப் பாடவேண்டும். தொழில்நுட்பஅறிவு வளர்ச்சியுற்றிருக்கும் இக் காலத்தில் இசையானது தொழில்நுட்பத்துடன் பின்னிப்பிணைந்து அதாவது கணனி சம்பந்தமான அறிவுடன் கூடிய இசையாக வளர்ந்துவிட்ட இக்காலத்தில் நாங்கள் இசை சம்பந்தமான அறிவுடன் மட்டும் நில்லாது தொழில்நுட்ப அறிவினையும் பெற்றிருத்தல் வேண்டும். இது அவர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும். உதாரணமாக நாம் ஒருபாடல் ஒலிப்பதில் ஈடுபடும்போது வாத்தியக் கருவிகளின் நாதம் சுத்தமாக தொனிப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்திருத்தல் வேண்டும். அத்துடன் கணனி முறையிலான வாத்தியக் கருவிகளையும் பாரம்பரிய இசைக் கருவிகளையும் இணைத்து தொழிற்பட வைக்கும்போது இவைகளின் சப்தத்தின் ஆழம், ஏற்றம் என்பவை எப்படி அமைய வேண்டும் எனும் தொழில்நுட்ப அறிவு இருத்தல்வேண்டும். இவை அனைத்திலும் முதன்மையாக நான் சொல்லக்கூடியது யாதெனில் வளர்ந்துவரும் கலைஞர்கள் ஒழுக்கமுடைய நல்ல பண்புகளை உடையவர்களாக சக கலைஞர்களை மதித்து அன்புடன் பழகுதல் சிறப்பு. பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு படைப்பை உருவாக்கும் போது சக கலைஞர்களுடன் இணைந்து பேசித் தீர்மானித்து படைப்பு சம்பந்தமான



முடிவை திறம்பட எடுக்கவேண்டும். ஒரு படைப்பு என்பது கூட்டுமுயற்சியாகவே அனேகமாக அமையும். இதன்போது மற்றவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுத்து பொறுமையுடன் நடந்துகொள்ளுதல் நல்லது.

☞ மரபுமீறல்; மீறலிலும் மரபுபேணல் என பல கருத்துக்கள் இன்று விவாதிக்கப்படுகின்றன. இதில் தங்களது கருத்தென்ன?

✍ புதியன யாவும் ஒரு வழியில் பழையவற்றின் மீறல்களேதான். அசையாதனயாவும் தேங்கியே நிற்கும். இங்கே நான் மீறல் என்று கூறுவது ஊருக்குள் புகுந்த வெள்ளம் போல அல்ல, கரைகளுக்குள் அடங்கிய ஆற்றைப் போன்றது. மீறல் என்பதும் இது போன்றதே. மரபுக்குள் கரைபுரண்டு பாய்வதே புதியது. இசைத்துறைக்கும் இது பொருந்தும் என்றே நான் கருதுகிறேன். நாட்கள் புதியனவாக விடிகின்றனவே ஒழிய சூரியன் பழையதே. இதுபோலவே இசை வடிவங்களும் அடிப்படை இசை மரபிலிருந்து மீறியும் மீறாமலும் வசதிக்கேற்றவாறு ஒரு ஒழுங்கில் மக்கள் ரசனைக்கு ஏற்றவாறு ஜனரஞ்சகமான படைப்பாக தம்மை மாற்றி அமைதல் வேண்டும்.

☞ எமது விடுதலைப்போராட்டம் பற்றியும் இதனுடன் கலைஞர்கள் இணையவேண்டிய கடமை பற்றியும் காலப் பணியில் கலைஞர்கள் ஆற்ற வேண்டிய பங்கு பற்றியும் ஏனைய கலைஞர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

✍ எமது விடுதலைப் போராட்டமானது வெறுமனே 'மண்மீட்பு' எனும் வரையறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. சகல தளைகளிலிருந்தும் அனைத்து நுகத்தடிகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ளும் போராட்டமாகவே பரிணமித்துள்ளது. இந்த மண்ணின் கலைஞன் என்பவன் முதலில் இந்த மண்ணின் மனிதன். எனவே எனக்கான, எனது குடும்பத்துக்கான எனது விடுதலைக்கான இந்த போராட்டத்தின்பால் பற்றுடன் செயற்படவேண்டும். இந்தப் போராட்டத்தில் எல்லோருக்குமே கணிசமான பங்கு உண்டு. இன்று தமிழ்த் தேசிய உணர்வு என்பது உலகளாவிய ரீதியில் வளர்ந்து நிற்கிறது. இந்த நோக்கில் இங்கு வாழும் கலைஞர் அனைவரும் இந்த விடுதலைப் போராட்டத்திற்காகவே தங்கள் வாழ்வின் மணித்துளிகளை செலவழித்து வருகின்றனர்.

கலைஞர்கள் மட்டுமல்ல, எவருமே இந்த விடுதலைப் போராட்டத்தின் நிழலில் இருந்து ஒதுங்க முடியாது.

♥



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மொழிபெயர்ப்புச் சிறுகதை

**தௌபிக் பை(F) யாட்**

ஆங்கிலம் வழியாகத் தமிழில்

சு. மகேந்திரன்

**இஸ்ரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தைப் பகைப்புலமாகக் கொண்ட இக்கதையின் ஆசிரியர் தௌபிக் பை(ஊ) யாட்டின் எழுத்தில் எப்போதும் நம்பிக்கை ஒளிவீசும் தன்மை காணப்படும். மனித உணர்வுகளைப் பரந்த அளவிலும், ஒரு திசையறி கருவி போன்றும் புரிந்துணர்வுடன் சொல்பவை அவரது ஆக்கங்கள்.**




# அவரது பெண் குதிரை

"அப்பா உண்மையிலேயே குதிரையை விற்றுவிடத்தான் போகிறீர்களா?" எனப் பையன் கேட்டான். பூ குசேன் ஆச்சரியத்துடன் மகனைப்பார்த்தார். தனது முடிவுகளை இட்டு குடுபத்தவர்கள் கேள்விகள் கேட்பதை ஒருபோதும் அறிந்தவரல்ல அவர். வளைவுடன் கூடிய மண்டபத்தின் முன்னே நின்றுகொண்டிருந்த பையனின் கண்களில் அப்போதும்கூட அந்தக் கேள்விக்குரிய கவலை தெரிந்தது. தகப்பனாரது கண்டிப்புக்குரிய முகத்திலிருந்து பார்வையை விலக்கி குதிரையின் காலடியில் தனது கண்களைக் கொண்டு வந்தான் பையன். தனக்கு நடக்கப்போவதை அறியாத குதிரை, தீவனத்தொட்டியின் பக்கமாக திருப்தியுடன் நின்றுகொண்டிருந்தது. தன் தகப்பனாருக்குப் பயந்து சாவதை தனக்குள் வெறுத்தபடி "பக்கத்து வீட்டுக்காரரான ஓம் அகமட்டிடம் அம்மா பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். குதிரையின் நிமித்தம் அம்மா அழுதுகொண்டிருந்தாள்" என்றான் பையன்.

பூ குசேன் வேறெங்கோ பார்வையைச் செலுத்தினார். வார்த்தைகளாலோ அல்லது சைகையாலோ அவர் பதில்கூறவில்லை. தனது அங்கியின் கீழ்ப்பகுதியைக் கொண்டு பை போன்ற ஒன்றை மிகவும் இயல்பான முறையில் செய்து கொண்டார். ஒரு மண் சாடியில் இருந்த பார்லியை அதனுள் கொஞ்சம் கொஞ்சமாக நிரப்பினார். அந்தச் சாடி மண்டபத்திலிருந்த சுவரிலே, வயிறு பெருத்த ஒரு பானையின் வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. வெளியே முற்றத்தில் தனக்காக காத்திருந்த தனது சகோதரிகளிடம் பூ குசேனது மகனான ஹசன் சென்றான். அவர்களுக்கு மௌனமான முறையில் தனது துக்கத்தை தெரிவித்தான். அவனது நொந்த இதயத்தின் எண்ணங்கள் அவர்களது கண்களுக்குள் பாய்ந்தன. அந்த எண்ணங்கள் இறுக மூடியிருந்த அவனது இதழ்களில் கசப்புடனும் துக்கத்துடனும் தெரிந்தன.

வேண்டியளவு பார்லியை தனது அங்கியில் எடுத்துக்கொண்ட பின் அவர் தீவனத்தொட்டியின் பக்கமாகச் சென்றார். குதிரையின் கனைப்பை துக்கத்துடன் கவனித்துக்கொண்டிருந்தார். சிறிய துணிக்கைகளாக்கப்பட்டிருந்த வைக்கோலை பார்லியுடன் கலந்தார். இன்று அவர் அதிக சிரத்தையுடன் வழமையைவிட சிறிதளவு அதிகமாகவே பார்லியை தீவனத்தில் கொட்டியிருந்தார். நகரத்தை அதிகாலையில் குறித்த நேரத்திற்கு முன்பே அடைந்துவிடவேண்டும். குதிரையின் முன்னே சிரமமான பயணம் ஒன்று உள்ளது. அது விரைவாக வேறு நடக்கவேண்டும். அப்படியானால்தான் அவர் சந்தையை தவறவிடமாட்டார் அல்லது குதிரையை விற்கமுடியாமல் கூடப் போய்விடலாம்.

அவர் தீவனத்தொட்டிக்குப் பக்கத்திலிருந்த சிறிய பாதையை அடைந்தார். அவரது உடையில் ஒட்டிக்கொண்டுவிட்ட வைக்கோல் துகள்களை அகற்றினார். ஒரு சிறிய



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

துவாரத்திலிருந்து கால்நடைக்கான முரட்டு "பிரசை" எடுத்தார். அதனால் குதிரையின் அழகிய சாம்பல் நிற மயிர்மேல் ஒட்டிக்கொண்டிருந்த குதிரையின் கழிவுகளைத் தட்டிவிட்டார். குதிரையின் பின்புறமாக "பிரஸ்" சென்றபோது அவரது கை திடீரென நின்றது. அதிசயிக்கத்தக்க விதத்தில் ஒருவித கூதலுடன் கூடிய நடுக்க உணர்வு அவரது நரம்புகள் எங்கும் பரவியது. அதிக அறிவுபூர்வத்துடன் கூடிய துக்கம் அவரைக் கலக்கிவிட்டது. அவரது கைகள் மிகுந்த அன்புடன் அந்த இளம் பிராணியை வருடிக்கொண்டிருந்த செயலினால் ஏற்பட்ட உணர்வு, அவர் தனது பிள்ளைகளை ஏதேச்சையாக தண்டிக்கும்போது, அவரை உலுப்பி எடுக்கும் வேதனையை ஒத்திருந்தது. அவரது கண்களில் இருந்த சந்தோசம், சடுதியாக மறைந்தது. தேவலோகத்தவன் போன்ற தோற்றம் கொண்ட அவரது அழகிய முகத்தில் திகைப்புடன் கூடிய துக்கத்தின் சாயல் மெதுவாக ஆனால் ஆழாக உண்டாகியது.

துக்கத்துடனும் இரக்கத்துடனும் அநதப் பெண் குதிரையின் உப்பியிருந்த வயிற்றுப் பகுதியை



அவரது பார்வை ஊடறுத்தது. அவரது கை சந்தோசத்துடன் மிருதுவாகஅதன் வயிற்றை ஊறுசெய்யாத வகையில் தடவியது. அதற்குள் இருப்பது ஓர் அழகான சாம்பல் நிற பெண் குதிரைக் குட்டியாகக்கூட இருக்கலாம். அது தனது அழகிய தாயின் பிம்பமாக இருக்கக்கூடும். அவரது பிள்ளைகள் அந்தக் குதிரை ஒரு சாமபல் நிற பெண்குட்டியைப் போட்டால், எவ்வளவு சந்தோசம் அடைவார்கள். அதிலும் முக்கியமாக ஹசன் இந்தக் குதிரை ஒரு பெண் குட்டியைப் போடும் தினத்தை எதிர்பார்த்தபடியே இருக்கின்றான். அந்தப் பெண் குதிரைக் குட்டி 'அபு—சைட் எல்ஹெலவி' என்ற புகழ்பெற்ற அரேபியத் தலைவன் வைத்திருந்த, சாம்பல் நிறபெண் குதிரையைப் போல் வரக்கூடும். அல்லது அவர்கள் முன்பு வைத்திருந்த 'அன்தரா' வர்க்க கலப்பின, அட்டைக் கரிநிறத்தையுடைய ஆண் குதிரை போன்றும் அமையலாம். ஹசன் அந்தக் குதிரையின் பெயராகிய 'எல் அப்கார்' என்ற பெயரையே இந்தக் குட்டிக்கும் வைக்கக்கூடும்.

குளிர் காலங்களில் தணற் தட்டினைச் சூழ இருந்துகொண்டு பாட்டா சொல்லும் துரிதம் நிரம்பிய குதிரைகளின் கீர்த்தி மிக்க கட்டுக்கதைகளை ஆனந்தமாக எல்லோரும் கேட்பார்கள். அக் கதைகளில் வரும் குதிரைகளைப் போல் இக் குதிரைக் குட்டியும் பின் நாட்களில் வரக்கூடும். இந்தப் பெண் குதிரைக் குட்டியை அவர் வளர்த்து அதில் ஹசன் சவாரி செய்வதைப் பார்ப்பதில் எவ்வளவு ஆவலாக இருக்கிறார். இந்தக் குட்டியே (இரண்டாண்டுகளுக்குப் பின்) ஹசன் வைத்திருக்கப் போகும் அவனது முதலாவது குதிரையாக அமையும். அப்போது அவன் பலம்பொருந்திய ஒருவனாக இருப்பான். இல்லை முன்பு அதனது தாயை அடக்கி ஆண்டதுபோல் அவரே இந்தப் பெண் குதிரைக் குட்டியையும் ஒடுக்கி அதன் பின்பே மகனை அதன்மேல் சவாரி செய்ய அனுமதிப்பார். அவரைப்போன்ற அனுபவப்பட்ட ஒருவராலேயே குதிரைகளின் சேட்டைகளுக்கும் உதைகளுக்கும் ஈடுகொடுதேது அவற்றை அடக்கி அவற்றின் மேல் முதன் முதலாகச் சவாரி செய்ய முடியும்.

அவரது முரடான உள்ளங்கைகள் மெதுவாக குதிரையின் தொங்கிய





www.tamileelamarchive.com

நிலையிலிருந்த வயிறைத் தடவிச் சென்றன. அதனது தொடைக்கும் உப்பியிருந்த வயிற்றுக்கும் இடைப்பட்ட சந்திப்பு வந்தது அவரது கைகள் தானாகவே நின்றன. அவரது தடித்த உலர்ந்த விரல்கள் தயக்கத்துடன் குதிரையின் மடிவரை சென்றன. மிகுந்த வீக்கத்துடன் இருந்த மடி அவரை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. அது வெடிக்கும் நிலையில் இருப்பதுபோல் இருந்தது. திரும்பவும் மடியை மெதுவாக வருடினார். எழுந்து சென்று தீவனத் தொட்டியை அணுகினார் தீவனத்தை மீண்டும் கிளறினார். அவரது முகத்தில் மிகப்பெரிய துன்பம் தெரிந்தது.

அவரது கவலை நிரம்பிய கண்களில் நீர் பெருகியது. என்ன குட்டி பிறந்தால்தான் என்ன? அவர்தான் குதிரையை நாளைக்கு சந்தையில் விற்கப்போகிறாரே. அவரது மூத்த பையன் ஹசனின் குரல் அவரது காதுகளில் எதிரொலித்தது. "அப்பா உண்மையிலேயே குதிரையை விற்றுவிடத்தான் போகிறீர்களே?" அவர் அழுத்தத்துடன் தீவனத் தொட்டியின் விளிம்பில் இருந்துகொண்டார். நடுங்கும் அவரது விரல்களிடையே ஒரு சிகரட் உருண்டு கொண்டிருந்தது. சிகரட்டின் புகை இன்பத்தால் துன்பத்தின் அளவு குறையும் என எண்ணினார்.

கோடுகள் போட்ட தனது மேலங்கியின் ஓரத்தால் கண்களைத் துடைத்துக் கொண்டார். தனது மனைவியான "ஓம் குரேசன்" எங்கே தன்னைக் கண்டுகொண்டு விடுவாளோ எனப் பயந்தார். இன்பத்திலும் துன்பத்திலும் அவருடன் பங்குகொண்டு மிகவும் நொந்துபோய் இருக்கும் அவளுக்கு இது மேலும் துன்பத்தையே உண்டாக்கும். அவரது முழுக் குடும்பத்துக்கும் எப்படிப்பட்ட கெட்ட விதி ஏற்பட்டிருக்கிறது. நாளை இந்தக் குதிரையை விற்றுவிடவேண்டும். இறப்பதற்கு முன்பு இருக்கும் ஒரே நம்பிக்கை இதுதான். இந்தக் குதிரை இருப்பதால் என்ன பயன்தான் இருக்கிறது. அவரது நிலம் பறிமுதலாகிவிட்டது. இரு சிறிய துண்டுகள் மட்டுமே மீதமாக இருக்கின்றன. அதிலிருந்து கிடைக்கும் வருமானம் அவர்களது உணவுத் தேவைக்குப் போதுமானதாக இல்லை. விடுபட்டுப்போன நிலத்தை மீளப்பெற அவர் எடுத்த நடவடிக்கை எதுவுமே எந்தவித பலனையும் தரவில்லை. எவருமே அவரது பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இது சட்டம் என அவர்கள் சொன்னார்கள். அவர் உண்மையிலேயே அந்த நிலங்களை இழந்துதான் விட்டாரா? இவ்வளவு இலகுவாக அது நடந்துவிட்டதா? தனது காலத்தை சிறுசிறு துண்டுகளாக வாங்கி நிலத்தைச் சேர்ப்பதில் செலவிட்டாரே, அவரது கடின உழைப்பில் உண்டான வியர்வை இந்த மண்ணிலுள்ள புழுதியை நெடுங்காலமாக நனைத்து வந்திருக்கிறதே.

இந்த நிலத்தின் புழுதியிலிருந்து வெளியேறும் ஆவியில் அவரது உடம்பின் உயிர்ப்பூ மணம் நிறைந்திருப்பது அவர்களுக்குத் தெரியவில்லையா? அவர்களுக்கு இதுபற்றி எல்லாம் எப்படித் தெரியப்போகிறது. அவர் மண்வெட்டியை ஒருநாள்கூட ஏந்தவில்லைபோல் அல்லவா தெரிகிறது? பச்சைப் பசேல் என்றிருக்கும் அந்த நிலங்களுக்குள் அவர் இனிமேல் ஒருபோதும் ஊசலாடவே முடியாதா? அவரது இதயம் சந்தோச உணர்வுகளுக்காக ஏங்கிக்கொண்டிருந்தது. அவரது செழிப்புடன் கூடிய வாழ்வு, வசந்தகால இளம்காற்று வீசும் இத்தருணத்தில் ஆட்டம் கண்டுகொண்டிருந்தது. அவரது வயல்கள் மஞ்சள் நிறமாகி பின் பொன் வர்ணத்தில் இனிமேல் ஒருபோதும் பொழியாதோ? அவரும் மனைவியும் பிள்ளைகளும் இனிமேல் கோதுமையின் கதிர்களை வெட்டுவதற்காக அரிவாளுடன் வயல்களுக்குச் செல்லவே மாட்டார்களா? தனது தானியக் களஞ்சியங்களை இனிமேல் எதனைக் கொண்டு அவர் நிரப்பப்போகிறார்? அவரைச் சுற்றி இருக்கும் உலகத்தில் சந்தோசத்தை எதுதான் ஏற்படுத்தப்போகிறது? போரடிக்கும் களத்தில் நின்றபடி எப்போதுதான் அவரது பிள்ளைகள் ஆடிப்பாடப்போகிறார்கள். இவையெல்லாம் அவரிடம் இருந்து பறிக்கப்பட்டேவிட்டதா? ஒரேயடியில் அவரது முழு வாழ்வும் அவரிடமிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. இது எப்படி





www.tamileelamarchive.com

நடந்தது? அவர் இப்போது என்னதான் செய்யமுடியும்? அவர் நரை விழுந்து கிழவராகியும் விட்டார். அவரது குழந்தைகளை முன்னுக்கு கொண்டுவர யார்தான் இருக்கிறார்கள்? நிலத்தைக் கொத்தி அளவிடமுடியாத வகையில் பயிரினங்களை உண்டாக்குவதைத் தவிர, வேறு என்னதான் அவருக்குத் தெரியும்? இல்லை அப்படி எதுவும் நடைபெறவிடக்கூடாது. இயற்கையின் சுழற்சிக்கேற்ற வகையில் வாழ்வதற்கு, அவர் அவர்களுக்கு அமைத்துக்கொடுத்த அந்த வழியிலேயே அவர்கள் வாழவேண்டும். இந்தப் பெண் குதிரையை அவர் விற்கக்கூடாது. எவரும் அதனை அவரிடமிருந்து எடுத்துவிட அனுமதிக்கவும் முடியாது. அவரது நிலத்தில் ஒரு சாணைக்கூட அவர் இழக்க முடியாது. அதனை தன்னுடன் வைத்திருக்கவே அவர் எவ்வளவோ போராடியிருக்கிறார். போரின் கொடிய காலத்திலும் கூட அதனை அவர் விட்டுப்பிரிந்தவரல்ல. அப்போது பலர் தமது நிலத்தை விட்டு அகன்றனர். அவரது கடைசி மூச்சு இருக்கும்வரை, அதனை அணைத்துக்கொள்ள வேண்டும். அதனை விட்டுவிடுவது என்பது கூடவே கூடாது. அவர் அந்த நிலத்துக்காக இறுதி வெற்றி வரும்வரை போராடவேண்டும்.

அவரது மனைவி இரவு உணவுக்காக அழைப்பது, அவருக்குக் கேட்டது. அவர் எழுந்து வளைவுடன் கூடிய தனது வீட்டின் மண்டபத்தை அடைந்தார். அதற்கு முன் குதிரையின் பின்பகுதியை அன்புடன் தட்டிக்கொடுத்துவிட்டு நடந்தார். அவர் வீட்டின் கதவை தாளிடும்போது, அந்தக் குதிரையைப்பார்த்து நம்பிக்கையுடன் சிரித்தார். மனைவி இருந்த இடத்தை அடைந்தபோதும் அதே புன்னகை அவரது இதழில் தெரிந்தது. அவரது மனைவி பிள்ளைகள் புடைசூழ மேசையில் அமர்ந்திருந்தாள்.

நடுநிசியின் போது தாயும் பிள்ளைகளும் கனவுகளில் அமிழ்ந்திருக்க, அரர் வீட்டுக்கு வெளியே தீவனத்தொட்டியின் அருகே இருந்தார். அப்போதுதான் பிறந்த சாம்பல் நிற பெண் குட்டியை மிகவும் பிரயாசையுடன் நெஞ்சுடன் வைத்து அழுத்திக் கொண்டிருந்தார். அவரது இதழ்கள் தாய்க் குதிரையின் தலையின் மேல் மென்மையான முறையில் பதிந்தன. அந்தப் பெண் குதிரையும் அந்த முத்தத்தையும் பெற்றுக் கொள்வதற்காக, தனது தனது தலையை சிறிதளவு தாழ்த்திக் கொண்டது.

# ஆன்மாவிலிருந்து எழுகிறது பேரலை

ஆதிலட்சுமி சிவகுமார்

என் ஆன்மாவிலிருந்து
எழுகின்றது பேரலை
இதை எப்படி நீ செவிமடுப்பாய்?
எனக்குள் இருக்கும் உனது விம்பம்
எழுகின்றது
பத்திரிகைச் செய்தி
வானொலி அறிவிப்புக்கள்
எதிலுமே நீ இல்லை!
உன்னுடைய
அன்பு
புன்னகை
புரிந்துணர்வு
எல்லாவற்றையும் சுமந்தபடி
திசைகளெங்கும் திரிந்தேன்!
மண்-
காற்று-
நீர்-
நெருப்பு - எது உன்னை விழுங்கியது?
தெரியவில்லை!



நான் அழுதேன்
இதயத் தசைகள் நைந்துபோகிறவரை
தாடை எலும்பு கரைந்து போகிறவரை
அழுதேன்!
நீ செத்துப் போயிருக்கவேண்டும் என்று
பிரார்த்தித்தேன்!
நீ செத்துப் போவதை விரும்பினேன்!
தற்செயலாய் வெட்டிய மலக்குழியுள் நீ!
(அது நீயாகத்தான் இருக்கவேண்டும்)
மண்டை ஓடு-
கை எலும்பு-
க்கைவளையல்-
உன்னை அடையாளமுறும்
அடையாளங்களாக!
அண்டவெளியில் அலைந்து திரிந்த
உன் இறுதிநேர அலறல்
என்னை வந்தடைந்துவிட்டது!
என் ஆன்மாவிலிருந்து
எழுகிறது பேரலை!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தமிழாக்கம்
தென்றல்

# ஆபிரிக்கப் பெண்களும் போராட்டமும்...

ஆண் பெண், முரண்பாடே மிகவும் அடிப்படையானது என்ற பதிலை, அகில ரீதியான பெண்களின் கீழ் நிலைப்படுத்தல் எனும் விவாதம் கூறியுள்ளது முதலாளித்துவ உலகின் வரையறைக்குள் ஆண்களுடன் சம உரிமைகளைப் பெறுவதற்காக போரிட வேண்டியிருப்பது தன்னளவிலேயே காத்திரமான குறிக்கோளுடையது என்று சில பெண்ணியக்கவாதிகள் நம்புகின்றனர். நீதியற்ற முறையில் உரிமைகளையும், சலுகைகளையும் ஆண்கள் பறித்துக் கொண்டிருப்பதாக சில பெண்ணியவாதிகள் கருதுகிறார்கள். இப்படிப்பட்ட ஆண்களே பெண்களின் பிரதான எதிரிகள். அத்துடன் இவ் ஆண்பாலர்களின் பிரத்தியோகத் தனிச்சிறப்புரிமைகளாலேயே பெண்களின் வெற்றிகள் மறுக்கப்பட்டிருந்தன. இந்த கருதுகோள்களின் அடிப்படையில், ஆண்களின் ஒரு பகுதியாகவே பெண்களின் கீழ் நிலைப்படுத்தல் பார்க்கப்படுகின்றது.

உலகம் பூராகவும் பெண்கள் ஒரேமாதிரியான ஒடுக்கு முறையையே அனுபவிக்கின்றார்கள் என்ற எண்ணப்பாடு பெரும் சமமின்மைகளையும் வேறுபாடு களையும் களங்கப்படுத்துகின்ற ஒரு மேற்போக்கான ஒப்பீட்டுமுறையை பின்பற்றி வழிசமைத்துள்ளது. இக்குறிப்பிட்ட சமூக பொருளாதார வட்டத்திற்கு வெளியே பெண்களின் பிரச்சினைகள் பற்றி பார்ப்பதானது பிழையான விளக்கங்களையும் பொதுமைப்படுத்தலையும் உருவாக்குகின்றது. இன்றைய இந்த ஆபிரிக்க சமூகங்களின் முக்கியமான யதார்த்தம் ஆபிரிக்கர்களுக்கு தடைகளை விதித்துள்ள நவ காலனித்துவ மாகும். மனிதத்தன்மையிலும் பரந்துபட்ட ரீதியிலும் இக் கறுப்பினச் சமூகத்தை வளரவிடாமல் தடுத்தது இந்த நவ காலனித்துவமாகும். ஆகவே சமூகத்தில் இப் பெண்கள் தாங்கள் கொண்டிருக்கும் நிலை தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் பெண்கள் ரீதியிலேயே அவர்களுக்கு பொதுவானதாக இருக்கையில் பிரச்சினையில் அனேகமானவை அனைத்து ஆபிரிக்கத் தொழிலாளர்களுக்கும், குடியானவர்களுக்கும் பொதுவானதாகவே இருந்தது. ஆபிரிக்கர்களுடைய பொருளாதார முறைகளும் வெள்ளையர்களுடைய நவ காலனித்துவ அமைப்புக்களும், கறுப்பின பெரும்பான்மை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளத் தவறிவிட்டன. இவர்களுக்கு அப்போது ஆண் ஒடுக்குமுறையாளனாகவும், பெண் ஒடுக்கப்படுபவளாகவும் இருந்தமை பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை.

இதுபற்றி சமோரா மேச்சல் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்:—

"இந்தப் பகைமை மிக்க முரண்பாடு ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே இருக்கின்ற விடயமல்ல. பெண்களுக்கும் சமூக ஒழுக்கங் களுக்கும் இடைப்பட்டதாகும். சுரண்டப்பட்ட மக்களுக்கும் சமூக ஒழுக்கங்களுக்கும் இடைப்பட்டது. இவர்கள் சுரண்டலுக்குள்ளான வர்கள் என்ற உண்மை இவர்களுக்கு ஏன் சமூகத்தில் நல்ல தொழில்கள் வழங்கப்படவில்லை என்பதை விளக்குகிறது. பொருளாதார சமூக அரசியல் வாழ்வினை ஆளும் கோட்பாடுகளை செயற்படுத்துவதில் ஏன் விலக்கப்பட்டார்கள் என்பதனை விளக்குகிறது.

அவர்களுடைய நலன்களை நேரடியாக பாதிக்கப்பட்ட போதும் இக் கறுப்பின பெண்களுக்கு இக் கொடுமைகள் இழைக்கப்பட்டன. இதுவே இந்தப் பிரச்சினை மீதான குணாம்சம்.

சமூகத்தில் தீர்மானம் எடுத்தல் என்ற வட்டத்திலிருந்து அகற்றப்பட்டார்கள்.

வரலாற்றையும், குறிப்பாக ஆபிரிக்க மக்களின் போராட்டங்களைப் பின்னோக்கிப் பார்த்தோமானால் வல்லாதிக்கத்துக்கு எதிரான இப் போராட்டங்களில் பெண்களின் துடிப்புமிக்க பங்களிப்பு பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தமையைக் காணலாம். காலனித்துவ ஆட்சியாளரான சேர் ஈவ்லின் பேரில் கூட கென்யாவின் போராட்டத்தில் பெண்களின்



www.tamileelamarchive.com

பங்களிப்பை இல்லாமல் செய்வதாவது அதன் வீழ்ச்சியைக் கொண்டுவரும் என ஊகித்ததால் அவர் பெண்களின் முக்கியத் துவத்தை உணர்ந்துகொண்டார். சமூகத்தின் மிக ஒடுக்கப்பட்ட பிரிவினர் பெண்களே என்பதை நாம் ஏற்றுக்கொள்வோமானால், போராட்டத்தில் முன்னிலையில் பெண்களின் தலையீடு அவசியமானது மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக ஒடுக்கப்பட்ட பிரிவினரின் விடுதலையைப் பெற்றுத்தரும் போராட்டத்தின் வெற்றிக்கும் உத்தரவாதமானது என்று உணரலாம்.

இப்போராட்டத்தில் பெண் களின் உற்சாகமான பங்களிப்பு மிகவும் முதன்மைவாய்ந்தது. ஏனெனில் இப்பெண்கள் தங்களுடைய இயலுமை தொடர்பாக தாங்கள் கொண்டிருந்த கருத்துக்களை மாற்றிக்கொள்ள உதவிசெய்தது. இதுபற்றி ஆண்களும் எடுத்துவிளக்கியதோடு ஆண்கள் தொடர்பாக பெண்கள் கொண்டுள்ள மரபுரீதியான பிழையான கோட்பாடுகளையும் சுட்டிக்காட்டியது.

இந்த ஆபிரிக்க பெண்கள் தங்களுடைய கீழ்நிலைப்படுத்தல் பற்றியும், தங்களுடைய நிலையை மாற்றவேண்டும் என்றும் உணர்ந்திருந்தார்கள். ஆனால் இவர்களின் இந்த முயற்சியை நசுக்கி ஆதிக்கம் செலுத்திய சமூகம் இவர்கள் தங்களுடைய அபிலாஷைகளை வெளியிட தடைசெய்தது. அத்துடன் அவர்கள் போராட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றி சிந்திப்பதையும் தடுத்தது. மணமகள் கொள்வனவு, பலதாரமணம், கல்வியறிவிற்கு எதிரான கோட்பாடுகள், பெண்களுக்கான பாலியல் திருமணங்கள் போன்ற நடைமுறைகள் ஆபிரிக்க பெண்களின் பாதிக்கப்பட்ட நிலையை மீண்டும் உருவாக்கின. ஆகவே பெண்களை தங்கள் அடிமைத் தனத்திற்கு எதிராகப் போரிடுவதைத் தவிர்க்கின்றதும், அவர்களை எதிர்ப்பில்லாத வர்களாகவும் எதிராகவும் கொள்கைகளுக்கெதிராகவும் போராடவேண்டும் என்று கறுப்பினப் பெண்கள் உணர்ந்துகொண்டனர்.

பெண்களின் அரசியல் விழிப்புணர்வு உயர்த்தப்பட வேண்டும் என்பது அவசியமானது; அவர்கள் சமூக உற்பத்தி முறைகளில் பங்குபற்ற வேண்டும்; கலாச்சார மற்றும் விஞ்ஞான எதிர்வு கூறல்களைப் பெற்றுக்கொள்ளத்தொடங்கவேண் டும். இதனால்தான் உளவியல் ரீதியாக தங்களை ஒடுக்குகின்ற தடைகளை அவர்களால் தகர்த்தெறிய முடியும்.

ஆபிரிக்காவின் பிரதான பொருளாதார நடவடிக்கை விவசாயமாக இருந்தமையால் அதில் கூடியளவில் கடின உழைப்புச் செய்தவர்கள் பெண்களாகவிருந்தனர். ஆகவே இவர்கள்தான் இந்த விவசாய முறையை ஒழுங்குபடுத்திய, திட்டமிட்ட, ஒன்றிணைந்ததொரு விவசாய முறையாக மாற்றவேண்டிய தேவைக்கு உட்பட்டிருந்தனர். இதனால் கிராமிய அமைப்புக்களிலும் கூட்டுறவு அமைப்புக்களிலும் மற்றும் உற்பத்திக் குழுக்களிலும் பெண்கள் அங்கம் வகித்தனர்.

இவற்றுடன் இவர்கள் மேற்கொண்ட இந்த ஆயுதப் போராட்டத்தில் ஆபிரிக்கப் பெண்களுடன் சுவாப்போ ஆயுதக்குழுவினரும், நமீபிய மக்கள் விடுதலை இராணுவத்தினரும் தோளோடு தோள் நின்றனர்.

தென்னாபிரிக்கப் பெண்களின் இராணுவத் தன்மை பற்றி வின்னி மண்டேலா வெளியிட்ட "எனது ஆத்மாவின் ஒரு பகுதி" என்ற நூலில் அறியலாம். இவருடைய முன்னாள் கணவர் தான் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் முன்னாள் தலைவர் நெல்சன் மண்டேலா. இவர் தனது கணவருடன் சேர்ந்து போராடியவர். விசாரணையற்ற தடுத்துவைப்புக்களையும், நீண்டகால தனிமைப்படுத்தலையும் தொடர்புகொள்ளும் வசதிகளற்ற நிலையையும், காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளையும் இரகசியப் பொலிசாரின் கையில் அனுபவித்த கறுப்பினப் பெண்களின் எண்ணிக்கை அளவிட முடியாதது. இந்தக் கறுப்பினப் பெண்களே தமது உறுதிமிக்க போராட்டத்தின் மூலம் கொடிய காலனித்துவ ஆட்சி முறைக்கும் நிறவெறிக் கொள்கைக்கும் முற்றுப்புள்ளி வைத்தனர். இவ்வாறு ஒற்றுமையாக ஒன்றிணைந்து தியாகம் அர்ப்பணிப்பு ஆகியவற்றை நல்கியதன் மூலம் தங்கள் இலக்கை வென்று கொண்டே இப்போராட்டத்தை மேற்கொண்டமைக்கு இவர்களை... பாராட்டுதல் பொருத்தமாகும்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பயம் வேண்டாம்




இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

அது மெதுவாகத் தான் நகர்ந்து வந்தது. அது வந்த பாதை காட்டுப்பாதை. மனிதர்கள் உள்ள கிராமம் வரை இன்னமும் தூரம் இருந்தது. தான் துணிந்து வருவதாகக் காட்டிக் கொண்டாலும் அது தயங்கித் தயங்கித்தான் வந்தது. அதற்கு அதன் கால்களில் போட்டிருந்த இரும்புத் தகடுகள்தான் காரணமா? அது முறைத்து முறைத்து பாதையின் இருபக்கக் காடுகளைப் பார்த்தது. மரங்களின் உச்சிகளை எட்டி உதைத்தது.

அதனைத் தெருப் புழுதி தான் முதலிற் கண்டது. கண்டதும் வாலைச் சுருட்டிக் கொண்டு காட்டு மரங்களின் உயரத்தைத்தாண்டித் துள்ளியது. பிறகு அதனை விட்டுப் பிரிய மனமில்லாததுபோல் சோர்ந்து துவண்டு அதன் பின்னாலேயே அரைந்தது.



காட்டு மரக் கிளைகளில் இருந்த குருவிகள் அச்சங்கொண்டு ஒடுங்கியபடி எழுவானில் தெரிந்த சூரியனைச் சபித்தன.

"ஏய் சூரியனே! உலகத்துக்குப் பொதுவாக இருந்து என்ன பயன்?"

"இதுகளை ஏன் அரைய விடுகின்றாய்?" என்று சொல்ல நினைத்து மௌனம் சாதித்தன.

குரங்குகள் வசதியான மரக்கொப்புகளில் மறைந்தபடி வேவுபார்த்தன.

"ஐயைய்யோ ஆபத்து!" என்றது ஒரு பெருங்குரங்கு

"என்ன!"

"காடு தொலைந்தது!"

"ஏன்?"

"கைத்தடியைத் தேடித்தான் இது வருகின்றது. இத்தனை இடங்களும் திரிந்தும் இன்னமும் சரியான கைத்தடி கிடைக்கவில்லையாம்!"

"அப்ப மனிதர்களை இரட்சிக்க வரேல்லை"

குரங்குகள் குசுகுசுத்து குட்டிகளை அலேட்டாக்கின.

காட்டுப் பூக்கள் பொலிந்து நின்ற செடிகள் யௌவனம் துறந்தன. பூக்களின் நிறம் வெளிறி உருமாறிக்கொண்டன.

யௌவனம் துறக்கத் தவறிய செடிகளை ஏனைய செடிகள் கோபமாகப் பார்த்தன.

"எல்லோருக்கும் முடிவு ஒன்றுதானே! பிறகேன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யௌவனத்தைத் துறப்பான்?"

"அது உண்மைதான் ஆனால் எலும்புக் கூடாவது மானமுள்ளதாக மிஞ்சுமே!"

காடு தளர்ந்து வெட்டை ஒன்று வந்தது. வயல் வெளியாகப் பரவியது. ஆழமும் மனவிரிவும் கொண்ட பெருங்கவிஞனின் கவிவரிகள் போல நெற்கதிர்கள் துள்ளி விளையாடின.

வயலைப் பார்த்து அது நின்றது. மனிதர்கள் வசிக்கும் கிராமம் வரப் போகிறது என்ற ஆனந்தமா? அறுவடைக்கு முன் வந்துவிட்டோம் என்ற பெருமிதமா? புரியவில்லை.

தண்ணீர் கசிந்து கொண்டிருந்த டச்சுக் காலத்து மதவடியில் நின்று நிதானித்தது. கூடவே வந்த புழுதி ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது.

தண்ணீரில் சுதந்திரமாக ஒற்றைக் காலில் நின்ற கொக்குகள் தங்கள் சுதந்திரத்தை தக்கவைத்துக் கொள்ள வாய்க்கால்களின் ஓரம் மருவிக்கொண்டன. தண்ணீர் குடிக்கப்போகிறதா? முகம் கழுவப் போகிறதா? என மருளும் கண்களால் அவை பார்த்தன.

ஒன்றும் நடக்கவில்லை. அது மெதுவாக அந்தப் பாதையைத் தின்று பார்த்தது. பாதையின் இடது பக்கத்தை பின் வலது பக்கத்தை பிறகு நடுப்பக்கத்தை சப்பிக்கொண்டது.

ருசி பிடிபடவில்லையோ அதன் கொழுப்பேறிய நாவுக்கு பதமாக வரவில்லையோ அது பாதையைத் தின்பதை நிறுத்திக்கொண்டு நகரத்தொடங்கியது.

மதவினைத் தாண்ட மதவு பொரித்த அப்பளமாக நொருங்கிப்போனது. கொக்குகள் அதை வியப்போடு பார்த்தன.

"வானம்பாடி நிற்கிறதா பார்!" ஒரு கொக்கு கேட்டது. மற்றது தண்ணீரைப் பார்த்தது.

'அட மடச் சகோதரமே! வானத்தைப் பார்! வானலைகளைப்பார்!"

மற்றது கழுத்தை மடக்கி முறித்துப்பார்த்தது.

'காற்று உதைத்து வீசி மதவினை உடைத்துவிட்டது என்று அவை வானலை ஊடாகச் சொல்லப் போகின்றன' நமட்டுச் சிரிப்போடு முதல் கொக்கு சொன்னது.

வயல் வெளிகளில் ஆங்காங்கே சில மூளையுள்ள மனிதர்கள் தெரிந்தார்கள். வயலைப்பார்த்துப் பெருமைப்பட்டுக்கொண்டு எப்போது கதிர்களை அறுவடை செய்யவேண்டும் என்பது தொடர்பாகவும் அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தனரே தவிர பாதை ஊடாக அது நகர்வதை அவர்கள் காணவில்லை.

வானில் நகர்ந்த சிறிய முகிற்கூட்டம் ஒன்று தயங்கியபடி பாதையில் அது நகர்வதை மனிதர்களுக்குச் சொன்னது தான், என்றாலும் அதனை மனிதர்கள் கவனிக்கவில்லை.

புழுதி வேகமாகச் சுழன்றது. காட்டில் இருந்தவை என்ன மாதிரிப் புரிந்துகொண்டன. சா! என்ன மனிதர்கள் இவர்கள்? என்று சலித்தது புழுதி.


மனிதர்களைக் கண்ட அது மீண்டும் நகர்வை நிறுத்தி, மனிதர்களைப் பார்த்து பதுங்கியது.

மனிதர்கள் கையில் மண்வெட்டி, கத்தி எதுவுமே இல்லை.

அது கைகளைத்தட்டியது. பிறகு கைகளை அசைத்து, 'போங்க, போங்க' என்றது. கரகரத்த சத்தம் காற்றில் கலந்தது.

காற்று அதனைப் பக்குவமாகக் காவிக்கொண்டு மனிதர்களிடம் சென்றது. நலுங்காமல் குலுங்காமல் கொண்டு சென்றால் 'அது' ஏதாவது நன்மை செய்யும் என்று!

மனிதர்கள் அப்போது தான் பாதையைப் பார்த்தார்கள்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாதையை மறைத்துக் கொண்டு அது உணவு எடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

'ஐயய்யோ' என்றான் ஒருவன், 'மோசம் போய்விட்டோம்!' மற்றவன்

'போங்க, போங்க எண்டு தானே சொல்லுது போவம்'

'அப்பிடி இல்லை. போங்க போங்க எண்டால், வாங்க வாங்க எண்டுதான் கருத்து! வா போவம்'

"எனக்குப் பயமாயிருக்கு"

"எனக்குந்தான்"

'இப்படியே போறதா?'

'வேறை'

'பொறு' என்றான் ஒருவன்.

வேட்டி மடிப்புக்குள் இருந்து ஒன்றினை எடுத்தான். அது முகமூடி. கறுப்பும் வெள்ளையும் கலந்து நரை நிறங் கொண்ட அதனை எடுத்துப் போட்டான்.

'அடடா அற்புதமான மூளை!' என மற்றவர்கள் சந்தோசப்பட்டார் கள்.

'எங்கள் மடிக்குள் இருப்பது எங்களுக்கா ஞாபகம் வரவில்லை என்றபடி எல்லோரும் தங்கள் தங்கள் முகமூடிகளைப் போட்டுக்கொண்டார்கள்.

'அப்பாடா' என்றபடி வயல் வரம்புகளின் வழியே நடக்கத் தொடங்கி பாதையை அண்மித்தார்கள்.

'நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு போகாதே, சற்று வளைந்துபோ!' என்றான் பின்னால் வந்தவன்.

"அவசரப்படாதே அதை அதுவே செய்யும்" நடுவில் போனவன் சொன்னான்.

வயல் வரம்பால் பாதையில் ஏற, முகமூடிகளை சரி செய்ய முனைந்தார்கள். ஆனால் அது அதற்கிடையில் அவர்களின் முகங்களோடு இயல்பாகி விட்டது.

'அட பாரன், ஒரு மாலை இல்லை!'


'ஓமடாப்பா'

'ஒரு வெள்ளைப் புறாவைப் பறக்கவிட்டிருக்கலாம்!'

இந்த உரையாடல்களை அது கேட்டதாகத் தெரியவில்லை. அதற்கு முன்னே கணிசமான தூரத்திற்கு அப்பால் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

'உங்கள காப்பாற்ற நாம் வந்திற்றம்' இப்ப சந்தோசம்தானே?' அது கேட்டது.

மனிதர்கள் இடப்பக்கமாகவும், வலப்பக்கமாகவும் தலைகளைப்



படபடவென ஆட்டினார்கள்.

'உங்கட ஆக்கள் எல்லாரிலையும் நாம சந்தோசம். எல்லாரும் போளினில பள்ளிக்கூட கிறவுண்சுக்கு போகணும் சரியா! அங்க போறது. போனா நாங்க சாப்பிட புல்லுத்தாறது, தண்ணி தாறது, படுக்க சாக்கு தாறது இனிக்குறை இருக்காது. போங்க போங்க போளின்ல போங்க'

அவர்களின் முகமூடி முகங்கள் சிரித்தன. கைகூப்பி விடைபெற்று முன்னே நடக்கத்தொடங்க, அதுவும் பின்னால் நகரத்தொடங்கியது.

நெடு நெடு மரங்கள் எதையோ பறிகொடுத்தவை போல சரிந்து நிழல் தராமல் இருந்தன. மரங்களின் கீழே இருக்கப் பயந்த மனிதர்கள் அப்பால் விரிந்த மனமாய்ப் பரந்திருந்த விளையாட்டு மைதானத்தில் சூரியனின் உச்சிக் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

வடக்குப் புறத்தே இருந்த பாடசாலைக் கட்டிடங்களின் மெழுகு சீலைக் கூரைகள் காற்றில் முட்டிமோதிக்கொண்டிருந்தன.

'வந்திட்டுது வந்திட்டுது இனி நிரந்தரக்கூரை போடும். ஆனால் படிக்க பிள்ளைகள்தான் இருக்கமாட்டார்கள். இருப்பவர்களையும் படிக்கவிட மாட்டுது!" என்றது காற்று இரகசியமாக.

மேற்குப் புறத்தே இருந்த கோயிலின் முன்னே தனித்து அமர்ந்திருந்த அது அமீபாக்கள் போல பிரிந்து, பிரிந்து, அந்தப் பெருவெளி எங்கும் விரியத்தொடங்கியது.

மனிதர்கள் மாத்திரம் எங்கெல்லாமோ இருந்து வந்து சொல்லி வைத்த மாதிரி மைதானத்தின் நடுவே படியத் தொடங்கினர், அழுது பழக்கமில்லாத சின்னப் பிள்ளைகள் கூட சிரிக்க மறந்து விழிகளால் பேந்திக்கொண்டிருந்தன.

மனிதர்கள் சேரச் சேர விளையாட்டு மைதானத்துக்கு மாத்திரம் பயம் வலுக்கத் தொடங்கியது. என் கொள்ளளவு இவர்களைத் தாங்குமா? இடம் காணாவிட்டால் என்னை ஆழமாக அல்லவா வெட்டும்.

மைதானம் கவலைப்பட்டுக்கொண்டிருக்க, மைதானத்தின் ஒரு புறத்தே கிடாரங்களில் கஞ்சி தயாராகிக் கொண்டிருந்தது. அதை மனிதர்களுக்கு விநியோகிக்க வைக்கப்பட்டிருந்த அந்தக் கோப்பைகளை இவ்வளவு நுட்பமாக, சின்னதாக செய்திருக்கின்றார்களே என்றுதான் நடுக்கத்தினிடையேயும் மனிதர்கள் கதைத்தார்கள்!

▽



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழ மங்கையர்க்கு ஈடில்லை

தமிழீழம் பெற்றெடுத்த மங்கையே!
தரணியிலே உமக்கு ஈடில்லை!
தாயகம் வென்றிட புறப்படு!
தழுவும் நெஞ்ச மிணைத்து;
அணுக் கருவி யெடுத்து
வெடி குண்டினை இசைத்திடுவோம்!
புவி மேனி கொழும்பினிலே
புகழ் தமிழ் விடுவோம்!
ஏய்ச்சும் மனிதன் காணின்
எட்டி மிதித்திடுவோம்
இனி வரும் யுகத்தில்
இன்ப நிலவுக்கும் செல்வோம்! -எங்கள்
இதய வீணை புலிக்கொடியும்
இமயமாய் நட்டு வருவோம்!
அறிவையர் ஆய்ந் தெடுத்த
விண்கலத்தில் தவழ்ந்து திரிவோம்!
அண்டத்தில் கோள்பல கண்டிடுவோம்!
உலகமே! உமக்கு முன்னால்;




செ. விஸ்வநாத பாரதி
கோயம்புத்தூர் இந்தியா




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 646 2885

www.tamileelamarchive.com